# மணி பல்லவ



அ.மு.ப

942·111
பரம
SL | PR

# மணி பல்லவம்

அ. மு. பரமசிவானந்தம்

தமிழ்க்கலை இல்லம்
சென்னை-30

ஆகஸ்டு—1958

விற்பனை உரிமை :

பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை 1.

முத்தமிழ் அச்சகம் காஞ்சீபுரம்.

# முன்னுரை

சென்ற ஆண்டு கோடை விடுமுறையில் யாழ்ப்பாண நண்பர்கள் ஒரு கல்லூரி விழாவிற்கு 'வருக' என்று அழைத்தார்கள். சென்று ஒரு வாரம் தங்கினேன். பல இடங்களைக் கண்டேன். காணும் அதே வேளையில் பல கருத்துக்கள் உள்ளத்து எழுந்தன. அவற்றின் தொகுப்பே இந்நூல்.

தங்கிய நாட்களில் ஒரு நாள் மணிபல்லவத் தீவிற்குச் சென்றோம். அது பற்றிய தனிக் கட்டுரை இதில் இடம் பெற்றுள்ளது. அதன் சிறப்புப் பற்றியே இந்நூலுக்கு அப்பெயர் இட்டேன்.

இறுதியில் கல்லூரி விழாவில் நான் பேசிய கம்பராமாயணத்தை ஒட்டிய 'மங்கையர் இருவர்' என்ற சொற்பொழிவு கட்டுரை வகையில் அமைகின்றது. எனவே, ஒரு கிழமையில் அங்கு யாழ்ப்பாணத்தில் கண்ட, கேட்ட, பேசிய பொருள் பற்றிய சுருக்கமே இந்நூலாகிறது. பயண நூல் பல்கிப் பெருக வேண்டுமெனும் இந்நாளில் அவ்வரிசையில் இந்நூலும் இடம் பெறும் என நினைக்கின்றேன்.

இந்நூல் வெளிவர உதவி புரிந்த அறிஞர் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களுக்கு என் நன்றி உரியதாக!

தமிழ்க்கலை இல்லம்,
சென்னை-30.
31-8-58

**அ. மு. பரமசிவானந்தம்.**

# வான நெடுந்தெருவில்

அன்று (24-4-57) மீனம்பாக்கம் விமான நிலையத்தில் கூட்டம் அதிகமாய் இல்லை. காலை 10 மணிக்கு மேல் இரண்டொரு விமானங்களே வந்து போவதால் அவற்றில் பயணம் செய்பவரும், அவர்களை வரவேற்கவோ, வழியனுப்பவோ வருவோரும் மிகக் குறைந்த அளவிலேதான் இருந்தனர். எனினும், விமான நிலையம் தனது தலை நிமிர்ந்த தோற்றத்தில் ஏற்றம்பெற்று விளங்கிற்று. நாங்கள் குறித்த நேரத்தில் விமான நிலையம் போய்ச் சேர்ந்தோம். இலங்கையிலிருந்து வந்து உடனே இலங்கை நோக்கித் திரும்பிச்செல்லும் அந்த விமானத்தில் (AIR CEYLON) நான் யாழ்ப்பாணம் செல்லவேண்டியிருந்தது. வான்வழிப் பயணம் என்றால் அஞ்சி அஞ்சி நின்ற காலம் ஒன்றிருந்தது. 'எந்த வேளையும் எதுவும் நிகழலாம்!' என மக்கள் அஞ்சியிருந்தார்கள். ஏன்? இன்றும் சிலர் அந்த நிலையில் உள்ளதை அறியலாம். எனினும், $1\frac{1}{2}$ நாளைக்குமேல் (சுமார் 34 மணி நேரம்) ரயிலில் இடிபட்டுச் செல்லும் கொடுமையினும், யாழ்ப்பாணத்துக்கு $1\frac{1}{4}$ மணி நேரத்தில் வான் வழிச் செல்லும் இன்பப் பயணத்தை யார்தான் விரும்பமாட்டார்! 'இரயில்தான் என்ன வாழ்கிறது!' என்று கூறும் ஒலியும் நாட்டில் குறைந்துவிடவில்லை. ஆம்! சென்ற இரண்டோர் ஆண்டுகளில் 'தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்' போன்ற வண்டிகளுக்கு ஏற்பட்ட கொடுமைகளும் 'பத்ராஜல'ப்படகுக் கொடுமையும் கண்டும் கேட்டும் பழக்கப்பட்ட இந்த மனிதனுக்கு

அவற்றினும் வான் வழிப்பயணம் பயம் குறைந்தது என்றுதானே தோன்றும்? ஆம்! குற்றம் யார்மேலதாயினும், அதுபோன்ற கொடுமைகள் நாகரிக நாடுகளில் நடந்துகொண்டேதான் இருக்கின்றன. மற்றும் இந்தக் காலத்தில் மக்கள் 'துணிவு உள்ளம்' வான்வழிப் பறப்பதைத் தூண்டுகிறது. உலகமெங்கணும் விரைந்து செல்லும் வான ஊர்திகள் நாள்தோறும் வானில் வட்டமிட்டுக்கொண்டுதானே இருக்கின்றன! இந்தப் பூமண்டலத்தை விட்டுச் சந்திரமண்டலம் முதலிய பிற மண்டலங்களுக்குத் தாவிச்செல்லும் 'ராக்கெட்டு' விமானங்கள் வட்டமிடத் தொடங்கும் இந்த நாளில் வான்வழிப் பறக்க அச்சமும் உண்டோ? எனவே, வான ஊர்திகளின் எண்ணிக்கையும் பறக்கும் தொலைவும் நாள்தோறும் பெருகிக்கொண்டே இருப்பதில் வியப்பென்ன?

இந்த எண்ணச் சூழல்களுக்கிடையில் நான் மீனம்பாக்கம் நிலையத்தில் என் யாழ்ப்பாணப் பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலானேன். பயணச்சீட்டு முன்னமே பெற்றிருந்தமையின் நேராக என் சாமான்களை எடுத்துச்சென்று நிறுத்து எடை குறித்துக்கொண்டேன். பின் மருத்துவரை நாடி அவரிடம் காட்ட வேண்டியவற்றைக் காட்டிவிட்டேன். இறுதியாகச் சுங்கச் சாவடியினர் என் சாமான்களைப் பார்வையிட்டனர்; அவற்றைப் பார்த்ததற்கு அடையாளமாக ஏதோ குறியை இட்டனர். அதே வேளையில் 'புலி பொறித்துப் புறம் போக்கி'ய பழங்காலச் சோணாட்டின் கடற்கரைப் பட்டினமாகிய காவிரிப்பூம்பட்டினத்துச் சுங்கச் சாவடிகள் என் நினைவிற்கு வந்தன. இப்போது தமிழ் நாட்டில் சுங்கச் சாவடிகள் பலவிடங்களில் இருந்தாலுங்கூட,



அவை எல்லாம் இந்திய அரசாங்கத்தின் நேர் மேற்பார்வையில் இருக்கின்றன அன்றோ! ஆகவே, தமிழர் இலச்சினையாகிய புலியும் மீனும் வில்லும் பொறிக்கப்பெறுவது எங்கே! அப்படியே தமிழர் கையில் அந்த அதிகாரம் இருப்பினும், அவர்களும் அந்த இலச்சினையை எங்கே கொண்டுள்ளார்கள்? 'தமிழ் நாடு' என்று தம் தாய்நாட்டை வழங்கக்கூட முடியாத அவல நிலையிலேதானே தமிழர்கள் வாழ்கின்றார்கள்! அவர்கள் புலி பொறித்துப் புறம் போக்கும் பொருள்கள் யாவை? சென்னை நகராண்மைக் கழகத்தார் அண்மையில் தமது கொடியில் இம்மூன்று பழைய இலச்சினைகளையும் பொறித்துச் சென்னையைத் தமிழர் தலைநகரம் என்று நிலைநாட்டிக்கொண்ட செயல், தமிழினம் இன்னும் செத்துவிடவில்லை என்பதைக் காட்டுகிறது. இந்த நினைவுகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்துகொண்டே வந்தன. எனினும், நான் அங்குச் செய்ய வேண்டிய செயல் முறைகள் அனைத்தையும் முறையாகச் செய்துவிட்டு, வெளியில் வந்து நின்றேன். அதே வேளையில் இலங்கையிலிருந்து வந்த விமானமும் தரையில் இறங்கியது.

பத்தரைக்குத் திரும்பப் புறப்பட வேண்டிய அவ்விமானம் சிறிது காலம் தாழ்த்தே மறுபடி கிளம்பும் என அறிந்தேன்; என்னை வழியனுப்ப வந்திருந்தவர்களோடு சிறிது நேரம் பேசிக்கொண்டேயிருந்தேன்; குறித்த வேளையில் விமானத்தில் சென்று அமர்ந்தேன்; வழியனுப்ப வந்தவரிடம் விடை பெற்றுக்கொண்டேன். விமானத்தில் பாதி இடத்துக்கு மேல் காலியாகவே இருந்தது. பொதுவாகக் கல்லூரி விடுமுறையின் போதும், கல்லூரி

திறக்கும் போதுந்தான் கூட்டம் அதிகமென்றும், மற்ற வேளைகளில் அத்துணை நெருக்கம் இராதென்றும் கூறினர்கள். வாயிற்கதவு மூடப்பட்டது. சரியாக 10–40க்கு விமானம் மீனம்பாக்கம் நிலையத்தை விட்டுக் கிளம்பிற்று.

விமானம் உடனே நேராக வானிலே பறப்பதில்லையன்றே! சிறிது தூரம் தனது இரு உருளைகள் மீதே நிலத்தில் சுற்றிச் சுற்றி வந்தது; பிறகு வான் வழிக் கிளம்பிற்று. வானில் கிளம்பிய விமானம் வட்டமிட்டுப் பின் தெற்கு நோக்கிப் புறப்பட்டது. மிகுந்த உயரத்தில் செல்லவில்லையாதலால், கீழே இடங்கள் நன்கு தெரிந்துகொண்டே இருந்தன. சென்னை நகரின் எல்லையைத் தாண்டிய உடன் சிறு சிறு குன்றுகளும் கிராமங்களும் தெரிந்தன. சிறிது நேரத்துக்கெல்லாம் கோவளத்தின் உப்பளம் தெரிந்தது. இந்திய அரசாங்கத்தார் இன்றும் உப்பின் மீது வரி விலக்குச் செய்யாத நிலை எனக்குப் பட்டது. இந்த உப்பின் வளந்தான் பழங்காலக் கோவின் வளமாகி—அரசர் செல்வமாகி—அதன் பெயராலேயே இவ்வூர் 'கோவளம்' என்று பெயர் பெற்றதோ என்று எண்ணினேன். இந்த உப்பின் மீது வரியை நீக்கி, நாட்டு மக்களுக்குப் பெருஞ் சுமையைக் குறைக்க வேண்டுமென்று இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் அண்ணல் காந்தி தண்டி நோக்கி நடந்த காட்சி என் மனக்கண்முன் வந்தது. எனினும், கோவினுக்கு—ஆளும் அரசியலுக்கு—வளம் நல்கும் அவ்வுப்பு வரியை உரிமை நாளிலும் நாம் செலுத்த நேர்ந்ததை நினைத்துக் கொண்டே கண்ணை மூடினேன்.



அதே வேளையில் அந்த விமானத்தில் விருந்தோம்பும் நங்கை என் முன் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவரை ஏதோ கேட்டது என் காதில் விழுந்தது. உடனே நிமிர்ந்து நோக்கினேன். அவள் அவரை 'ஒயின், பிராந்தி, விஸ்கி, வேண்டுமா?' என்றாள். அவர் தலை அசைத்தார். அடுத்து உட்கார்ந்திருந்த என்னிடமும் வந்து அந்த விமான நங்கை அவ்வாறே கேட்டாள். நான், 'இன்னும் தமிழ் மண்ணின் மீதுதானே பறக்கின்றோம்? எங்கள் எல்லையைக்கூடக் கடக்கவில்லையே! இதற்குள் இவை வேண்டுமா என்று கேட்கிறாயே! எங்கள் நாட்டில் இவை இல்லை. எங்கள் நாடு இவை வற்றிய நாடு (Dry State) என்பது உனக்குத் தெரியாதா?' என்றேன். அவள் உடனே, 'ஓ! தெரியும். உங்கள் நாடு வற்றிய நாடு என்பது கீழே பார்த்தாலே தெரிகிறதே!' என்று வரண்ட தமிழ் மண்ணைக் காட்டினாள். ஆம். கோடையில் கொதிக்கும் 11 மணி வெயிலில் அதன் வற்றிய நிலை நன்கு புலப்பட்டது. அதற்குள் அவள், 'நான் வேடிக்கையாகச் சொன்னேன்; குறைகூறவில்லை. இங்கே நாங்கள் இவற்றைத் தேவையானவருக்குக் கொடுப்பது வழக்கந்தான்,' என்றாள். அதற்குமேல் நான் என்ன சொல்ல இருக்கிறது! எனக்குப் பின்னல் உட்கார்ந்திருந்த ஒருவர் அந்தப் பெண் சொன்ன அத்தனையும் வாங்கிக் குடித்தார் என நினைக்கின்றேன். அவரும் அவர் நண்பரும் அரைமணி நேரத்தில் இரண்டு மூன்று புட்டிகள் காலி செய்துவிட்டார்கள். இறங்கும் போது ஏழு எட்டு ரூபாய்க்குக் குறையாது கொடுத்தார்கள் எனக் கண்டேன். தமிழ் நாட்டின் மண்மீது பறக்கும் காலத்திலேயே குடியராகும் காட்சி வியப்பாகத்தான் இருந்தது!

விமானம் நிற்கவில்லை; விரைந்து பறந்தது. கீழே பார்த்தேன். பழம்பெருநகரமாயிருந்து, இன்று பாழ்பட்ட கடன்மல்லை தெரிந்தது. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் கடற்கரைப் பட்டினமாய்ப் பல்லவர் வளம் பெருக்கி நின்ற அந்த மாமல்லபுரம், இன்று சிற்றூராய்க் காட்சி தந்தது. ஊரிலிருந்து அந்தக் கடற்கரைக் கோயிலுக்குச் செல்லும் சிறு பாதையும் கடற்கரைக் கோயிலும் நன்கு தெரிந்தன. சிற்பங்களும் பிறவும் தெரியவில்லை. எனினும், அக் கடற்கோயில் வழி என் எண்ணம் நெடுந்தொலைவு பறந்தது. நான் பறக்கும் வேகத்தினும் என் எண்ணத்தின் வேகம் பெரியதன்றோ! ஆனால், ஒன்று தான் வேறுபாடு. நான் விமானவழி முன்னேக்கிப் பறந்துகொண்டேயிருந்தேன். நேரமும் திசையும் முன்னேக்கிச் சென்றன. ஆனல், என் எண்ணமோ, பின் நோக்கிச் சென்றது. ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் இம்மாமல்லபுரம் பெற்றிருந்த சிறப்பென்னே! 'கச்சிக் கிடந்தவன் ஊர்கடன்மல்லை' என்று ஆழ்வாரால் பாடப்பெற்ற அந்த இறைவன் அதோ அந்தச் சிறு கோயிலில் எழுந்தருளியிருக்கிறன். ஆனல், அந்த நகரின் நிலை என்னுயிற்று! ஊர் நிலை கெட்டதோடு நின்றுவிட்டதா என்ன! பேருமல்லவா கெட்டுவிட்டது! நாடுகளைச் சாடி வெற்றி கொண்டு, மாமல்லனுய் விளங்கிய அந்த நரசிம்மன், தன் நினைவாகக் கலை வளர்த்த அந்தக் கலைக்கோயில்—மாமல்லபுரம் — இன்று மகாபலிபுரமாக அல்லவா காட்சி தருகிறது! 'மகாபலி சக்கரவர்த்தி' என்ற புராண அசுர அரசனேடு சம்பந்தப்படுத்திப் பேசும் அளவுக்கல்லவா அதன் பெயர் மாற்றமடைந்தது! இதை நினைக்கும் போது, தமிழ்



நாட்டு ஊர்கள் பல தம் நிலையும் பேரும் கெட்டுக் குலைந்து நிற்கும் காட்சியும் மனக்கண்முன் தெரிந்தது. ''கலங்கள் இயங்கும் மல்லை' எனப் போற்றப் பட்ட அந்தத் துறைமுகக் காட்சி எங்கே? எங்கே? எங்கே?' என்று கேட்டது என் உள்ளம். இன்றைக்குக் கலங்களுக்கு எச்சரிக்கை செய்வதற்கென ஒரு 'கலங்கரை விளக்கம்' அமைக்கப்பட்டுள்ளதன்றோ! கப்பல்கள் அருகில் வரின் பாறைகளில் மோதிச் சேதம் நேரிடும் என அது எச்சரிக்கிறது போலும்! ஆம். கடலுள் மாலவன் கோயில் இரண்டு மறைந்து விட்டனவாம். 'விரிந்து இலங்கையை நோக்கி இருந்த பெருநகரம்' என்று சீனயாத்திரிகனல் அன்று போற்றப்பட்ட பெருநகரம், கடலுள் ஆழ்ந்து இன்று சிற்றூராய்க் காட்சி அளிக்கிறது. இந்த எண்ணங்களுக்கிடையில் வான ஊர்தி விரைந்து தெற்கு நோக்கிச் சென்றுகொண்டேயிருந்தது. என் உள்ளத்து வெம்மையைப் போக்கத்' தானே என்னவோ, அவ்விமான மங்கை எனக்குக் குளிர்ந்த பானத்தைக் கொண்டுவந்து கொடுத்தாள்.

குளிர்ந்த பானத்தைப் பருகிக் கீழே நோக்கினேன். விமானம் அதிக உயரத்தில் பறந்து சென்றமையின் கீழே உள்ள இடம் திட்டமாகத் தெரியவில்லை. கடற்கரையை ஒட்டியே விமானம் சென்றதால் ஒருபுறம் நீலக்கடலும் மறுபுறம் நிலமும் நன்கு தெரிந்தன என்ருலும், எந்த இடத்திற்கு மேலே போகிறேம் என்பது தெரியவில்லை. ஆகவே, அந்த விமான மங்கையைக் கேட்டேன். அவள் ஏறக்குறையப் பாதித்தூரத்துக்குமேல் வந்தாகிவிட்டதென்றும், கீழே தெரிவது பெரும்பாலும் தரங்கம்பாடியை ஒட்டிய கடற்கரையாய் இருக்கும்

என்றும் கூறினாள். நான் எட்டிப் பார்த்தேன். நிலப் பரப்பில் ஒருகோடு தெரிந்தது. அக்கோடு கடலோடு கலப்பதையும் பார்த்தேன். அதுதான் காவிரி கடலோடு கலக்கும் காட்சியோ என எண்ணினேன். வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரியும் அதன் கிளையாய கொள்ளிடமும் இந்தக் கோடையில் வற்றிய கோடுகளாகத்தான் காட்சி அளிப்பன. அவை கோடுகளாய்த்தே தோன்றினும், அக்கோடுகள், வரலாற்றை எவ்வளவு தூரம் ஊடுருவிக் கிழித்து என் உள்ளத்தைத் தூண்டிவிட்டன என்பது என்னால் சொல்ல இயலவில்லை. நான் பறக்கும் உயரத்திலிருந்து தமிழ் மண்ணைக் காண முடியாதபடி வெண்ணிற மேகங்கள் மறைத்திருந்தன. அம்மேகங்களுக்கு மேல் நான் மேகவாகனனாய் வான் வழிச் சென்றுகொண்டிருந்தேன். அதே வேளையில் என் உள்ளம் நேராக என் கீழ் உள்ள கடல் அடியைத் துழாவிக்கொண்டிருந்தது.

ஆம்! இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இக்காவிரி கடலொடு கலக்கும் இடத்தில் சிறந்திருந்த காவிரிப்பூம்பட்டினம் எங்கே? மருவூர்ப் பாக்கமும் பட்டினப் பாக்கமும் இருவகையாகப் பிரிந்து எல்லா ஏற்றங்களையும் பெற்றுப் பெருமையுற்று விளங்கிய அந்தப் பூம்புகார்ப் பட்டினம் எங்கே? எட்டுத்திக்கிலுமிருந்து பிறநாட்டவரெல்லாம் வந்து கூட்டு வாணிபம் புரிந்து நாட்டு வளத்தைப் பெருக்கிப் பண்டமாற்றுச் செய்து பயன் பெற்ற அந்த அழகிய கடற்கரை நகரமெங்கே? சோழ மன்னன் கரிகாற்பெருவளத்தான் சிறக்க வீற்றிருந்து செம்மை தவறாது கோலோச்சி நின்ற அந்தக் கொற்ற வாழ்வின் தலைநகர் எங்கே? சதுக்க



மும் சாலையும் சோலையும் சூழலும் நெருங்கி நிறைந்து வெம்மை மாற்றி வேனிலைத் தண்ணியதாக்கி விழா வாற்ற நல்ல சூழ்நிலையை உண்டாக்கித் தந்த அந்தப் பட்டினம் எங்கே? எங்கே? எங்கே?

இவ்வாறு என் எண்ணம் நீண்டுகொண்டே சென்றது. ஆம்! இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சிறக்க இருந்த அந்தப் பெருநகரத்தைக் கடல் கொள்ளை கொண்டது என்பதை இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன; வரலாறு பறை சாற்றுகிறது. அந்த ஊர்—காவிரிப்பூம்பட்டினம்—இன்று ஒரு சிற்றூராய் அங்கு ஒருபுறத்தே அதன் பண்டை வாழ்க்கையை நமக்கு நினைவூட்டிக்கொண்டிருக்கிறது. அந்தப் பெருநகரம் கடலுள் அழிந்துவிட்டது. அதை ஆழ்கடலுள் ஆழ்ந்து தேடிப் பார்க்கவேண்டுமென்று தமிழர்களெல்லாம் விரும்புகின்றார்கள். ஆனால், அந்தப் புதைபொருள் ஆராய்ச்சி செய்யும்–பழைய வரலாற்றைத் துருவி ஆராயும்–பகுதி தமிழர் கையில் இல்லையே! அது மத்திய அரசாங்கத்துக்கு உட்பட்ட பகுதியாயிற்றே!

‘கடவுள் மாநகர் கடல்கொளப் பெயர்ந்த
வடிவேற் றடக்கை வானவர் போல
விரிதிரை வந்து வியன்நகர் விழுங்க
ஒருதனிப் போயினன் உலக மன்னவன்.’ (மணி.25:201-204)

என்று இந்தப் பெருநகர் அழிந்த வகையினையும் இதனை ஆண்ட மன்னவன் போன தனிமையையும் நல்ல உவமையைக்காட்டி உலகுக்குக் காட்டுகிறது மணிமேகலை. ஆம்! அந்த உண்மையை அறிந்து ‘தேடியாவது பார்க்கலாமே!’ என்று சொல்லுவாரையும் காணோம்.

எண்ணம் நீண்டது. என்றாலும், விண்வழி விமானம் சென்றுகொண்டே இருந்தது. திடீரென நிலப்பகுதியின் ஒரு மூலை தெரிந்தது. அங்கிருந்து கடல் மேலைத்திக்கில் நெடுந்தொலைவு புகுந்தது. தமிழ்நாட்டின் நிலப்பரப்பும் கடலுக்கு இடங் கொடுத்து விலகிவிட்டது. ஆம்! அந்த விலங்கிய கொடுமைதானே கடல்மல்லை குறைய, பூம்புகார் அழியக் காரணமாயிற்று? மண்ணும் நீரும் மட்டுமன்றி, தமிழனே—ஆம்—இம்மண்ணில வாழும் மனிதனே 'செல்விருந்தோம்பி வருவிருந்து' பார்த்துப் பார்த்துத் தன்னையே மற்றவருக்கு அன்புக் காணிக்கையாகவோ, அடிமையாகவோ, அன்றி அடைக்கலமாகவோ கொடுத்துக் கொடுத்துத் தானும் கெட்டு, தன் மொழி, கலை, நாகரிகம் பண்பாடு அனைத்தையும் இழந்து வாடி வதைகின்றான். அன்று மானம் வரின் வடக்கிருந்து உயிர் துறந்த அத்தமிழனே, இன்று மானம் இழந்து மதி கெட்டு வடக்கு நோக்கி வழிபார்த்துத் தன் வாழ்வை வளர்த்துக்கொள்ள வேண்டிய நிலைக்கு வந்து விட்டான்! இவ்வாறு எண்ணிக்கொண்டே இருக்கையில் மேலைப்பக்கம் தெரிந்த தமிழ் மண் மறையலாயிற்று. அதுதான் வேதாரணியம் என்றும், அதுவே கோடிக்கரையாய் உள்ளது என்றும் அறிந்தேன். அந்த நினைவிலேயே திருமறைக்காடு எப்பது வேதாரணியம் என மாறிற்று என்பதை நினைக்க மறக்கவில்லை என் நெஞ்சம். தமிழன் இப்படி ஊர் கெட்டு, பேர் கெட்டு, உற்ற பல பண்பாடுகளும் நல்ல நாகரிகங்களும் கெட்டு நலிவுறுகிறானே என்று எண்ணிக்கொண்டேயிருக்கும் அதே வேளையில் மேலையில் தெரிந்த நிலப்பரப்பு மறைந்தது; நீலக் கடல் காட்சியளித்தது. அனைத்தையும் தன் வெம்மை தாங்கிய ஒளிக்கற்றைகளால் தோற்றுவித்தும் மாற்றியும் அழித்தும் வருகின்ற அந்த வெங்கதிரோன் வானவீதியில் உச்சக்கோட்டைத் தொட்டுக்கொண்டிருந்தான்.



மேலைப்பக்கம் தோன்றிய கடற்காட்சியை விட்டுக் கீழ்ப்பக்கம் திரும்பினேன். உடனே கரை கண்ணுக்குப்பட்டது. நான் திகைத்தேன்! 'ஒரு வேளை விமானமே திசை மாறிவிட்டதா! நமக்கு அது புரியவில்லையா!' என்றெல்லாம் நினைத்தேன். உச்ச நிலையில் உள்ள சூரியனாலும் திசை காட்ட முடியவில்லை. 'நாம் சற்று முன் வரை பார்த்த அந்த நிலப்பரப்புத்தான் விமானம் திசை மாறியதால் இந்தப் பக்கம் வந்துவிட்டதா!' என ஐயுற்றேன். நல்ல வேளை, என் ஐயம் நெடுநேரம் நிற்கவில்லை! பக்கத்தில் இருந்தவர், தெரிவது யாழ்ப்பாணக் கரை என்றும், விரைவில் இறங்கவேண்டுமென்றும் கூறினர். அதற்கேற்றாற்போல, விமான நங்கையும் அனைவரையும் பாதுகாப்போடு இருக்கக் காப்புக் கட்டினை (Belt) அணிந்துகொள்ளச் சொன்னாள். கீழ்த் திசையில் தெரிவது யாழ்ப்பாணந்தான் என்று நிச்சயித்தேன். பன்னிரண்டு மணியைத் தொட்டுக் கொண்டிருந்த அந்த விமானக் கடிகாரமும் கரை தட்ட வேண்டிய நேரம் வந்துவிட்டது என்பதை நினைப்பூட்டிற்று.

இப்படி ஒரு பக்கம் தமிழ்க்கரை மறைய, அதற்கு அடுத்து யாழ்பாணக்கரை தோன்றிய அந்நிகழ்ச்சியை நினைத்தேன். 'இதை முன்னமே யாராவது நினைத்துப் பார்த்ததுண்டா?' என்று கேட்டது என் மனம். 'ஏன் பார்த்ததில்லை?' என்ற

பதிலும் எழுந்தது. ஆம். இந்த இரு கரைகளையும் இணைத்து நல்ல நீதியை மக்களுக்குப் புகட்டும் ஒரு பாடல் என் நினைவுக்கு வந்தது.

உலகில் பற்றற்று வாழ்பவரே பரமனை அடைவர் என்பது எல்லாச் சமயங்களும் கண்ட உண்மை. 'ஒரு வேலைக்காரன் இரண்டு எசமானருக்கு வேலை செய்ய முடியாது,' என்பது விவிலிய நூலில் உள்ள வாக்கியம். உலகப்பற்றிலே உழன்று அதே நிலையில் ஆண்டவனையும் பற்ற முடியாது என்பதுதான் சமயங்களின் சாரம். உலகில் உழன்றாலும், அதில் பற்றுக் கொள்ளாது, உள்ளத்தை அவ்வுலகப் பொருள்களுக்கு உரிமையாக்காது, பற்றற்று வாழ்தலே இறை வாழ்வின் தொடக்கம் என்பதைக் கூறாத சமயத் தலைவர் உண்டா? அந்தப் பற்றற்ற வாழ்வில் பரமன் அடி கிடைப்பது ஒரு புறம் இருக்க, உலகில் சுய நலம் ஒழிந்து, யான் எனது என்னும் செருக்ககன்று, நாட்டாரெல்லாம் நல்வாழ்வு வாழ வழி ஏற்படுமல்லவா! ஆகவே, அந்த வாழ்வை நல்கும் இந்தச் சமய உண்மையைத் தள்ளிவிட முடியுமா?

இந்த உண்மையைப் பல வேறு சமயத்தவரும் பல வேறு வகையில் விளக்கிவிட்டுச் சென்றுள்ளனர். நம் நாட்டிலே துறவை அதிகமாக வற்புறுத்தும் நூல்கள் இடைக்காலத்தில் எழுந்தன. அவற்றுள் இப்பற்று விட்டு இறைவன் பாதத்தைப் பற்ற வேண்டிய அவசியம் பலவாகப் பாரித்துப் பேசப்படுகின்றது. 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்று மிகச் சுருக்கமாகச் சொன்னார் நம்மாழ்வார். வள்ளுவர்,



'பற்றுக பற்றற்றான் பற்றினை ; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.'

என்று அழகாகப் பாடிச் சென்றார். இவ்வாறு இறையருள் பெற, உலக பாசம் அல்லது பற்று அல்லது அவாக் கெடுதல் அவசியமானது என்று சுட்டிக் காட்டியதைப் பின் வந்த சமயத் தலைவர்கள் தத்தம் புராண வாயிலாகவும், அவற்றுள் காட்டும் உவமை வாயிலாகவும் விளக்கிவிட்டுச் சென்றுள்ளார்கள். மனம் உலகப் பற்றைப் பற்றி நிற்பதும், பின் அப்பற்றை விடுவதும், விட்டதும் அப்படியே இடையீடு இன்றி இறைவனைப் பற்றிய பற்று உண்டாவதும் இயற்கை. இந்த இயல்பை ஒரு புலவர் ஒரு பயணத்துக்கு ஒப்பிட்டுக் காட்டுகின்றார். தமிழ் மண்ணிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மிகுபழங் காலந்தொட்டுச் சிறு தோணிகளும், கட்டுமரங்களும், படகுகளும், ஏன்--கலங்களுங்கூடச் சென்றுகொண்டிருந்தன. நாடுகளுக்கிடையில் ஏற்பட்ட நெருக்கடிகள் இன்று அந்த நிலையை வளர விடவில்லை. பழங்காலத்தில் இருந்த போக்கு வரத்து இன்று இல்லை. காரணம் என்ன? இரு நாட்டுக்கும் இடையில் ஏற்பட்ட மனக்கசப்பும், வீண் புகைச்சலுந்தான். அவற்றுடன் சுங்கச் சட்டங்களும் அவற்றின் வழி எழும் சோதனைக் கட்டங்களும் சேர்ந்துகொண்டன.

இக்காலத்தில் அத்துணை வெளிப்படைப் போக்கு வரத்து இல்லையாயினும், பண்டைக் காலத்தும் இடைக்காலத்தும் சிறு மரக்கலங்கள் இரு கரைக்கும் தாராளமாய்ச் சென்று வந்துகொண்டிருந்தன. அதை வணிகர் அறிந்ததோடு புலவரும் அறிந்திருந்தனர். எப்படி? அந்தக் கப்பல் ஓட்டத்தை உவமை கூறும் வகையில் என்னலாம்.

'மகாராசா துறவு' என்பது காலத்தால் மிகப் பிந்திய ஒருநூல்; துறவை வற்புறுத்தும் ஒருநூல்; அண்டமெலாம் கட்டி ஆளும் அரசன் அவ்வாழ்வால் தருக்காது, என்றும் துறக்கச் சித்தமாக இருக்க வேண்டுமென்பதை வற்புறுத்துவது. அதில் அதன் ஆசிரியர், மனம் உலகப் பொருளைப்பற்றி நிற்பதை விட்டால், உடனே எப்படி இறைவனைப் பற்றிய உணர்வு தோன்றும் என்றும் குறிக்கின்றார். அவ்வுணர்வை எப்படிக் காட்ட முடியும்? ஓர் உவமையைக் கையாண்டார். ஆம். அதுதான் இந்த யாழ்ப்பாணக் கப்பலோட்டம். உள்ளம் மாறும் நிலையினைக் 'கனமான யாழ்ப்பாணத்துக் கப்பல் ஓட்டம்' என்று உவமிக்கிறார். ஆம்! கலனிற் செல்லும் போது தமிழ் நாட்டுக்கரை தெரிந்து கொண்டே இருக்குமாம். ஆனால், ஒரு முனையில் நடுக்கடலில் இக்கரை மறையுமாம். உடனே மறுபுறம் நோக்கினால் யாழ்ப்பாணக் கரை தெரியுமாம். அது போல உலகப் பற்று இருந்துகொண்டே இருக்கும் வரையில் ஆண்டவன் பற்றைப் பெற முடியாது. ஆனால், இந்த உலகப்பற்று நீங்கினால், உடனே மனத்தை வெட்டவெளியாக இருக்க இறைவன் விடமாட்டானாம்; உடனே அந்த வெற்று இடத்தை நிரப்பத் தானே வந்து தலையளி செய்து ஆட்கொள்வானாம்.

இம்மகாராசா துறவு கதையாய் இருந்தாலும், இந்த நல்ல உண்மையைக் காட்டியதற்காக நான் இதைப் போற்றினேன். கடலில் செல்லும் போது அவ்வாறு காட்சி தருகிறதோ இல்லையோ, நான் அறியேன். ஆனால், இதோ வானவழியில் அந்த உண்மையைக் கண்ணாரக் கண்டேன். தமிழ் மண்



மறைய, யாழ்ப்பாண மண் தெரிந்தது. இந்தச் சிந்தனைக்கிடையில் நான் எவ்வளவு நேரம் இருந்தேனோ என நினைப்பதற்குள் விமானம் தரையில் இறங்கிக் கதவும் திறக்கப்பட்டு இறங்கும் படியும் இணைக்கப்பட்டுவிட்டது. மணி 12-15 ஆயிற்று. நானும், 'யாழ்ப்பாணம் வந்துவிட்டோம்' என்று நினைத்து இறங்கினேன்.

யாழ்ப்பாண விமான நிலையம் மிகச் சிறியது. சென்னை விமானத்தைத் தவிர வேறு விமானங்கள் அங்கு இறங்குவதில்லை போலும்! நான் இறங்கி உள்ளே சென்றேன். என்னை அழைக்க விமான நிலையத்திற்கு நண்பர் ஞானசம்பந்தனாரும் அவர்தம் தந்தையார் திருநாகலிங்கம் அவர்களும் வந்திருந்தார்கள். விமான நிலையத்தில் வேற்று நாட்டார் உள் புகவேண்டின் நடக்க வேண்டிய அத்தனை சடங்குகளும் ஒன்றன்பின் ஒன்றாக நடந்தன. மருத்துவர் கண்டார். சுங்கச் சாவடியினர் சோதித்தனர். போலீஸ் காவலர் குறித்துக்கொண்டனர். பிறகு 'செல்க' என விடை தந்தனர். அதற்கிடையில் நான் மூன்று நான்கு 'தாள்கள்' நிறைவு செய்து கொடுத்தேன். இலங்கையிலிருந்து அதிகப் பொருள் கொண்டுவர முடியாத காரணத்தால் நான் கொண்டு சென்ற இரண்டொரு பொருள்களையும், பணத்தையும் அவர்களிடம் காட்டிப் பதிவு செய்துகொண்டேன். மருத்துவர் நான் அங்குத் தங்கும் நாள் வரை இருநாளுக்கொருமுறை தங்கும் ஊரில் உள்ள மருத்துவரைக் காண வேண்டுமெனக் கட்டளையிட்டார். இலங்கையில் இது போன்ற அனுபவம் எனக்குப் புதியது அன்று. ஆகையினால், அவர் சொல்லியபடி நடப்பதாக இசைந்து வெளி வந்தேன். நண்பர்தம்

காரில் அமர்ந்தேன். அவர்கள் கொண்டு வந்த 'காப்பியை'க் கொடுத்தார்கள். பின்பு அவர்கள் வண்டியைச்செலுத்த, வண்டி வட்டுக் கோட்டையை நோக்கிச் சென்றுகொண்டேயிருந்தது. நான் கடல் தாவி யாழ்ப்பாணத்திலிறங்கித் தரையில் செல்லும் நெறியில் என் உள்ளமும் அமைதியாய் உடன் ஓடி வந்துகொண்டிருந்தது.

# யாழ்ப்பாணத்தில் முதல் நாள்

விமான நிலையத்திலிருந்து வட்டுக்கோட்டையை நோக்கி வண்டி சென்றுகொண்டே இருந்தது. எனக்கு இலங்கை புதியது அன்றேனும், யாழ்ப்பாணம் புதியதுதான். இலங்கைத் தீவு முழுவதையும் சுற்றிப்பார்த்த நான், எப்படியோ யாழ்ப்பாண எல்லையை மட்டும் மிதிக்கவில்லை. கண்டியும் கதிர்காமமும், இரத்தினபுரியும் காலியும், திரிகோண மலையும் அனுராதபுரமும், குளிர்ந்த நுவாரலியாவும் சிதைந்த பழைய சோழர்தம் தலை நகரங்களும், இலங்கைத் தலை நகராகிய கொழும்பும் நான் முன்னமே கண்டவை. அவற்றுளெல்லாம் இரண்டொன்றில் தவிர்த்து மக்களின் வாழ்விலும் பிறவகையிலும் பெரும்பாலும் யாதொரு வேறுபாடும் காணவில்லை என்னலாம். மக்கள் பெரும்பான்மை பேசும் மொழி சிங்களம். சமய நெறியோ பௌத்தம். பழக்கமும் வாழ்க்கை முறைகளும் பெரும்பாலும் மேல்நாட்டு வாழ்க்கை நிலையைப் பற்றியன. இங்கோ, அனைத்திலும் வேறுபாடு என்பதை முன்னமே கேட்டறிந்துள்ளேன். நான் முன் இலங்கை சென்றபோது என் யாழ்ப்பாண நண்பர்கள் அங்கு வருமாறு வற்புறுத்தியும், எனது கல்லூரிப் பணிகளும் பிறவும் இடை நின்றமையின், அங்கே செல்லாது நேரே கொழும்பிலிருந்து வந்துவிட்டேன். இன்று அந்த யாழ்ப்பாண மண்ணில் சென்றுகொண்டேயிருந்தேன்.

யாழ்ப்பாணம் முழுக்க முழுக்கத் தமிழர் வாழும் நிலம் என்பது நான் அறிந்ததே. அதற்கேற்ப அங்குள்ள சமயமும் நிச்சயமாகப் பௌத்தமாய் இருக்க வழி இல்லை என்பதும் தெரியும். தமிழ் நாட்டில் ஒரு காலத்தில் பௌத்தம் தனி ஆட்சி செய்து தலை நிமிர்ந்து வாழ்ந்து வந்தது என்பதற்கு வரலாற்றுச் சான்று உண்டேனும், இன்று தமிழ் மண்ணில் அச் சமயம் வாழவில்லை என்பது சொல்லவும் வேண்டுமோ! ஏன்? இந்திய நாட்டிலேதான் அச்சமயம் எங்குச் சிறக்க வாழ்கிறது? உரிமை பெற்ற இந்திய அரசாங்கச் சின்னமாகவும் கொடியாகவும் பௌத்தர்தம் தூபியும் ஆழியும் பொலிகின்றன என்றாலும், அப்பௌத்தம் இந்திய நாட்டில் கால் கொள்ள வில்லையே! ஆம்! புத்தர் போற்றி வளர்த்த சமயம், அவர் பிறந்த பொன்னாட்டிலேயே கால் கொள்ள வில்லை. எனினும், அண்டைநாடுகளாகிய இலங்கை, சீனா முதலிய நாடுகளில் அது இன்றும் ஆணை செலுத்துவது கண்கூடு. இங்கு இலங்கை முழுவதும் கால் கொண்டுள்ள அச்சமயம் யாழ்ப்பாணத்தில் நிலை பெறவில்லை.

யாழ்ப்பாணம் சைவர்கள் நிறைந்த பகுதி. சைவ ஒழுக்க நெறிகளும், வைதிக வாழ்க்கை முறைகளும் இன்றும் இங்கு நன்கு போற்றப்படுகின்றன. இந்த நாட்டில் பிறந்து சைவத்தையும் தமிழையும் ஒருங்கே வளர்த்த அறிஞர் பலர்; அறவோர் பலர். ஆறுமுக நாவலரைப் பற்றிச் சைவத்தமிழ் மக்கள் நினையாதிருக்க முடியுமோ? தாமோதரம் பிள்ளை, கனகசபைப் பிள்ளை போன்றோர் தமிழுக்கும் சமயத்துக்கும் செய்த தொண்டுகள் தாம் எத்தனை! அண்மையில் துறவு நெறி பற்றி வாழ்ந்து, தமிழ் இசை உலகையே சிறக்க



வைக்கும் யாழ் நூலை எழுதிச் சென்ற அடிகள் விபுலானந்தரைப் பற்றித்தான் தமிழர் சிந்திக்காதிருக்க முடியுமா? 'ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் தமிழர்' என்ற தலைப்பிலே முதன்முதலாகத் தமிழர் நாட்டு வரலாற்றை இலக்கியக் கண்கொண்டு ஆராய்ந்து வெளியிட்ட கனகசபைப் பிள்ளையின் தொண்டினை நினைக்கும் போது யாழ்ப்பாணமும் உடன் இணைந்து வருதல் இயல்புதானே? ஆம்! இவ்வாறு பண்டும் இன்றும் தமிழுக்குத் தொண்டு செய்த அந்த யாழ்ப்பாண மண்ணில் செல்வது மகிழ்ச்சியை விளைத்தது.

தமிழன் இப்போது தன்னுடைய பல நல்ல இயல்புகளையும், வாழ்க்கை முறைகளையும்—ஏன்?—பெயர்களையுங்கூட இழந்துவிட்டான் என்றே சொல்லவேண்டும். தமிழின் இசை நலத்தையெல்லாம் பரப்பிய பாணர், இன்று தமிழ் நாட்டில் இல்லை. கையில் சீறியாழையும் பேரியாழையும் பற்றிக் கொண்டு, மக்களும் மாக்களும்—புள்ளும் மரமுங் கூட—உய்த்து உணர்ந்து மகிழும்படி இசை எழுப்பி நின்ற அந்தப் பாணர்கள் பெயரால் பாடல்கள் உள்ளன. சிறுபாணாற்றுப்படையும், பெரும்பாணாற்றுப்படையும் தமிழ் இலக்கிய உலகில் சாவா வரம் பெற்றவை யன்றோ! ஆனால், அச் சிறுபாணரும் பெரும்பாணரும் எங்கே? தமிழ் நாட்டு மூலை முடுக்குகளிலும் அப்பாணர்களைக் காண முடியாதே! அவர்கள் இல்லாவிட்டாலும் அவர்கள் கைக்கொண்டிருந்த அந்த யாழ்கள்தாம் எங்கே? அவை எப்படி இருந்தன என்பதைத்தான் காட்ட முடிந்தது. யாரால்? யாழ்ப்பாணத்தார் ஒருவரால்—விபுலானந்த அடிகளால். யாழையும் அதை ஏற்று வாழ்ந்த பாணரையும்

மறந்துவிட்ட தமிழ் நாட்டுக்கு இந்த யாழ்ப்பாணம் பெயரளவிலாவது அவர்தம் பண்டைப் பெருமையை நினைவூட்டிக்கொண்டிருப்பதை நினைந்து மகிழ்ந்துகொண்டே சென்றேன். யாழ்ப்பாணத்திலே இன்று யாழும், அதை மீட்டும் பாணரும் இல்லையெனினும், அந்த யாழ்ப்பாணர் காலத்தில் நம் தமிழ் நாட்டில் நிலவிய பல நல்ல பண்புகள் இந்த நாட்டில் இன்னும் மறைந்துவிடவில்லை என்பதை ஓரளவு அறிந்துகொண்டேன். ஆம்! விமான நிலையத்தில் ஏற்றுச் சோதனையிட்டு அனுப்பிய நிலையும், என்னை அழைத்துச் செல்ல வந்த அன்பர் தம் பரிவும் அந்த உண்மையை நிலைநாட்டின. யாழ்ப்பாணம் மட்டுமன்றி, இன்னும் பல ஊர்களின் பெயர்கள் நல்ல தமிழ்ப் பெயர்களாகவே அமைந்திருந்த சிற்சில பகுதிகள் வழியாகக் கார் சென்றுகொண்டே இருந்தது. கொதிக்கும் வெம்மை விளைக்கும் கோடைக்கு யாழ்ப்பாணம் தமிழ்நாட்டைவிடத் தாழ்ந்துவிடவில்லை என்பதும் நன்கு புலனாயிற்று. அந்தக் கோடை வெயிலுக்கு இடையில் கார் வட்டுக்கோட்டையை நோக்கி விரைந்துசென்றுகொண்டேயிருந்தது.

வரண்ட யாழ்ப்பாணத்தை அலங்கரிப்பன பனைமரங்களே. பார்க்கும் இடமெங்கும் பனைமரங்களே வானுற ஓங்கி நின்றன. இடையிடையே வேறு சில மரங்களும் துணையாய் நின்றன. விமான நிலையத்தின் பக்கத்தில் பலப்பல இடிந்த கட்டடங்களும், சிதைந்த சாலைகளும் தெரிந்தன. அவையெல்லாம் போர்க்காலத்தே இவ்விமான நிலையம் ஒரு தளமாகப் பயன்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டன என்பதை விளக்கின. எத்தனையோ இலட்சக் கணக்கிலும்



கோடிக்கணக்கிலும் போர்க்காலத்தில் தற்காப்புக்காகவும், போர் தொடுப்பதற்காகவும் பணத்தைச் செலவு செய்ததை அறியாதார் யார்! சென்னைக் கடுத்த ஆவடியிலும் பிறவிடங்களிலும் இதுபோன்ற சிதைந்த கட்டடங்களைக் காண இயலுமே! இங்கு இந்தக் கட்டடங்கள் நெடுந்தொலைவு நெடுஞ்சுவர்களாகவும், சிதைந்த தரைகளாகவும் காட்சி அளித்தன.

யாழ்ப்பாணத்துச் சாலைகள் அகலமானவை அல்லவேனும், மேடு பள்ளம் இல்லாதவை; தார் இடப்பெற்றவை. ஆகவே, வண்டிகள் விரைந்து செல்லினும் ஆட்டமும் குலுக்கலும் இல்லாமற் செல்ல முடியும். பாதைகள் நேராகச் செல்லாது வளைந்து வளைந்து செல்கின்றன. ஆகவே, நல்ல பழக்கமுடையவர்களன்றி, மற்றவர் கார் முதலிய வேகமாகச் செல்லும் வாகனங்களை விரைந்து செலுத்துதல் இயலாது.

‘கார்’ விமான நிலையத்தை விட்டு நெடுந்தொலைவு சென்றுகொண்டேயிருந்தது. வழியிடை இரண்டொரு சிற்றூர்களைக் கடந்தோம். சிற்றூர்கள் என்றதும் நமது நாட்டில் வரிசையாகக் கட்டிய சிறுசிறு வீடுகளே முன்தோன்றும். இங்குச் சிற்றூர்களில் வீடுகள் சிலவே இருக்கும். எனினும், அவை தனித்தனியாக, பெருநிலப் பரப்புகளுக்கு இடையில் அமைக்கப் பெற்றவை. சுற்றிலும் வெற்றிடங்கள் நிரம்ப இருக்கும். அந்நிலத்தைச் சுற்றி அவரவர் தம் எல்லை அமைக்கப்பெற்றிருக்கும். சென்னையில் உயர்ந்த மாளிகைகளாகிய ‘பங்களாக்’களுக்குச் சுற்றிச் சுவர் உண்டு. இங்கு அந்தச் சுற்றுச் சுவர்களுக்குப் பதில் பனை ஓலைகளும்

தென்னங்கீற்றுகளும் வரிசையாக வேயப்பெற்றிருந்தன; சுமார் ஆறு அடி உயரத்துக்கு, வரிசையாக ஒன்றன்மேல் ஒன்றாக அழகாகக் கட்டப்பெற்றிருந்தன. இந்த ஓலைச் சுற்றுச் சுவர்களுக்குள் பரந்த நிலப்பரப்பும், அதன் இடையிலே சிறுசிறு கட்டடங்களும் உள்ளனவாம். அந்த ஓலைகள் இவ்வாறு அழகிய முறையில் சுற்றுச் சுவராய் அமைந்த காட்சி எனக்குப் புதியது. ஒரு சிற்றூர் என்றால், அவ்வூர் எல்லை தொடங்கி அது முடியும்வரை இந்தச் சுற்றுச் சுவர்களின் தொடர்ச்சிதான் காட்சியளிக்கிறது. அதனாலேதான் அஃது ஊர் என்பது தெரிகின்றது. இடையிடையே உட்செல்லும் வாயில்கள் உள்ளன. ஆனால், பலவற்றுள் உள்ளிருக்கும் கட்டடங்கள் தெரியாதபடி, நிலப்பரப்பு விரிந்து உள்ளது.

வழியிடை இரண்டொரு பேரூர்களையும் கடந்தோம். விமான நிலையத்துக்கும் வட்டுக்கோட்டைக்கும் இடையில் உள்ளது பன்னிரண்டு கல் தொலைவு என்றார்கள். நாங்கள் வீடு சென்று சேரும்போது மணி இரண்டை எட்டிக்கொண்டிருந்தது. என் நண்பர்தம் வீடு பரந்த பரப்புக்கு இடையில் அமைந்த ஒரு சிறந்த கட்டடம். திரு. நாகலிங்கம் அவர்கள் அறுபது வயதைக் கடந்தவராயினும், உள்ளத்திலும் உடல் உழைப்பிலும் இளைஞராகவே காணப்பட்டார்கள். அவர்களே காரினை ஓட்டிவரும்போது, அதைத் தம் வயமாக்கி வந்த நிலையும், அவர்கள் வீட்டில் செயலாற்றும் முறையும் அவர்தம் உள்ள இளமையை எடுத்துக் காட்டின. அவரும் மகனாரும் அதுவரை சாப்பிடவில்லை என்பதை அப்போதுதான் அறிந்தேன். பிறகு மூவரும் உணவு கொண்டோம்.



கோடையின் கொடுமையைப் பற்றி முன்னமே குறித்தேன். எனவே, நாங்கள் மாலை ஐந்து மணி வரையில் ஓய்வு பெற்றிருக்க வேண்டியிருந்தது. அவர்கள் வீட்டு வாயிலின் முகப்பில் வளர்ந்தோங்கிய வேப்பமரம் எங்கட்குச் சற்று ஆறுதல் தந்தது என்னலாம்.

மாலை ஐந்து மணிக்குமேல் 'யாழ்ப்பாணம்' நோக்கிப் புறப்பட்டோம். தமிழ் நாட்டில் யாழ்ப்பாணம் என்றுகேட்டால் அது ஒரு நகர்போன்றுதான் ஒலிக்கிறது. ஆனால், அது நகர் அன்று; மாவட்டமேயாகும். யாழ்ப்பாண மாவட்டத்தலைநகர் யாழ்ப்பாண நகராகும். எனவே, இலங்கையைத் தொட்டுக்கொண்டிருக்கும் அந்தப் பெருந்தீவே யாழ்ப்பாணத் தீவுதான். அதன் மத்தியிலே தலைநகராகிய யாழ்ப்பாணம் இருக்கிறது. அதைச் சுற்றிலும் தீவு முழுவதும் சிறியதும் பெரியதுமாகப் பலப்பல ஊர்கள் உள்ளன. நாங்கள் விமான நிலையத்திலிருந்து வட்டுக்கோட்டைக்கு வந்த போழ்து யாழ்ப்பாண நகரைத் தொடவில்லை; வேறு குறுக்கு வழியாக வந்துவிட்டோம்; எனவே, இப்போது திரும்பவும் வேறு வழியாகத்தான் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றோம். வட்டுக்கோட்டைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் எட்டுக்கல் தூரம் போலும்! இரண்டுக்கும் இடையிலே சில சிற்றூர்கள் இருந்தன. வட்டுக் கோட்டைக்கு அண்மையில் அமெரிக்கப் பாதிரியாரால் நடத்தப் பெறும் ஒரு பெருங்கல்லூரி இருந்தது. அதில் பல மாணவ மாணவிகள் பயில்வார்களாம்; கல்லூரியில் மாணவர் விடுதியும் உண்டாம். பாதிரியாருடைய தாய் நாட்டிலிருந்து பெரும்பொருள் அந்நிலையத்துக்கு வந்துகொண்

டிருக்கிறதாம். கிறிஸ்தவர் தம் சமயம் தழைப்பதற்காகத் தம்மையே தியாகம் செய்வதோடு, தமது பொன்னையும் பொருளையும் கொடுத்துச் செய்யும் சமயப்பணி உலகறிந்த ஒன்றுதானே? அவர் தம் சமயம் தழைக்க வேண்டும் என்ற தனி உணர்வினாலேதான் அவர்கள் அதைச் செய்கிறார்கள் என்று குறை கூறலாம். எனினும், அவ்வாறு கூடப் பிற சமயச் செல்வர்கள் செய்வதில்லை என்பதை நாம் அறிவோமன்றோ? அவர்தம் பணி வழி அப்படி அதிக எண்ணிக்கையில் யாழ்ப்பாண மக்கள் கிறித்தவர்கள் ஆகவில்லை என்று கூறினார்கள்.

யாழ்ப்பாண நகர் சிறியதுதான். வான் அளாவிய கட்டடங்களை அங்குக் காண முடியவில்லை. கடைத்தெருவைத் தவிர்த்து மற்ற இடங்களெல்லாம் சுற்றுச் சுவர்களும், ஓலை அடைப்புக்களும் கொண்ட பரப்புக்குட்பட்ட வீடுகளை உடையனவாகவே இருந்தன. சில சில கட்டடங்கள் உயர்ந்து இருந்தன. எனினும், இரண்டு மூன்று அடுக்கு மாளிகைகளைக் காண்பது அரிதாயிற்று. தனி வீடுகளாயினும், அரசியல் அலுவலகங்களாயினும், உயர் மாளிகைகளாகவே இல்லை. நான் அன்று வழி முழுதும் எங்கும் உயர்தோற்ற மாளிகையைக் காணவில்லை. அந்தக் கிறித்தவக் கல்லூரியில் இரண்டொரு கட்டடங்கள் அவ்வாறு இருந்தன என நினைக்கின்றேன். கட்டட உயர்வு இல்லாக் காரணம் என்ன என்று கேட்டேன். அவர்கள் ஒருவர் மற்றவர் கண்ணுக்குத் தென்பட விரும்பாத வாழ்க்கையே அதற்குக் காரணம் என்றார்கள்; வீட்டைச் சுற்றிய பரப்பிற்கும் எல்லையில் சுவரைப் போன்று நெருக்கமாக ஓலை வேய்ந்திருப்பதற்கும் அதே காரணம் கூறினார்கள். தனித்தனி வீடுகளில் வாழும் மக்கள் சற்றுத் தாராளமாக உலவவும், பக்கத்தில் உள்ள கிணறுகளில் மூழ்கவும் வசதியாக மற்றவர் அறியா வகையில் ஓலையால் மறைவு செய்யப்படுகிறது. அதே போன்று, ஒரு வீடு உயர்ந்த மாளிகையாகவும், மற்றொன்று தாழ்ந்தும் இருந்தால் உயர்ந்த இடத்திலிருந்து மற்ற இடத்தில் வாழ்வார்தம் அன்றாட வாழ்வைக் காணமுடியும் அல்லவா? அதுவும் தவறு என்பதனாலேயே அவ்வாறு ஒரே வகையில் உயரப் போகா மாளிகைகளையும், சுற்றுச் சுவர்களாக ஓலைகளையும் அமைத்திருக்கிறார்கள் என அறிந்தேன். அதே நிலை யாழ்ப்பாண நகரிலும் இருந்தது. சில சில குறுந்தெருக்கள் வளைந்து வளைந்து சென்றன. அவை ஒரு பெருந்தெருவில் தொடங்கி, மற்றொரு பெருந்தெரு வரை செல்லும் முறையினைக் கண்டேன். அவை மிகக் குறுகியவை. ஒரு வண்டி வந்தால் மற்றொரு வண்டி அதைக் கடப்பது இயலாத செயல். வீடுகளில் வாயில் வழிகளிலே சற்று விரிந்துள்ள இடங்களிலேதான் அவ்வாறு எதிர் வண்டிகள் கடக்க இயலும். இரண்டொரு குறுந்தெருக்கள் வழியாகச் செல்லும்போது அதைக் கண்டேன்.

யாழ்ப்பாணக்கடைத்தெரு அத்துணைபெரியது என்று சொல்ல முடியாவிட்டாலும், எல்லாப் பொருள்களும் அங்குக்கிடைக்கும் வகையில் அக்கடைத்தெரு அமைந்திருந்தது. வெளி நாட்டுத் துணி வகைகளும், பிற பொருள்களும் கண்ணைக் கவர்ந்தன. இங்கு இறக்குமதிக்கு அதிகமான வரி இல்லாத காரணத்தால் பல வெளி நாட்டுப்

பொருள்கள் இந்தியாவைக்காட்டிலும் விலை குறைவாகக் கிடைக்க வழி இருக்கிறது. மற்றும் இந்திய நாட்டில் இறக்குமதி செய்யாது தடை செய்யப்பட்ட எத்தனையோ வகையான துணிமணிகளும், கார் வகைகளும், பிற பொருள்களும் இங்குக் கிடைக்கின்றன.

நாங்கள் கடைத்தெருப்பக்கம் செல்லும் போது மணி ஏழு. பல கடைகளை மூடத் தொடங்கிவிட்டார்கள். இரவில் நெடுநேரம் கடைகளை வைத்திருப்பதில்லையாம். ஏழு மணிக்குள் பெருங்கடைகளெல்லாம் மூடப்பட்டுவிடுமாம். அன்றும் அவ்வாறு மூடிக்கொண்டிருந்தார்கள். சில கடைகளின் உள்ளே நுழைந்து பார்த்தேன். பல்வேறு வகையான பொருள்கள் அடுக்கடுக்காய்க் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் விளங்கின. கடைகள் மூடும் வேளையாதலால் விரைந்து கடைத்தெருவை விட்டுப் புறப்பட்டோம்.

இருட்டிவிட்டமையின், வேறு எந்த இடத்தையும் காண இயலாது என்ற எண்ணத்துடன் திரும்பலானோம். வழியில் அங்கே உள்ள ஒரு சிற்றுண்டி விடுதியில் 'இட்டலி' 'தோசை' முதலிய சிற்றுண்டிகளை உண்டோம். நம் நாட்டுச் சிற்றுண்டிகளே அவை. சுவையும் அந்த வகையிலேயே அமைந்திருந்தது என்னலாம். பின்பு அங்கேயே பாலும் பழமும் உண்டோம். பிறகு அங்கிருந்து வட்டுக்கோட்டையை நோக்கி வண்டி புறப்பட்டது. வழியில் ஒரு கடற்கழியைக் கடக்கப் பாலம் அமைக்கப்பட்டிருந்தது. இரவு எட்டு மணி வேளையில் அந்தப்



பாலத்தில் நிற்பது, கோடை வெயிலுக்குப் பின் குளிர்ச்சி பெறும் இன்பமன்றோ! ஆம்! சிறிது நேரம் அங்கே தங்கி அந்த இனிய கடற்காற்றைத் துய்த்துப் பின்பு புறப்பட்டு வீடு திரும்பினோம். மணியும் பத்தாகிவிட்டது. படுக்கைக்குச் சென்றோம். வந்த களைப்பால் உறக்க அன்னையின் அணைப்பிலே என்னை மறந்தேன்!

# வாழ்வும் வளமும்

**யா**ழ்ப்பாணத்தில் வாழும் தமிழர்வாழ்வு தமிழ் நாட்டுத் தமிழர்தம் வாழ்வை ஒத்ததேயாகும். அவர்தம் இருப்பிட அமைப்பும், உணவும், உடையும், பிற வகைகளும் தமிழ் நாட்டு முறைகளோடு ஒத்தனவாய் இருக்கின்றன. பள்ளிக்கூடங்களும் பிற கல்வி நிலையங்களும் இலங்கை அரசாங்க அமைப்பின்படி இயங்கி வருகின்றன. தமிழர் பெரும்பாலாராய் உள்ள இப்பகுதியில் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் மிகுதியாய் உள்ளன. வாழும் தமிழருள் பலர் வைதிக நெறி வழுவா வாழ்க்கையையே மேற்கொள்ளுகின்றனர் என்னலாம். மேலை நாட்டு நாகரிகப் பண்பாடுகளும் பழக்க வழக்கங்களும் பிறவும் அவர்தம் வாழ்வில் விரவியுள்ளன என்றாலும், அவற்றால் அவர்தம் சமய வாழ்வு அவ்வளவு அதிகமாகப் பாதிக்கப்படவில்லை எனத்தெரிகிறது. சமயச் சடங்குகள் இன்னும் குறையாத அளவில் நடைபெறுகின்றன, சமயத்தில் சமரசம் காணும் மனப்பான்மைகூட இன்னும் சிலருக்கு இல்லை என்று கூறலாம். இங்கு ஒரு நிகழ்ச்சி எனது நினைவுக்கு வருகிறது :

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன் இந்த யாழ்ப்பாணத்தில் சமய சம்பந்தமான ஒரு மாநாட்டிற்கு என்னைப் பேச்சாளனாக வருமாறு அழைத்தார்கள். நான் சமயத்தில் சமரசம் காண வேண்டும் என்ற கொள்கை உடையவன். அங்குள்ளவரோ, சமயத்தில் உள்ள வேறுபாடுகளை அப்படியே பின் பற்ற



வேண்டுமென விரும்புபவர்கள் எனக் கேள்விப்பட்டேன். உடனே நான் எனது கொள்கைபற்றி அவர்களுக்கு விளக்கமாக எழுதினேன். சிறு தெய்வ வழிபாடுகளைக் கண்டிக்கவும், சாதி வேறுபாடுகளை சமயத்துறையில் நீக்கவும் வேண்டிய வழிதுறைகளை நான் வற்புறுத்துவேன் என்றும், அதற்கு இசைந்தால் நான் வருகிறேன் என்றும் எழுதியிருந்தேன். உடனே அப்படியாயின் நான் வர வேண்டா என்றும் யாழ்ப்பாணம் இன்னும் அந்தச் சீர்திருத்தத் துறையில் முன்னேறவில்லை என்றும் எழுதிவிட்டார்கள். ஆம்! அந்த யாழ்ப்பாணம் இன்று முழு அளவில் மாறிவிடவில்லை என்றாலும், பல வகைகளில் மாறி முன்னேறிக்கொண்டுதான் வருகிறது என்பதை நேரில் கண்டு அறிந்து மகிழ்ந்தேன்.

நான் தங்கியிருந்த நாட்களில் ஒரு நாள் ஞான சம்பந்தர் தம் உறவினர் வீட்டுக்கு நீத்தார் சடங்கின் பொருட்டுச் செல்ல வேண்டுமென்று சொன்னார். நான் அவர் பகல் பன்னிரண்டு மணியளவில் சென்று திரும்புவார் என் நினைத்தேன். ஆனால், 'அவர் அன்று மாலை நான்கு மணி வரை என்னோடு கூடவே இருந்து பிறகு அந்த நிகழ்ச்சிக்குச் செல்லப் போவதாகக் குறித்தார். அன்று பதினாறும் நாட்கடனாம். பல அந்தணர்களுக்குத் தானம் வழங்குவார்கள். அவர்களுக்கெல்லாம் தானம் கொடுத்துச் சடங்குகளையெல்லாம் முடித்து வீட்டிற்கு வர மாலை நான்கு மணி ஆகுமாம். அதற்குப் பிறகுதான் மற்றவர்களுக்கு உணவாம். அது வரை உற்றார் உறவினர் ஒன்றும் உண்ணாதிருப்பார்கள் போலும்! இவ்வாறான பழம்பெரு வைதிகச் சடங்குகள் அங்கு இன்னும் குறையவில்லை என்னலாம்.

யாழ்ப்பாணத்தில் வாழும் மக்களுள் பெரும்பாலோர் சைவர் என்று குறித்தேன். எனினும், அந்த யாழ்பாணத் தலை நகரில் நல்ல சைவ உணவுச் சாலையோ உண்டிக் கடையோ காண்பது அரிதாய் இருந்தது. பெரிய ஓட்டல்கள் எல்லாம் மேலை நாட்டு முறையில் குடிப்பழக்கங்கள் கொண்டவை; மாமிச உணவையும் உண்டியையும் தருபவை. யாழ்ப்பாணத்து ஒரு மூலையில் ஒரு தமிழ் நாட்டுப் பார்ப்பனர் தோசையும் இட்டலியும் சுட்டு விற்றுக் கொண்டிருந்தார். அவருக்கு அவற்றால் நல்ல வருமானந்தான். உணவுக்கும் சிற்றுண்டிக்கும் புதியராகச் செல்பவர் அங்கே சற்றுத் திகைக்க வேண்டிய நிலைதான் உள்ளது. எனினும், விரும்பி வருகவென்று ஏற்று விருந்து புரக்கும் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு இடையில் அது ஒரு பெருங்குறையாகத் தோன்றாது என்னலாம்.[1]

இலங்கை நாட்டிலேயே இப்போது மொழிக் குழப்பம் உண்டாயிருப்பதை யாவரும் அறிவர். இலங்கை வாழ் இந்தியர் பலர் தாய் நாடு நோக்கித் திரும்ப வேண்டிய நிலையில் உள்ளனர் என்பதும் உலகறிந்ததே. இந்நிலையில் அங்கேயே பழங்காலந் தொட்டு நிலைத்து வாழ்ந்த யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் நிலையும் சற்றுத் தாழ்ந்து தான் உள்ளது என்னலாம். ஒரு வேளை வாழ்ந்த இந்தியரோடு இவர்களும் ஒன்றிக் கலந்தால் உயர வழி உண்டோ என்னவோ! அது திட்டமாகத் தெரியவில்லை. அவர்களும் அதை விரும்பவில்லையோ எனத் தெரிகிறது.

இலங்கை வாழ் இந்தியர் என்னும்போது, அவ்விந்தியர் தமிழரே ஆவர். மிகு பழங்காலம் தொட்டுத் தமிழர்கள் வாணிபத்தின்பொருட்டும், கலை நலம் காணவும் காட்டவும் பல வெளி நாடுகளுக்குச் சென்றுள்ளார்கள். அந்தத் தொடர்பு இந்நாள் வரை நிலைத்துத்தான் வந்திருக்கிறது. இன்று வெளி நாடுகளில் இருக்கும் இந்தியருட்பெரும்பாலோர் தமிழரே. கிழக்கே சையாம் சிங்கப்பூர் தொடங்கி, மேற்கே தென்னாபிரிக்கா வரையில் உள்ள இந்தியரில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் தமிழர் என்பதை அறியாதார் யார்? உலகில் எப்பாகத்திலும் இன்று தமிழர் இருக்கின்றனர். ஆனால், வாழ வழிகாட்டியாக வளம் பெருக்கச் சென்ற தமிழர்கள் இன்று வாட்டத்துடன் தாய் நாடு திரும்புகின்றார்கள். சையாமிலும் பர்மாவிலும் தமிழர்கள் வாழ்வும் வளமும் இழந்தவராகிய காட்சியும், வாடி வந்து கப்பலில் இறங்கிய காட்சியும் இன்னும் மனக்கண்ணைவிட்டு அகலவில்லை. மலேயாவிலும் இன்று அவர்தம் கை தாழ்ந்துவிட்டது என்னலாம். மலேயாவும் சிங்கப்பூரும் முழு சுதந்தரம் பெற்ற பின் அங்குள்ள ஆறு லட்சம் தமிழர் நிலை என்னாகும் என்று யாராலும் கூற இயலாது. தென்னாப்பிரிக்காவில் தமிழர் படும் பாடு தரணி அறிந்தது. இங்கு இலங்கையிலும் அந்த நிலையே நிலவுகிறது!

1. இது 1947 ஏப்பிரல் நிலை



இந்த அவல நிலை நீங்க இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அது ஒன்றும் செய்யாது வாளா உறங்குகின்றது. வெளி நாட்டில் வாடும் தமிழர் அளவுக்கு வங்காளியரோ, குஜராத்தியரோ வாடுவார்களாயின், இந்நாள் இந்திய அரசாங்க நடவடிக்கை வேறாய் இருந்திருக்கும் என்று சில அரசியல் வாதிகள் கூறுவது ஓரளவு உண்மையாகவும் இருக்குமோ என நினைக்கத்

தோன்றுகிறது. எப்படியாயினும், இத்தனை ஆண்டுகளாக இலங்கை வாழ் இந்தியர் பிரச்சினைக்கு வழி காணுதிருப்பது வருந்தத்தக்க ஒன்றேயாகும். இந்நிலை யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழர்களையும் ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டது என்னலாம்.

யாழ்ப்பாணத் தமிழர் இலங்கை அரசியலில் சிறுபான்மையர். எனவே, அவர்கள் எதையும் தங்கள் விருப்பம் போலச் செய்ய இயலாது. தமிழும் சிங்களமும் சம உரிமையோடு வாழ்ந்திருந்த காலத்தில் மக்களும் மனநிறைவோடு வேறுபாடு இன்றி வாழ்ந்தார்கள். இன்று மொழிப் போராட்டத்தோடு, சமயப் போராட்டமும் கலந்துள்ளது என்னலாம். சிங்களவர் பெரும்பாலும் பௌத்தர். தமிழர்களோ சைவர்கள். பௌத்த குருமார்கள் தங்கள் மொழியையும் கொள்கையையும் பொது மக்களிடைப் பரப்ப முயல்கின்றார்கள். அதன்வழி மக்கள் மனம் தம் சமயம், தம் மொழி என்ற பற்றில் திளைக்கிறது. ஜனநாயக நாளாகிய இன்று ஆள விரும்புவோர் அவ்வப்பொது மக்களது மனப்படி நடக்க வேண்டியுள்ளது. ஆகவே, பெருவாரியாக உள்ள சிங்களவர் வழி அரசாங்கம் செல்வதில் வியப்பில்லை யன்றோ!

இலங்கை வாழ் தமிழினமும் முழு ஒற்றுமையோடு இருக்கவில்லை என்றனர் என் நண்பருட் சிலர். முழு ஒற்றுமையுடன் இருப்பின், இன்னும் பல நல்ல செயல்களைச் செய்து, பலவற்றைச் சாதிக்க முடியும் என்று சிலர் நம்பினர். தன்னலம் சிலரிடம் குடிகொண்டமையின், ஒரு சிலர் ஆளுவோருடன் இருப்பதாகவும் கூறினர். எனக்கு அவை பற்றி அதிகம் தெரிந்துகொள்ள வாய்ப்பு



இல்லை. எனவே, இந்த அளவோடு இதை நிறுத்தி மேலே செல்கின்றேன்.

இந்த மொழிப் போராட்டம் யாழ்ப்பாணத்தில் ஓரளவு தமிழை வளர்க்கிறது என்பதே என் கருத்து. ஓடும் மோட்டாரில் தமிழ் எழுத்துக்களும், தமிழ் இலக்கங்களும் இருப்பதைக் கண்டேன். அது எனக்கு வியப்பாய் இருந்தது. தமிழ்நாட்டிலேயே இது காண முடியாத ஓர் அதிசயம். ஆங்கிலம் இந்தி ஆகியவற்றின்கீழ் எங்கோ ஒரு மூலையில் தமிழ் எழுத்தைக் காண்பதுதான் தமிழ்நாட்டின் தனிச் சிறப்பு. எனவே, இங்குக் காரின் எண்களும் தமிழில் இருப்பதைக் காண வியப்பு உண்டாகாமல் போகுமா? நண்பர்களை அது பற்றி விசாரித்தேன். அரசாங்கத்தார் சிங்களம் தமிழ் இரண்டிலும் எண்கள் இருக்கலாம் என்று விதித்தமையின், மொழிப் போராட்டக் காரணத்தால் சிறந்த தமிழ்ப்பற்று உடையவர்கள் தங்கள் கார்களின் எண்களைத் தமிழிலேயே அமைத்தார்கள் என அறிந்தேன். சிவநேயம் தந்த சூலையை வணங்கிய சைவராகிய திருநாவுக்கரசு நாயனர் போன்று, இத் தமிழ்ப்பற்று உண்டாகச் செய்த மொழிப் போராட்டத்தை வாயார வாழ்த்தினேன்!

யாழ்ப்பாணத்து மக்கள் வாழ்க்கை முறை அத்துணைச் செழிப்புடையது என்று கூறமுடியாது. மக்களுள் பெரும்பாலோர் ஏழைகளே! அன்றாட வாழ்வுக்கெனப் பணியாற்றுவோர் பல்லோர். உத்தியோக முறையில் பணியாற்றுவோர்க்குத் தமிழ் நாட்டைக்காட்டிலும் சற்று அதிகமாகவே சம்பளம் கிடைக்கிறது என்னலாம். எனினும்,

அவர்கள் வாழ்க்கைத் தரத்துக்கு அதுவும் போத வில்லை என்பதே அவர்கள் கூற்று.

யாழ்ப்பாண நகர்ப்புறத்தை விட்டுக் கிராமங் களில் சென்று காணின், மக்கள் பயிர்த்தொழில் செய்வதை அறியலாம். யாழ்ப்பாண நிலப்பகுதி அத்துணைச் செழிப்புடையதன்று. எங்கும் பனைமரங் களே காட்சி தரும். ஆகவே, அந்நிலத்தைப் பாலை நிலத்தொடு சார்த்தல் வேண்டுமன்றோ! எங்கும் வரட்சிதான். மின்சாரத்தின் துணைகொண்டு நீர் இறைத்துப் பயிரிடும் காட்சி பெரும்பாலும் இல்லை என்னலாம். வடபகுதியில், உள்ள நீரினைக்கொண்டு பல வகைக் காய்கறிகளைப் பயிரிடுகிறார்கள். கிழங்கு வகைகளுள் சிலவும் பயிராகின்றன. தமிழ் நாட்டுக் காய்கறிகள் இங்கும் அதிகமாகக் காணக் கிடைக் கின்றன. இவைகளைத் தவிர்த்து எள்ளு முதலிய நவதானியங்களும் பயிராகின்றன. நல்ல மழைக் காலங்களில் தமிழ்நாட்டைப் போன்று நெல் பயிராகும் வயல்களையும் கண்டேன்.

யாழ்ப்பாணம் நாற்புறமும் கடலால் சூழப்பட்ட பகுதியாதலின், மீன் பிடிப்பே தொழிலாய் உள்ளது போலும்! கைத்தொழில் துறையிலும் யாழ்ப்பாணம் அத்துணை முன்னேற்றம் பெறவில்லை என்னலாம். **கனகேசன் துறை** என்னுமிடத்தில் சிமிட்டித் தொழிற் சாலை ஒன்று இருக்கிறது. அது பெரியதேயாகும். எனினும், நாட்டின் தேவை முழுவதையும் அது நிறை வேற்றிவிடும் என்று சொல்ல இயலாது. வேறு கைத்தொழில் வளர்ச்சிக்கான வழிதுறை ஒன்றும் அதிகம் இல்லை என்னலாம்.

வாணிபத்துறையில் கொளும்புவை நோக்க யாழ்ப்பாணம் எங்கோ பின் தங்கித்தான் உள்ளது. இங்குக் கடைத்தெரு என்பது மிகக் குறைந்த அளவிலேதான் உள்ளது. ஆயினும், வேண்டிய எல்லாப் பொருள்களும் கிடைக்கின்றன. வெளி நாட்டுப் பொருள்கள் பலவும் இங்கு வரவழைக்கப் படுகின்றன. அவற்றின் விலைகளும் தமிழ் நாட்டி லுள்ளவற்றைவிட மிகக் குறைவாகவே உள்ளன. உணவுப் பொருள்களின் விலைமட்டும் சற்று உயர்ந்து தான் உள்ளது. மக்களது உடையும் பிற பழக்க வழக்கங்களும் பெரும்பாலும் தமிழ் நாட்டவற்றை ஒத்தனவாய் இருப்பினும், சில பகுதிகளில் மேலை நாட்டு வாடை வீசுதலையும் இங்கே காண முடியும். மதுவிலக்கு இங்கு அமுலில் இல்லையாதலால், பல விடங்களில் உயர்ந்த வெளிநாட்டு மதுக் கடைகள் இருக்கின்றன. அவற்றுள் போவாரும் வருவாரும் பலராவர்.



கிராமங்களில் மக்கள் அமைதியாகவே வாழ் கின்றார்கள். எங்கும் உயர்ந்த மாடி வீடுகள் இல்லை. யாழ்ப்பாணநகரிலேயே இரண்டடுக்கு மாடி வீடு களைக் காண்பதரிது. அரசியல் அலுவலகங்களும் பிறவுங்கூட மாடிக் கட்டடங்களாய் அமையவில்லை என்னலாம். மக்கள் வாழும் வீடுகள் பரந்த நிலப் பரப்பின் இடையில் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ் வொரு வீட்டைச் சுற்றியும் இரண்டு மூன்று ஏக்கர் நிலங்கூட இருக்கும். அத்துணைப் பரப்பையும் எல்லையிட்டு, அழகாக ஓலைகளால் வேலி கட்டியுள் ளார்கள். சுற்றுச் சுவர்களை யாழ்ப்பாணத்தில் அதிகமாகக் காண முடியாது. ஆனால், அதனினும் அழகாகத் தென்னங்கீற்றுகளாலும் பனை ஓலை களாலும் வேலி அமைத்திருக்கும் காட்சி சிறந்த காட்சியாகும். நகரங்கள் கிராமங்கள் எல்லாவிடத்

திலும் இந்த எல்லை அமைப்பு நன்கு விளங்குகிறது. ஆயினும், சில இடங்களில் இந்த எல்லைக்கோடு பெருஞ்சாலைகளையெல்லாம் குறுகலாக்கித் தாராளப் போக்கு வரத்துக்குத் தடை செய்கிறது என்னலாம்.

நான் தங்கியிருந்த வீட்டிற்கு உரியவர் ஒரு வழக்கறிஞர். ஆதலால், அன்றாடம் அவரிடம் பல வகையான வழக்குகள் வருவதைக் கண்டேன். பணம் பெற்று ஏமாற்றும் வழக்கமும், அதனால் நீதி மன்றம் ஏறும் வழக்கமும் தமிழ் நாட்டைப் போல இங்கும் சாதாரணம் போலும்! அதிலும், ஒன்றுமறியாப் பெண்களை ஏமாற்றிப் பணத்தை வாங்கிக் கொண்டு பின்பு தர மறுக்கும் 'நல்லவர்'களும் இருப்பதை அறிந்தேன்! ஒரு மூதாட்டியார், வயது தொண்ணூறு இருக்கும்—அவர் நம் வழக்கறிஞரைத் தேடிக் கொண்டு ஒரு நாள் மாலை மூன்று மணிக்கு வந்தார். அப்போது நீதிமன்றம் முதலியவற்றிற்கு விடுமுறையாகையால், அவர் வீட்டிலேயே இருந்தார். மூதாட்டியார் சிறிது நேரம் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார்; பிறகு தம் மடியிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து நீட்டினார். அதைப் படித்த பிறகு வழக்கறிஞர், 'கோர்ட்டுத் திறந்ததும் ஆவன செய்யலாம்,' என்றார். மூதாட்டியார் அதைப் பற்றி மிக அழுத்தமாகக் கூறி வற்புறுத்தினார்; பிறகு என்னென்னவோ பேசிக்கொண்டிருந்துவிட்டுச் சென்றார்.

உடன் கொண்டுவந்தது நூறு ரூபாய்க்கு எழுதிய ஓர் 'அண்டிமாண்டு' என்றும், அந்தப் பணத்தைப் பெற்றவன் திருப்பித் தாராததால் வழக்குத் தொடரவேண்டும் என்றும் அந்தக் கிழம் கூறிற்று.



'பாவம்! இந்தத் தொண்ணூறு வயதில் இந்தத் தொல்லை எதற்கு?' என்று எண்ணிற்று என் மனம். அத்துடன், 'பாவம்! இந்த வயதில் அவர்க்குப் பயன்படவேண்டிய அந்தப்பணத்தை வாங்கிக் கொண்டு யாரோ அவரை வயிற்றெரிச்சல் கொட்டிக்கொள்ளுகிறார்களே!' என்றும் எண்ணினேன். ஆனால், அந்த அம்மையாரைப் பற்றி வழக்கறிஞர் கூறியதைக் கேட்டு வியப்பெய்தினேன். அந்த அம்மையார் பெரிய செல்வரென்றும், அவருக்கு மூன்று பிள்ளைகளும் பெண்களும் உள்ளார்கள் என்றும், அனைவரும் நல்ல நிலையில் இருக்கிறார்கள் என்றும், அவருக்கு வாழ்வில் ஒரு குறையும் இல்லை என்றும், ஆனாலும், இப்படி ஏதாவது தொல்லையை அவர் தேடிக்கொண்டேதான் இருப்பர் என்றும் அவர் கூறும் போது, 'பாவம்! வாழ்வில் ஓய்வு பெற்று அமைதி காண முடியாத அப்பாவி!' என நினைத்தேன். இப்படியே எத்தனையோ விதமான வழக்குகள் நான் தங்கியிருந்த நாட்களில் அவரிடம் வந்துகொண்டேயிருந்தன.

யாழ்ப்பாணத்திலிருந்து பலர் மலேயாவுக்குத் தொண்டு செய்ய நெடுங்காலமாகச் சென்றிருக்கின்றனர். அங்குச் சென்று அரசியல் பணியாற்றி ஓய்வு பெற்றவர் 'பென்ஷன்' பெறுகின்றனர். அவர்கள் இறந்தாலும் மனைவியருக்குத் தொடர்ந்து அந்தப் 'பென்ஷன்' வருமாம். அவ்வாறு பணம் பெறும் விதவையர் பலர் யாழ்ப்பாணத்தில் உள்ளனர். அவர்களைப் பலர் ஏமாற்றிப் பணம் பறித்து, 'கோர்ட்டு' ஏற வைக்கும் காட்சி அன்றாடக் காட்சி என்பதை அறிந்தேன்.

வழக்கறிஞர் பணியில் மற்றென்று முக்கியமானது: தமிழ் நாட்டில் சொத்து மாற்றத்துக்கு ஆவணக் களரிகள் உள்ளன. யார் வேண்டுமானுலும் எழுதி எடுத்துக்கொண்டுபோய் அங்குப் பதிவு செய்துகொள்ளலாம். பிறகு எப்போது வேண்டுமாயினும் அந்த ஆவணக்களரியிலேயே படிபெற்றுக் கொள்ளலாம். இங்கு அந்த நிலை இல்லை. எல்லாவற்றையும் வழக்கறிஞர்களே செய்ய வேண்டும். ஆயினும், எல்லா வழக்கறிஞர்களுக்கும் அந்த உரிமையை அரசாங்கம் தரவில்லை என்னலாம். ஊருக்கு ஒருசிலருக்கே அவ்வுரிமை வழங்கப்பட்டுள்ளது. அவ்வழக்கறிஞரே பத்திரத்துக்குரிய 'ஸ்டாம்பு' முதலியவற்றை வாங்கி, அவரே உரியவர்களிடம் கை எழுத்துக்களைப் பெற்று, அவரே மற்றவற்றை முடித்து, நேராக ஆவணம் பதிவு செய்வதைச் செய்து ஒரு படியை வைத்துக்கொள்ளவேண்டும். விற்பவரோ, வாங்குபவரோ, அவரைக் கண்டே எல்லாவற்றையும் முடித்துக்கொள்ளலாம். இந்த முறை மக்களுக்கு எளிமையானதும் தொல்லை அற்றதுமாய் இருக்கிறது. தமிழ் நாட்டுக் கிராமங்களிலிருந்து மக்கள் எட்டுப் பத்துக் கல் தூரம் கடந்து ஆவணக்களரியை அடைந்து, அடைந்த அன்றே பதிவுசெய்யப்பெருது தொல்லைப்படவேண்டிய நிலைகள் அன்ருடச் செயல்களன்றே! இங்கு அந்தத் தொல்லைகள் இல்லை. தத்தம் ஊரிலேயே அரசாங்க உரிமை பெற்ற வழக்கறிஞரிடம் நன்கு முடித்துக்கொள்ளலாம். பெண்களுக்கு இது மிகவும் நலம் தரும் வழக்கமாகும்.

யாழ்ப்பாணத்தில் நிறையப் பனைமரங்கள் உண்டல்லவா! அவற்றிலிருந்து கள்ளும் பதநீரும் இறக்கும் காலம் நான் சென்ற காலமாகும். என்ருலும், தனிப்பட்டோர் தோட்டங்களில் அவை இறக்கப்பெறவில்லை. பனங்காய்கள் அப்போதுதான் தலை காட்டின. எங்கோ சிலவிடங்களில் பதநீர் இறக்கிஞர்கள். யாழ்ப்பாணச் சைவர்கள் பெரும்பாலும் வைதிகச் சைவர்கள் ஆனமையின், அதைக் குடிப்பது இல்லையாம். நான் குடிக்க நினைத்தேன். ஒரு நாள் கீரிமலையில் மூழ்கிவிட்டுக் கனகேசன் துறைக்குச் சிமிட்டிச் சாலையைக் காணச்சென்றுகொண்டிருந்தோம். அங்கே பதநீர் இறக்கிக்கொண்டிருந்தார்கள். நாங்கள் கேட்டோம். ஒரு குடுவையில் தந்தார்கள். அதனுடன் மாங்காயை சிறு துண்டுகளாக நறுக்கிப் போட்டுச் சாப்பிட்டால் நன்ருக இருக்குமாம். கூட வந்த நண்பர்கள் அவ்வாறே செய்து தந்தார்கள். நன்ருகத்தான் இருந்தது. பதநீர் உடலுக்கு நலம் தரும் எளிய பானம் என்றேன். சென்னை அரசாங்கத்தார் அப்பதநீர் இறக்கும் தொழிலைப் போற்றி, பதநீரை விற்க ஏற்பாடு செய்கிருர்களல்லவா! இங்கு யாழ்ப்பாணத்தில் அவ்வாறு செய்யவில்லை. இவ்வாறு பருகுவதையே சிலர் தவருக நினைக்கின்றனர். 'பலர் காணவே பனைக்கீழ்ப் பாலைக் குடிக்கினும் கள்ளே என்பர்' என்ற பாடல்தான் என் நினைவுக்கு வந்தது. ஆயினும் அன்று நாங்கள் பதநீர் குடித்ததை அந்தக் கிராமத்தில் பலர் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்.

மக்கள் வாழ்க்கை முறை பல வகைத்து. தமிழ் நாட்டைப் போலவே ஒரு புறம் மிக எளிய வாழ்வும், பக்கத்திலேயே படாடோப வாழ்வும் காணப்பட்டன. ஒருசிலர் நாகரிகத்தின் பேரால் வாழ்வை விழலுக்கு இறைக்கும் நீராக்குவதைக் கண்டேன். என் நண்பர்

அத்தகைய வாழ்க்கையைக் கண்டு நைந்தார். ஓர் இளம்பெண்மணி ஆரவார உடையுடன் அவரைக் காண வந்தார். அவர் முகமெங்கும் குறுமறுக்களும் வேனிற்காலக் கட்டிகளும் இருந்தன. உடல் நிலையிலும் வயதுக்கு மேற்பட்ட தளர்ச்சியும் சோர்வும் காணப்பட்டன. 'இந்தக் கிராமத்தில் இத்தகைய நிலை பெண்களுக்கு ஏற்படுவானேன்?' என்று கேட்டேன். அவர் சுருக்கமாக, 'நம் பெண்கள் இயற்கையோடு இயைந்து இயல்பான வாழ்வை வாழக் கற்றுக்கொள்ளாமைதான் காரணம்,' என்றார். கொதிக்கும் வேனிற்காலத்தில் சூடாகக் காப்பியைக் குடித்துவிட்டு, சோம்பேறியாய் இருந்து, எல்லாவற்றிற்கும் பணியாட்களை அமர்த்தி, பாழாகப் படுத்துறங்கி, வெளியில் செல்லுங்கால் ஆடம்பரப் பூச்சுக்களும் மைகளும் பவுடர்களும் தம்மை அலங்கரிக்கச் செய்யும் கோலத்தில் அவர்களிடம் இயற்கை வாழ்வைக் காண்பதெங்கே? இத்தகைய ஆடம்பர வாழ்க்கை யாழ்ப்பாணத்தில் இடைப்பட்ட சாதாரண வகுப்பாரிடத்திலும் நிரம்ப இருப்பதைக் கண்டேன்.

யாழ்ப்பாண மக்கள் மண முறையிலும் பெரும்பாலும் தமிழ் மணம் வீசக் கண்டேன். தமிழ் நாட்டுப் பிராமணர்களைப் போலப் பெண்களைப் பெற்றவர்கள் திண்டாட வேண்டும் போலும்! இன்று தமிழ் நாட்டில் பிராமணர் மட்டுமன்றி, பெரும்பாலும் முன்னேற்றச் சமூகத்தார் அத்தனை பேருமே இந்த நிலையில்தானே இருக்கின்றார்கள்! இங்குப் பெண்ணைப் பெற்றவர்கள் அவர்களுக்கு மணமுடிக்க வேண்டுமானால் ஒரு கார், ஒரு மாளிகை, வேறு வாழ்விற்குத் தேவையான சாமான்கள் அனைத்தும் தர வேண்டுமாம். சொத்துக்களெல்லாம் பெண் பேரிலேயே இருக்குமாம். பெண்ணுக்கு அனைத்தும் இருந்தும், விற்க உரிமை இல்லை போலும்! தமிழ் நாட்டில் ஒரு பெண்ணுக்குப் பொருள் இருந்தால் அதை அவள் விருப்பம்போல விற்றுக்கொள்ளலாம் அல்லவா? அந்த உரிமை இங்கு இல்லை. கணவன் உத்தரவு இன்றியோ, கையொப்பமின்றியோ, மனைவி அச்சொத்தை ஒன்றும் செய்ய இயலாது. கணவன் அதைத் தனக்கே உரிமையாக்கிக் கொள்ளவும் முடியாது. ஒரு வேளை விவாகரத்தின் மூலமோ, வேறு வகையாலோ அத்தம்பதிகள் பிரிய நேரின், அச்சொத்து அப்பெண்ணுடன் பிறந்தகத்துக்கு உரியதாகச் சேர்ந்துவிடும். அங்கும் அவள் விருப்பம் போல அதை விற்க இயலாது. பெற்ற தந்தையார் அல்லது உடன்பிறந்தார் உதவியினாலே தான் அதை விற்க இயலும். இப்படிப் பெண்ணுக்கு முழுச்சொத்துரிமை இல்லா வகையிலே தான் பொருள்நிலை உள்ளது. எனினும், ஒரு பெண்ணைக் கட்டிக் கொடுப்பதற்கு நிறையச் செல்வம் தேவை. இந்நாட்டுத் தமிழ்ச் சமுதாயத்துள் காதல் மணம் பெருகி வளரவில்லை.

யாழ்ப்பாணத்தில் கல்வி கற்றவர் தொகை அதிகம் என்னலாம். ஒவ்வோர் ஊரிலும் சிறு சிறு தமிழ்ப் பள்ளிக்கூடம் உண்டு. அந்த ஊரிலே உள்ளவர்கள் அதை நடத்தும் பொறுப்பு ஏற்றுக் கொள்ளுகின்றனர். அரசாங்கமும் வேண்டிய பொருள் உதவி செய்கின்றது. சிலவிடங்களில் அரசாங்கமே முழுப்பொறுப்பையும் ஏற்று நடத்தும் பள்ளிகளும் உள்ளன. இவற்றைத் தவிர, மேலை நாட்டுக் கிறித்தவப் பாதிரிமார்கள் தோற்றுவித்து வளர்த்துவரும் பள்ளிகளும் பல. யாழ்ப்பாணத்தில்

அவர்தம் முயற்சியால் பலர் கிறிஸ்தவராகியிருக்கக் கூடும் என்பது தெரிகின்றது. சிலர் கிறிஸ்தவராகா விடினும் அவர்தம் நடையுடை பாவனைகளைப் பின் பற்றி வாழ்கின்றனர் என்பதும் தெரிந்தது.

வட்டுக்கோட்டைக்கு அருகில் உள்ள ஓர் அமெரிக்கக் கல்வி நிலையம் அப்பகுதிக்குச் சிறந்த பணியாற்றுகிறது என்னலாம். நெடுங்காலமாக அது அங்கே நின்று பலருக்குக் கல்வி வசதி அளித் திருக்கிறது. இன்றும் அது வளர்ந்துகொண்டே போகிறது. அந்த வட்டாரத்திலேயே அதுதான் உயர்ந்த பள்ளியாய்க் காட்சி அளிக்கின்றது. கிறித் தவப் பாதிரிமார்கள் வளர்க்கும் பள்ளிகள் இது போன்ற பல இங்குள்ளன. இந்துக்களும் சில பள்ளிகளை வைத்து வளர்க்கிறார்கள். சமயச் சார் பான பள்ளிகளும் வித்தியாசாலைகளுங்கூட உள் ளன. மொத்தத்தில் யாழ்ப்பாணம் கல்வித் துறை யில் ஓரளவு முன்னேறிய பகுதி என்றே கூறலாம்.

நலத்துறையிலும் இப்பகுதி சிறந்துள்ளது. இலங்கை நாடு முழுவதுமே நலத்துறை நன்கு காக்கப்பெறுகின்றது. ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ் வொரு மருந்தகமும் மருத்துவரும் இருந்து நாட்டை ஓம்புகின்றனர். இந்த வட்டுக் கோட்டைப் பகுதி யிலும் அது போன்ற மருந்தகம் உண்டு. வெளியூரி லிருந்து வந்த நான் இரு நாளைக்கு ஒரு முறை அம் மருத்துவரைக் கண்டு வர வேண்டுமென்ற நியதி யின்படி கண்டு வந்தேன். வெளி நாட்டிலிருந்து வருபவர் மூலம் தொத்து வியாதிகள் பரவாதிருக்க இந்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

மொத்தத்தில் யாழ்ப்பாண மக்கள் அமைதி கலந்த அன்பு வாழ்க்கையை மேற்கொண்டுள்ளார் கள் என்னலாம்.

# மணி பல்லவம்

**நா**ன் மணிமேகலையைப் பல ஆண்டுகளுக்கு முன் படித்த காலத்தில் இத்தீவைப்பற்றிச் சிந்திக்க நேர்ந்தது. இத்தீவு எங்குள்ளது? இதில் மணி மேகலா தெய்வம் தன் பெயர் கொண்ட மணிமேக லையை வைத்த இடம் எத்தகையது? அதில் மக்கள் வாழ்க்கை உண்டா? புத்ததேவர் பாத பீடிகையும் கோமுகிப் பொய்கையும் உண்டா? இவை போன்ற கேள்விகள் உள்ளத்தெழுந்தன. பலரைக் கேட்டும் பார்த்தேன். தக்க பதில் கிடைக்கவில்லை. ஒரு சிலர் 'ஜாவா'த் தீவுதான் **மணி பல்லவம்** என்றனர். ஒரு சிலர் வேறு சில தீவுகளைக் குறித்தனர்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு **கனகசபைப் பிள்ளை** அவர்கள் எழுதிய 'ஆயிரத்து எண்ணூறு ஆண்டு களுக்கு முன் தமிழர்' என்ற நூலைப் பயிலும் வாய்ப் புக் கிடைத்தது. அந்த நூல் இன்று சைவசித் தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் அழகாக ஆங் கிலத்திலும் தமிழிலும் அச்சிடப்பெற்ற காரணத் தால் பலருக்கும் கிடைக்கின்றது. ஆனால், நான் படிக்க விரும்பிய அந்த நாளில் அதன் பிரதியைக் காண்பது கடினம். 1904ல் வெளிவந்த அந்த நூலின் பிரதி ஒன்று சென்னைக் 'கன்னிமாரா' நூல் நிலையத்தில் இருந்தது. அதில் நுழைந்து தேடி னேன். அதைத் தனியாக எடுத்துப் பத்திரமாகப் பாதுகாத்தார் அந்நூல் நிலையத் தலைவர். அதை வேண்டிப் பெற்று அங்கேயே பயின்றேன். அதில்

இம்மணிபல்லவத்தைப்பற்றிய குறிப்பு ஒன்று வந்தது. அதைப் பயின்றேன். காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தெற்கே 30 யோசனைத் தூரத்திலே இந்திய நிலப் பரப்புக்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட ஒரு தீவு மணிபல்லவம் என்பதைத் திட்டமாக அவர் எழுதியிருந்தார்.[1] மணிமேகலை, இத்தீவு புகார் என்ற காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தெற்கே முப்பது யோசனைத்தூரத்திலே உள்ளது என்பதை நன்கு காட்டுகின்றது.[2] எனவே, இத்தீவு எங்குள்ளது என்பதை அறிய விரும்பினேன். ஓரளவு இலங்கைக்கும் இந்திய மண்ணுக்கும் இடையில் உள்ள தீவுகளுள் ஒன்றாகத்தான் இது இருக்க வேண்டும் என்ற முடிபுக்கு அந்தநாளில் வந்தேன். கனகசபைப் பிள்ளை அவர்கள் நூலிலே அத்தீவு யாழ்ப்பாணத் தீவுகளின் தொடரில் ஒன்றாகக் குறித்து எழுதியுள்ளார். அதை அறிந்த பின் அந்தத் தீவை எப்படியும் கண்டு சாத்தனார் காட்டும் குறிப்புக்கள் அங்கு உள்ளனவா என அறிய விரும்பினேன். அந்த விருப்பம் யாழ்ப்பாணம் சென்ற நாளிலேதான் நிறைவேறியது.

யாழ்ப்பாணத்து நல்லன்பர்கள் ஒரு கல்லூரி இலக்கிய விழாவிற்கு என்னை அழைத்தார்கள். சென்று சில நாட்கள் தங்கியிருந்தேன். அங்குள்ள என் இரு மாணவ நண்பர் அந்நாட்டு நலத்தையெல்லாம் காட்ட விரும்பினர். அவர்களோடு யாழ்ப்பாணத்தைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழல் கலந்த

1. Between Cylon & India was the island Manipallavam, on which there was one of the sacred seats of Buddha, then held in great veneration by all Buddhists. (The Tamils Eighteen Hundred years ago. New Edition, Page 11.)

2. மணிமேகலை, VI: 211—214.



பல இடங்களையும் பார்த்தேன். கீரி மலையின் சுனையில் ஆடினேன். சுன்னாகம் முதலிய இடங்களையும் யாழ்ப்பாண நகரையும் கண்டேன்.

ஒரு நாள் காலை நண்பர்கள் அருகிலுள்ள ஓர் இடத்திற்குச் செல்ல வேண்டுமென்றார்கள். நான் வட்டுக்கோட்டையில் தங்கியிருந்தேன். அதன் அருகிலே ஊர்க் காவல்துறை என்னும் ஓர் இடம் உள்ளதென்றும், அது காணத்தக்கதென்றும் கூறினார்கள். 'ஊர்க் காவல்துறை' என்ற பெயரே என் உள்ளத்தை மகிழ்வித்தது. தாயகமாம் தமிழ் நாட்டிலே எத்தனையோ ஊர்களின் பெயர்கள் பிறழ்ந்தும், சிதைந்தும், மாறுபட்டும் வழங்கும் இந்த நாளில் இங்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இடங்கள் நல்ல தமிழ்ப் பெயர்களோடு இலங்குவதை அறிய மகிழ்ந்தேன். யாழையும் அதை வாசிக்கும் பாணனையும் தமிழகம் மறந்துவிட்டது. யாழின் பெயராலும் அதை மிழற்றும் பாணன் பெயராலும் தமிழ் இலக்கியத்தில் பல பாடல்கள் உள்ளன. ஆயினும், பல தமிழர்கள் அவற்றைப்பற்றி அறியமாட்டார்கள். ஆனால், இங்கு அந்த இரண்டையுமே இணைத்து, 'யாழ்ப்பாண' நகர் கண்டு, அதைப் போற்றுகின்றார்கள் தமிழ் மக்கள். அதைப் போன்றே பல சிற்றூர்களின் பெயர்கள் நல்ல தமிழ்ப் பெயராகவே இருப்பது மனத்துக்கு மகிழ் ஊட்டிற்று.

ஊர்க்காவல் துறை வட்டுக்கோட்டைக்கு ஆறு கல் தூரத்தில் உள்ள ஒரு பகுதி என்றார்கள். காலையில் சிற்றுண்டி கொண்டு புறப்பட்டோம். யாழ்ப்பாணமே ஒரு பெருந்தீவு. ஏன்? இலங்கையே அப்படித்தானே? திருமறைக் காட்டைத் தாண்டி

நெடுகக் கடல் உள் புகுந்து வளைவை உண்டாக்கா திருக்குமாயின், இன்று தமிழகமும் இலங்கையும் இணைந்த நிலப்பரப்பாகத்தானே இருக்கும்? யாழ்ப் பாணப் பெருந்தீவைச் சுற்றிப் பல சிறு சிறு தீவுகள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்றே ஊர்க்காவல் துறை. அங்கு மாற்றார்கள் கடல் வழி உள்ளே புகாதபடி காவலர் காவல் புரிவார்கள் போலும்! அதனாலேயே அப்பகுதி ஊர்க்காவல் துறை யாயிற்று என நினைத்தேன். கடலிலே சில தீவுகள் தென்பட்டன. ஊர்க்காவல் துறை வந்ததும் அங் கேயே சிறிது நேரம் தங்கித் திரும்பவேண்டுமல்லவா என்றேன். அங்கேதான் நண்பர்கள் மற்றொரு பயணத்தைக் கூறினார்கள்.

ஊர்க்காவல் துறையிலிருந்து இயந்திரப் படகு கள் அண்மையில் உள்ள தீவுகளுக்குச் செல்கின் றன. அத்துறை பெரிய துறைமுகம் அன்றேனும், கடல் வழிப் பல தீவுகளைப் பிணைக்கும் வாணிபத் தலமாயும், போக்குவரத்து நிலையமாயும் இருந்தது. அருகிலே ஒரு கடற்படையின் சிறு தளப் பகுதியும் இருந்தது. அதற்கடுத்தாற்போல டச்சுக்காரர் காலத்தில் கட்டப்பட்ட ஒரு சிறு கோட்டை கடலில் மிதப்பது போன்று காட்சி தந்தது. ஒரு சிறு தீவின் குழுவில் இத்தகைய ஒரு தீவை அவர்கள் பாதுகாத்த திறன் வியத்தற்குரியதுதான். தீவு முழுதும் கோட்டைதான். தனி வெற்றிடம் இல்லை. இவற்றின் எல்லைகளையெல்லாம் தாண்டி இன்னும் சில தீவுகள் தென்பட்டன. அவற்றுள் ஒன்று 'நயினார் தீவு' என்றும் அதைப் பார்க்கப் போகலாம் என்றும் நண்பர்கள் கூறினார்கள். நானும் 'சரி' என்றேன்.



சரியாகப் பத்துமணிக்கு ஊர்க்காவல் துறையை விட்டு நயினார் தீவை நோக்கி இரு விசைப் படகுகள் புறப்பட்டன. நாங்கள் ஏறிய படகு நேராக நயினார் தீவுக்குச் செல்வதென்றும், மற்றது வழியில் சற்றுத் தள்ளி உள்ள மூன்று தீவுகளுக்கும் சென்று தபால் கொடுத்துக் கடைசியில் நயினார் தீவை அடையும் என்றும் சொன்னார்கள். நாங்கள் ஏறியிருந்த படகில் சுமார் நாற்பது பேர் இருந்தனர். ஆண்களும் பெண் களும் குழந்தைகளும் இருந்தார்கள். ஆனால், அவர் களுள் பெரும்பாலோர் பௌத்த சமயத்தைச் சார்ந் தவர்; சிங்களமன்றித் தமிழை நன்றாகப் பேசி அறி யாதவர். நான் அவர்களைப்பற்றி என் நண்பர்களை உசாவினேன். 'தமிழர்களே பெரும்பாலாராயுள்ள இந்த யாழ்ப்பாணப் பகுதியில் இப்படி ஒரு சிங்களக் கூட்டத்தை நான் காணவில்லை. எனவே, இந்தச் சிங்களவர் யார்? எங்கே செல்கிறார்கள்?' என்றேன். 'இவர்களெல்லாம் நயினார் தீவுக்கு உரியவர்களா!' என்ற ஐயமும் பிறந்தது. நண்பர்கள் விளக்கினார் கள். அந்த நயினார் தீவில் ஒரு புத்தர் கோயில் இருக்கிறது என்றும், அது பௌத்தர்களுக்கு மிக முக்கியமான இடம் என்றும், அதைக் காணவே சிங் களவர் பலர் அங்கு நாள்தோறும் யாத்திரை செய் கின்றனர் என்றும் அறிந்தேன். சிங்களப் பௌத் தர்களுக்கு அது ஒரு புனிதத்தலம். புத்தர் தம் திருவடியை வைத்தருளிய நல்ல இடம் என்பது அவர்கள் முடிவு. எனவே, 'மாரனை வெல்லும் வீர ராகிய' அப்புத்த தேவரைக் கண்டு தரிசிக்கவே அங்குத் திரள் திரளாகச் சிங்களவர்கள் வருகிறார் கள் என அறிந்தேன். அது வரையில் செல்லும் இடத்தைப் பற்றிச் சிந்தை செய்யாத என் மனமும்

சிந்திக்கத் தொடங்கியது. 'ஒருவேளை இதுதான் மணிமேகலையில் வரும் மணிபல்லவமாக இருக்குமோ!' என்று கேட்டுவிட்டேன். என் நண்பர்களால் திட்டமாகப் பதில் உரைக்க முடியவில்லை. என்றாலும், ஒரு வகையில் அதுதான் மணிபல்லவமாய் இருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வர அவர்கள் சொற்கள் பயன்பட்டன.

கொந்தளிப்பற்ற அமைதியான கடல்; நாற்புறமும் தீவுகளின் காட்சி. 'தூரத்தில் தமிழ் நாட்டு மண் தெரியுமோ?' என்று கேட்டேன். 'முப்பது கல்லுக்கு அப்பாலே உள்ள அம்மண் தெரியாது,' என்றார்கள். உடன் வந்த சிங்கள மக்கள் ஏதோ பேசிக்கொண்டு வந்தார்கள். அது எனக்குச் சிறிதும் புரியவில்லை. என்றாலும், ஒரு சிறு கூட்டத்தார் நெற்றியில் சந்தனப் பொட்டுடன் இருந்தனர். அவர்கள் தமிழ் பேசினார்கள். அவர்கள் புத்தரடியை வழிபடப் போவதாக இல்லை. அவர்கள் சைவர்கள். எனவே சிவ சம்பந்தமுடைய கோயிலுக்குத்தான் போகிறார்கள் என்று அறிந்தேன். அங்குப் புத்தர் கோயிலைத்தவிர்த்து வேறு கோயில்கள் உள்ளனவா என அறிய விரும்பினேன். அந்தத்தீவில் **நாகபூஷணி** என்ற அம்மன் கோயில் உண்டு என்றார்கள். தீவு நெருங்கி வர வர அதைக் காணவேண்டுமென்ற உள்ளுணர்வு வளர்ந்தது. தூரத்தே ஒரு கோபுரமும் தெரிந்தது. சைவசமய நெறி தவறா வகையில் அக்கோயிலின் புறத்தோற்றம் காட்சி அளித்தது. என் எண்ணத்துக்கிடையில் படகு கரையை அடைந்தது. இடையில் இருபுறங்களிலும் தீவுகளின் வரிசைகள் கண்ணுக்கு விருந்தாய் அமைந்தன. இந்த நயினார்



தீவு இடைப்பட்ட ஒன்று என்றும், இதைத்தாண்டி நெடுந்தீவு என்ற ஒரு பெருந்தீவும் மற்றும் இரண்டொரு சிறு தீவுகளும் உள்ளன என்றும் அறிந்தேன்.

படகு சரியாகப் பன்னிரண்டு மணிக்குக் கரையில் நின்றது. அனைவரும் இறங்கினோம். எதிரில் நாகபூஷணி என்னும் அவ்வூர் நாகம்மையின் கோயில் தென்பட்டது. அங்கு நேராகச் சென்றோம். அன்று அத்தீவில் மணிமேகலை விழித்தெழுந்ததும் ஒரு புத்துணர்வு பெற்றாள் என்று சாத்தனார் கூறுகின்றார். அது பற்றி நான் அதுவரை உணர்ந்துகொள்ள முடியவில்லை. ஆனால் எனக்கே அத்தீவில் கால் வைத்ததும் அக்கடுவெயிலிலும் ஒரு புத்துணர்வு பிறந்தது. ஆம்! அதுதான் மணிபல்லவமாய் இருக்கவேண்டும் என்ற முடிவுக்கு யாரையும் கேளாமலே வந்துவிட்டேன்.

இறங்கிய சிங்களவர் நேரே தெற்கு நோக்கி நடந்துகொண்டிருந்தனர். ஆடவரும், பெண்டிரும், குழந்தைகளும் அவ்வெயிலையும் பொருட்படுத்தாது சென்றுகொண்டிருந்தனர். அவர்கள் அனைவரும் சற்றுத் தள்ளியிருக்கும் புத்தர் கோயிலுக்குப் போவதாகச் சொன்னார்கள். நானும் என் நண்பர்களும் நாகம்மையின் கோயிலுக்குச் சென்றோம். அக்கோயில் மூடப்பட்டிருந்தது. உச்சி வேளைப் பூசைக்குப் பன்னிரண்டரை மணிக்குத் திறப்பார்கள் என்றும், அப்போது காணலாம் என்றும் சொன்னார்கள். அதற்குள் நாங்களும் புத்தர் கோயிலைக் கண்டு வந்துவிடலாம் என்று நடந்தோம். வெயிலின் கொடுமையிலும் நாங்கள் 'தீநெறிக் கடும்பகை கடிந்த' அப்புத்த தேவரது பீடிகையைக் காணப்

போகும் மகிழ்ச்சியுடன் சென்றோம். கோயிலை அடைந்தோம். முன்னரே சென்ற சிங்களப் பௌத்த யாத்திரிகர்கள் புறத்தூய்மை செய்துகொண்டு கோயிலுக்கு அணியணியாகச் சென்றுகொண்டேயிருந்தார்கள். நாங்களும் அவ்வாறே கோயிலுள் புகுந்தோம். புத்த தேவர் காட்சி அளித்தார். பீடிகை மட்டும் தனியாக எங்கும் காணப்படவில்லை. எனினும், உயரக் கட்டிய கோபுரத்தூபியில் 'புத்த ஞாயிறு' தோன்றிற்று.

புத்த ஞாயிறு தோன்றுங் காலைத்
திங்களும் ஞாயிறும் தீங்குறு விளங்கத்
தங்கா நாண்மீன் தகைமையின் நடக்கும் ;
வானம் பொய்யாது மாநிலம் வளம்படும் ;
ஊனுடை உயிர்கள் உறுதுயர் காணு ;
வளிவலம் கொட்கும் மாதிரம் வளம்படும் ;
நளியிரு முந்நீர் நலம்பல தரூஉம் ;
கறவைகன் றூர்த்திக் கலநிறை பொழியும் ;
பறவை பயன்துய்த்து உறைபதி நீங்கா ;
விலங்கும் மக்களும் வெரூஉப்பகை நீங்கும் ;
கலங்கஞர் நரகரும் பேயும் கைவிடும் ;
கூனும் குறளும் ஊமும் செவிடும்
மாவும் மருளும் மன்னுயிர் பெறாஅ ;
அந்நாட் பிறந்தவன் அருளறங் கேட்டோர்
இன்னாப் பிறவி இகந்தோர் ஆதலின்,
போதி மூலம் பொருந்திய சிறப்பின்
நாதன் பாதம் நவைகெட ஏத்துதல்
பிறவி தோறும் மறவேன் !'

(மணி. xii : 86-103)

உண்மையில் என்னை மறந்தேன். புத்த ஞாயிறு தோன்றும் காலை நிகழும் அற்புதங்களைப் பற்றிச் சாத்தனார் கூறிய அத்தனையும் ஒன்றன்பின் ஒன்றாக



என் உள்ளத்திரையில் ஊசலாடின. நிலைத்து நின்றேன். மரமானேன். அதே வேளையில் சிங்களப் பௌத்தர் அனைவரும் அப்புத்த ஞாயிறு பொறித்துள்ள தூபியின் அடியில் வந்து மண்டியிட்டு அமர்ந்தனர். அக்கோயிலில் இருந்த புத்த பிட்சு ஒருவர் தமக்கே உரிய அந்த மஞ்சள் காவி உடையுடன் தோற்றமளித்தார். அவர்கள் மொழியில் பல மந்திரங்களைச் சொன்னார். அனைவரும் கூடவே சொல்லவேண்டும் என்பது முறை போலும்! சிலர் சொல்லினர். சிலர் முணுமுணுத்தனர்.

வணக்கம் முடிந்த பின் அப்புத்த பிட்சு தமது ஆச்சிரமத்துள் புகுந்தார். அவர் நன்கு தமிழ் பேசினார். அவரை அணுகி அப்புத்தர் ஆலயத்தைப்பற்றிக் கேட்டேன். அவர் அத்தீவே மணி பல்லவம் என்று திட்டமாகக் கூறினார். 'கோமுகிப் பொய்கை எங்கே?' என்றேன். அக்கோயிலின் அண்மையில் அது முன்பு இருந்ததாகவும் நெடுநாட்களுக்கு முன்பே அது தூர்ந்துவிட்டதாகவும், அந்த நிலம் இப்போது ஒருவர் உடைமையாய் இருக்கிறது என்றும், 'புத்தர் பள்ளம்' என்பது அதற்குப்பெயர் என்றும் கூறினார். அதன் பக்கத்திலேயே புத்தர் கோயில் மற்றொன்று, பீடிகையின் தோற்றத்தை நினைவுறுத்த அமைக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார். அங்கு அக்கோயிலைப்பற்றியும், புத்த சமயம் பற்றியும் விளக்கும் ஒரு சிறு நூலையும் கொடுத்தார்.

பிறகு அவரை வணங்கி அவரிடம் விடைபெற்றுக்கொண்டு, புத்தர் கோயிலின் பக்கத்திலுள்ள மற்றொரு 'விகாரத்தை' வலம் வந்தோம். அதிலும் புத்தர் எழுந்தருளியிருந்தார். ஆனால்,

அதன் பக்கத்திலேயே இந்துக்கள் போற்றும் மும்மூர்த்திகளும் காட்சி அளித்தார்கள். அது பற்றிக் கேட்ட காலை அங்குள்ள ஒருவரும் அதற்குத் தகுந்த பதில் கூறவில்லை. எனினும், பௌத்தம் இந்து சமயத்தின் ஒரு பிரிவே என்று பெருந்தலைவர்கள் அன்றுமட்டுமன்றி இன்றும் பேசுவது என் உள்ளத்தெழுந்தது. ஆம். இறைவழிபாட்டில் வெறி கொள்ளாது, பிணக்கும் அன்பே சிறந்தது என்ற உண்மை உணர்வுக்கு இவ்விடம் சான்ருகும் என நினைத்தேன். எனினும், அச்சிங்கள நாட்டில் சமய அடிப்படையையும், அதன்வழித் தோன்றும் மொழிக்காழ்ப்பையும் எண்ணும்போது நடுங்கினேன்! 'இப்புத்த தேவரையும் மும்மூர்த்திகளையும் ஒருசேர வணங்கும் சிங்களவர், தம் மனம் போன நெறியில் காழ்ப்புக்கொள்ளாது அன்பினைப் பற்றி வாழ்வார் ஆயின், ஈழ நாடு எத்துணை ஏற்றமுறும்!' என நினைத்தேன். அந் நினைவை நிறைவேற்றித்தர வேண்டுமென அப்புத்த தேவரை வழிபட்டுப் பிரிந்தேன்.

மணி பன்னிரண்டரை ஆயிற்று. வெயில் கடுமையாய் இருந்தது. எங்களை ஏற்றிவந்த படகோட்டி ஒன்றரை மணிக்குள் திரும்ப வேண்டுமென்று கூறிவிட்டான். எனவே, அதற்குள் நாங்கள் நாகம்மையையும், புத்தர் பள்ளத்தையும் கண்டு புறப்பட வேண்டும். எனவே, விரைந்து நாகம்மை திருக்கோயிலை அடைந்தோம். கோயில் பழுது பார்க்கப் பெறுகின்றது. அவ்வூரைச் சேர்ந்த நல்லவர்தம் முயற்சியால் கோயில் சீர்திருத்தம் செய்யப்பெறுகிறது. அண்மையில் முடியப்போகும் ஒரு தேரின் வேலையும் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அத்தேரினைச் செய்து முடிக்கத் தமிழ்நாட்டில் இருந்துதான் 'மரங்கொல் தச்சர்'கள் சென்றிருக்கின்ருர்கள் என அறிந்தேன். அவர்களுள் ஒருவரோடு சிறிது நேரம் பேசினேன்.



கோயிலுக்குள் மணி ஓசை கேட்டது. பூசை தொடங்கிவிட்டது. எனவே, நாங்கள் உள்ளே சென்ருேம். அங்கே நாகம்மையின் காட்சி சிந்தைக்கினிய காட்சியாய் இருந்தது. வணங்கி வழிபட்டோம். அங்கே அக்கோயிலின் வரலாறு பற்றிய ஒரு சிறு குறிப்பும் கிடைக்கவில்லை. எனினும், அது நாகர் வழிபாடு பற்றிய கோயிலாய் இருக்கலாம் என நினைத்தேன். அம்மைக்கு அமுதிட்டுப் படைத்த சோற்றுத் திரளாகிய 'பிரசாதம்' எங்களுக்கும் கிடைத்தது. அதைக் கொண்டுவந்து ஒரு சிற்றுண்டி விடுதியில் வைத்துக்கொண்டு உண்டு பசி தீர்ந்தோம்.

கோயிலுக்கு வெளியே பூத்துத் தழைத்த வேப்ப மரங்கள் இனிய தென்றற்காற்றை வீசி மகிழ்வித்தன. சிறிது நேரம் அங்கே தங்கினேம். அவ்வூரைச் சார்ந்த இரு நண்பர்கள் அங்கே வந்தார்கள். அவர்களுள் ஒருவர் அக்கோயில் அர்ச்சக மரபினர் என்றும், தமிழ்ப் பற்றும் பண்பாடும் உடையவர் என்றும் கூற அறிந்தேன். அவர் நான் இன்னன் என்பதைக் கேட்டறிந்தார்; உடனே தமது வீட்டுக்கு வந்து உணவு கொண்டு செல்லுமாறு வேண்டினர். அவர் பெயர் காசி விஸ்வநாதர் என அறிந்தேன். அவர் கோயிலுக்குச் சென்று அந்த ஊர்பற்றியும் கோயில்பற்றியும் உள்ள 'தலவரலாறு' நூல் ஒன்றை வாங்கிவந்து எனக்குக் கொடுத்தார்; அந்தத் தீவு மணிபல்லவம் என்பது பற்றியும், அது

நாக நாட்டின் ஒரு பகுதி என்பது பற்றியும் எடுத்துரைத்தார்; அந்த நாக நாட்டு மரபு பற்றிய வணக்கமே நாகம்மை வணக்கமாக இன்று சிறக்கின்றது என்பதையும் எடுத்துக் கூறினார். கோமுகிப் பொய்கைபற்றியும், பீடிகைபற்றியும் முன் புத்தர் கோயிலில் அறிந்த அவ்வுண்மைகளையே அவரும் பிறரும் கூறினர்; அவை இருக்கும் இடத்தையும் காட்டினர்; நான் தூரத்தே இருந்து கண்டேன். அவருடன் இருந்த மற்றொரு நண்பர் இராமலிங்கம் என்பவர். நான் அவரை நோக்கி, 'உங்களுக்கு இப்பெயர் எப்படி இட்டார்கள்?' என்று கேட்டேன். அவர் அடுத்துள்ள நெடுந்தீவில் இருப்பவர். அவர்தம் தீவுக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடைப்பட்ட கடல் குறுகியது என்றார்கள். நெடுந்தீவுக்கும் இராமேஸ்வரத் தீவிற்கும் இடையில் 'கச்சத் தீவு' என்ற ஒரு தீவு இருப்பதாகவும், அங்கு இருந்து நோக்கினால் இராமேஸ்வரக் கோபுரம் தெரியும் என்றும் கூறினர். ஆண்டுக்கு ஒரு முறை அவர்கள் கச்சத்தீவுக்குச் சென்று இராமலிங்கத்தை வழிபடுவதாகவும் உரைத்தார். எனவே, அவர் பெயரில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை அல்லவா! அன்று ஞானசம்பந்தர் தமிழ் நாட்டு மண்ணிலிருந்து இலங்கை நாட்டு 'மாதோட்ட நன்னகரைப்' பாடிய பண்பாட்டின் வழி, இந்நல்லன்பர் கச்சத்தீவிலிருந்து இராமலிங்கத்தின் கோபுர தரிசனம் கண்டு போற்றி அவர் பெயருடன் வாழ்கின்றார் என அறிந்து மகிழ்ந்தேன்.

மேலும் அந்த நாகத்தீவாகிய 'நயினார் தீவு' எனும் மணிபல்லவத்தைப் பற்றி அறிய நினைத்தேன். அதற்குள் படகோட்டியின் ஒன்றரை மணி



எல்லை வந்துவிட்டது. அங்கேயே தங்கிவிடலாமா என்றுகூட நினைத்தேன். எனினும், அடுத்து நான் யாழ்ப்பாணத்தில் ஆற்ற வேண்டிய பணி உடனே புறப்பட வைத்துவிட்டது. காசிவிஸ்வநாதர் அவர்கள் சில குறிப்புக்களைச் சொன்னார்கள்; அத்துடன் தாம் கொடுத்த சிறு நூலில் பல குறிப்புக்கள் உண்டென்றும் அதைப் பார்த்துப் பல அறிந்துகொள்ளலாம் என்றும் கூறினார்கள். பிரிய மனமில்லாதவனாய் மணிபல்லவத்தையும், நாகம்மையையும், அவளை வழிபடும் நல்லன்பர்களையும் விட்டுப் பிரிந்தேன். படகில் ஏறி ஒரு புறத்தே உட்கார்ந்தேன். கோடையின் கொடுமை தாக்கிற்று. எனினும், ஒரு மூலையில் இருந்து அந்த நாகநாடு பற்றிய நூலைப் படிக்கலானேன். பல குறிப்புக்கள் கிடைத்தன. அவை யாவை? அவை மணிமேகலை காட்டும் 'நக்க சாரணர் நாகர் வாழ்மலை'யோடு தொடர்புடையனவா? இவைகளையெல்லாம் எண்ணிற்று என் மனம். படகு கடலில் செல்லத் தொடங்கிற்று. நாகம்மையைத் திசை நோக்கித் தொழுதேன்.

மணிபல்லவம் பற்றியும், நாகர் நாடு பற்றியும் மணிமேகலையும், இலங்கைச் சரிதமாகிய மகாவமிசமும், புத்தசாதகக் கதைகளும், பிற கர்ண பரம்பரைக் கதைகளும் பலப்பல கருத்துக்களை எடுத்துக் காட்டுகின்றன. மணிமேகலையில் காணப்படும் நாகர் நாடு இதுதான் என்று திட்டமாகக் கூற முடியாது. ஆதிரை கணவனாகிய சாதுவன் கடலில் கலஞ் செலுத்துங்கால் அது கவிழ்ந்துவிட,

> 'நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்
> பக்கம் சேர்ந்துஅவர் பான்மையன் ஆயினன்.'

என்பர் சாத்தனார். சாரணர் என்ற சொல்லுக்

குப் புத்தருள்ளும் சமணருள்ளும் தவத்தால் சிறந்தவர் என்ற பொருள் உண்டு. அதன்படி பார்ப்பின், அத்தீவில் பௌத்தத் துறவிகள் இருந்தார்கள் எனக் கொள்ள இடமுண்டு. எனினும், 'நக்க' என்ற சொல் எதைக் குறிக்கின்றது? 'நக்க சாரணர்' என்ற தொடரே ஒருவகை நாகரைக் குறிக்கும் என்பது 'லெக்ஸிகன்' உரை. நக்கர் என்பதற்கு நிர்வாணிகள் என்ற பொருளும் உண்டு. இது நிற்க.

அந்தச் சாதுவன் சேர்ந்த நாடு புத்தர் தருமம் அறியாத நாடாக அன்றோ காண்கின்றது?

'கள்ளடு குழிசியும் கருங்கறி மூடையும்
வெள்ளென் புணங்கலும் விரவிய இருக்கையும்
எண்குதன் பிணவோடு இருந்தது என்ன'

அந்நாகர் நாட்டுக் குருமகன் இருந்தான் என்றன்றோ சாத்தனார் குறிக்கின்றார்? மேலும், அவன் சாதுவனுக்கு,

'நம்பிக்கு இளையளோர் நங்கையைக் கொடுத்து
வெங்கலும் ஊனும் வேண்டுவ கொடும்'

எனக் கூறியதாகவுள்ளது. மேலும், அந்த நாகர் நாட்டு மக்கள் பாடை தமிழினும் வேறானதென்றும், சாதுவன் வல்லவன் ஆதலின், அவர் பேசியதை அறிந்துகொண்டான் என்றும் கூறப்பட்டுள்ளன. இவைகளையெல்லாம் நோக்கின், அந்த அநாகரிக நாகர் வாழ்ந்த இடம் இம்மணிபல்லவமாகாது என்று கொள்ளல் பொருந்தும். சாதுவன் வரலாறும் மணிமேகலை காலத்திலேயே நிகழ்ந்ததாதலின் அதற்குள் அந்நாட்டு நிலையும் மொழியும் மாறிவிட்டன என்று கொள்ளவும் வழியில்லை. எனவே, சாதுவன் சென்ற நாகர் நாடு இந்நாகம்மை தங்கிய நாகநாடு அன்று என்பது தேற்றம்.



மேலும், மணிமேகலையில் அச்சாதுவன் கடலில் படகு கவிழப் பிழைத்துச் சென்று சாரணர் வாழ் மலைப்பக்கம் சேர்ந்தான் என்கின்றார். ஆனால், இங்கு இந்த மணிபல்லவத்தே மலை ஒன்றும் காணவில்லை. அன்று மணிமேகலை சென்ற மணிபல்லவத்தும் யாதொரு மலையும் இருந்ததாகக் குறிப்பு ஒன்றும் காணவில்லை. எனவே, இவ்வகையிலும் இது சாதுவன் சென்ற நாகர் மலையினும் வேறுபட்டதாகி மணிமேகலை சென்றடைந்த மணிபல்லவமே என்பது வெளிப்படும்.

கனகசபைப் பிள்ளை அவர்கள் அந்தச் சாதுவன் சார்ந்த நாகநாடு இலங்கைப் பெருந்தீவிற்குக் கிழக்கே உள்ளதென்று கூறுகின்றார். இம்மணிபல்லவமோ, அவ்விலங்கைக்கு மேற்கே பாம்பன் கடலில் உள்ளது. அவர் நாகநாடு கிழக்கில் உள்ளதென்றும், அது மக்களைத் தின்னும் நாகரிகமற்றவர்கள் வாழ்ந்த நாடென்றும், அத்தீவுக்கு அப்பாலேயே நாகபுரத்தைத் தலைநகராகக் கொண்ட **சாவகம்** என்னும் பெரு நாகநாடு இருந்ததென்றும், அந்நாக நாட்டை இந்திரன் பரம்பரையில் தோன்றிய அரசர்கள் ஆண்டார்கள் என்றும் குறிக்கின்றார்.[1] அவர் கூற்றுக்கு மணிமேகலை என்ற இயலக்கியமும், யவன வணிகர் தாலமி போன்றார்தம் குறிப்புக்

1. To the east of Ceylon were the islands inhabited by a race of Nagas Called Nakkasaranar or 'naked nomads,', who were Cannibals. Beyond these lands was Chavakam, a large kingdom, the Capital of which was Nagapuram. The king of this Country claimed to be a decendant of the god Indra.

களும் உறுதுணையாகின்றன.[1] இவையெல்லாம் நக்க சாரணர் என்பதற்கு நிர்வாணிகளான அநாகரிகர் என்று மேலே பொருள் கண்டதை வலியுறுத்துகின்றன. எனவே, இவைகளையெல்லாம் வைத்துக்கொண்டு ஆராயின், சாதுவன் சென்ற நாகர் நாடு இந்த மணிபல்லவமாகிய நாகநாடு அன்று என்பதும், அந்த நாகநாடு இலங்கை நாட்டுக்குக் கிழக்கே, இப்போதுள்ள நிக்கோபார்த் தீவுகளோ, அவற்றின் பக்கத்தில் உள்ள வேறு எதுவோ என்று கொள்ளுதலும் பொருந்தும். அப்படியாயின், இந்த மணிபல்லவத்தை நாக நாடு என்றும், நாகர் தீவு என்றும் வழங்குவதேன்? இதில் இருக்கும் தெய்வத்திற்கு நாகம்மை என்ற பெயர் வழங்குவானேன்? இதுபற்றி எல்லாம் ஆராயின், சில உண்மைகள் விளங்கும். அவற்றை அங்குள்ளவர் கொடுத்த குறிப்புக்கள் ஒருவாறு எடுத்துக் காட்டுகின்றன.

இந்த மணிபல்லவத் தீவு பலவகைகளில் பெயர் பெறுகின்றது. மணித்தீவு, மணிநாகத்தீவு, நாகத்தீவு, நாகநயினார் தீவு, நயினார் தீவு எனப் பல வகைகளால் இத்தீவு பண்டும் இன்றும் வழங்கப் பெற்று வருகின்றது. இதற்கு நாகத்தீவு என்று பெயர் வந்ததற்கு ஒரு கதை வழங்குகிறது. இப்போதுள்ள நாகபூஷணி அம்மையின் கோயிலுக்கு வடக்கிலுள்ள பாம்பன் கடலில் பல ஆண்டுகளுக்கு முன் ஒரு நாகம் தன் வாயில் பூவைக்கவ்விக்

1. மணிமேகலை XVI: 15 & XXIV: 64—170.

Ptolemy mentions three groups of islands inhabited by cannibals. Yule has identified them with the Nicobars, Nekkavaram of Marco Polo, Lakavaram of Rashid-du-din (Mccridle's Ptolemy, pp. 236—239).



கொண்டு வர, அதை ஒரு கருடன் கண்டதாம். அதற்குத் தப்ப அந்நாகம் ஒரு கல்லில் மறைய, கருடனும் விடாது சுற்றி வட்டமிட்டதாம். அது காலை அவ்வழிச் சென்ற தமிழருடைய வாணிகக் கப்பலில் உள்ளோர் இந்நிகழ்ச்சியைக் கண்டனராம். அவருள் ஒரு செட்டியார் கருடனை வணக்கத்தால் அப்புறப்படுத்தினராம். பின்பு நாகம் மலருடன் கடல் வழி இத்தீவிற்கு வந்து வழிபட, செட்டியாரும் பின் வந்து வழிபட்டுத் தமிழ் நாடு சென்றனராம். அதன் பிறகு அவர் அந்நாகத்தால் நலம் பெற்றாராம். இவ்வாறு நாகத்தால் பூசிக்கப் பெற்றமையின் இத்தீவு நாகத்தீவு என்று பெயர் பெற்றதென்பார் ஒரு சாரார். பாம்பு சுற்றிய கல், கருடன் கல் என்பன இத்தீவின் அருகில் உள்ளன என்றும், அடியவர் அவற்றை வணங்குகின்றனர் என்றும் கூறினர்.

இனி இத்தீவு நாகவழிபாட்டிற்குப் பேர் போனதென்பது பலர் கருத்து. இந்திய மண்ணில்—ஏன்-உலகிலேயே நாக வழிபாடு மிக்கபழமை வாய்ந்த ஒன்று என்பது ஆராய்ச்சியாளர் முடிபு. எனவே, இத்தீவில் நாக வழிபாடு உள்ளமையின், இது பழம் பெருநாகரிகமும் பண்பாடும் உடைய ஒரு தீவு என்று கொள்ளுவது பொருந்தும் என்பர். இங்குள்ளார் இந்த வகை வரலாற்றைக் கூறினர். இங்குள்ள கோவிலில் 'நாகத்தம்பிரான்' உருவம் ஒன்று இருந்ததாகவும் டச்சுக்காரர்கள் படையெடுப்பின் போது, தங்களிலும் சிறந்த பொருளாகக்கருதிய அவ்விக்கிரகத்தை இத்தீவில் வாழ்ந்த மக்கள் மாற்றார் காணாத வகையிலே மறைத்து அண்மையிலுள்ள புளியந்தீவில் கொண்டு போய் வைத்தார்கள் என்றும் கூறுகிறார்கள். தமிழ் நாட்டிலும் வட

விந்தியாவில் சில பகுதிகளிலும் முகலாயர் படையெடுப்பின் போதும் பிற அந்நியர் ஆதிக்கம் கொழித்த போதும் இந்து சமயக் கோயில் இடம் பெயர்ந்த வரலாற்றை அறிகின்ற நமக்கு இது புதுமையாகத் தோன்றாது அல்லவா? அந்தப் புளியந்தீவில் அவ்வுருவம் இன்றும் உள்ளதாகவும், நயினார் தீவிற்கு வருபவருள் பலர் அங்கும் சென்று அவ்வுருவத்தை வழிபடுவதாகவும் கூறினார்கள். நாகவழிபாடு பழங்காலத்தில் சிறந்தோங்கியிருந்ததென்றும், காலப்போக்கில் அந்த நாகவழிபாடே இம்மணி பல்லவத்தில் நாகம்மை அல்லது நாகபூஷணி வழிபாடாக மாறிற்றென்றும் சொன்னார்கள். எனவே, நாகவழிபாடு ஆற்றும் இந்த நாகத் தீவிற்கும், நாகர் என்னும் இனத்தார் வாழ்ந்த அந்த நாகர் நாட்டிற்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்பது நன்கு தெரிகின்றது. இனி இத்தீவில் புத்தர் பிரான் கால் கொண்ட வகை எவ்வாறு? இதுவே மணிபல்லவமாயின், அந்த உண்மையையும் ஆராய்தல் வேண்டுமன்றோ?

மணிமேகலை இயற்றிய சாத்தனார், இங்குப் புத்த பீடிகை வந்ததற்குக் காரணம் காட்டுவர். இந்தத் தீவில் செம்மை சான்ற ஆதனம் ஒன்றிருந்ததாகவும், அதைப் பெற இரு நாக அரசர் தம்முள் கலகம் விளைத்ததாகவும் தெரிகின்றது. இருவரும் அதைப் பெயர்த்துத் தம் நாட்டுக்குக் கொண்டு செல்ல முயன்றனர் போலும்! ஆயினும், ஒருவராலும் அதைப் பெயர்க்க முடியவில்லை. எனினும், ஒருவருக்கும் அதை விட்டுக்கொடுக்கவும் மனமில்லை. பெயர்த்துச் செல்ல முடியாவிட்டாலும், அந்த இடத்திலேயே இருந்தாவது அப்பீடத்தில் தங்கலாம் என்று அவருள் ஒவ்வொருவரும் நினைத்திருக்



கலாம். இந்த நினைப்பின் வழி பொறாமையும் பகைமையும் எழுவது இயல்புதானே? ஆம்! அவ்வாறே பகை முற்றி, அப்புனித இடத்திற்காகப் போரே உண்டாகிவிட்டது. இரு பெரும்படைகள், புத்தரின் புனிதமான ஒரு பீடத்துக்காக மாறுபட்டுக் கலகம் விளைக்கும் காட்சி கொடியதன்றோ? போர் நீக்கி, பகை போக்கி, அன்பையும் அமைதியையும் நிலை நாட்ட வந்த அண்ணல் புத்தர், அதைக் கண்டும் வாளா இருப்பரோ! தாமே வந்து அவர் இருவரையும் தலையளித்து ஆட்கொண்டு அருளி, போர் நீங்கச் செய்து அன்பு வழியால் அவர்களைத் திருத்தியதோடு, தாமே அத்தரும பீடத்தில் எழுந்தருளினார். அப்பீடத்திலிருந்து கொண்டே அவர் அறநெறியைப் போதித்தார். இவ்வரலாறு மணிமேகலை காட்டிய வரலாறு ஆகும்.[1]

[1] 'தேவர் கோன் இட்ட மாமணிப் பீடிகை
பிறப்புவிளங்கு அவிரொளி அறத்தகை ஆசனம்
கீழ்நில மருங்கின் நாகநா டாளும்
இருவர் மன்னர் ஒருவழித் தோன்றி
எமதுஈது என்றே எடுக்கல் ஆற்றார்
தமபெரும் பற்று நீங்கலும் நீங்கார்
செங்கண் சிவந்து நெஞ்சுபுகை உயிர்த்துத்
தம்பெருஞ் சேனை வெஞ்சமர் புரிநாள்
இருஞ்செரு ஒழிமின் மெதுஈது என்றே
பெருந்தவ முனிவன் இருந்துஅறம் உரைக்கும்
பொருவறு சிறப்பின் புரையோர் ஏத்தும்
தரும பீடிகை' (மணிமேகலை. VIII 53-63)

பெருந்தவ முனிவன்-புத்தன். இதில் நாகநாட்டிலிருந்து இருவர் வந்ததாகக் குறித்து, அவர்தம் நாட் கீழ்நிலமருங்கில் உள்ளதாகக் குறிப்பதால் அந்த நக்கசாரணர் நாகநாடு இலங்கைக்குக் கிழக்கே உள்ள நாடாகக் கொள்ளல் பொருந்தும்.

இவ்வாறு பேரிலக்கியம் காட்டும் வரலாற்றை இலங்கை வரலாற்றைக் கூறும் **மகாவமிசம்** என்னும் நூலும் காட்டுகிறது. மகாவமிசம், மணிமேகலை காலத்துக்கு மூன்று நூற்றாண்டுகள் பிந்தி எழுந்த இலங்கை நாட்டு வரலாற்று நூல். அதில் அந்த இரு நாகவேந்தர் பெயர்கள் குறிக்கப்பெறுகின்றன. அவை **குலோதரன்,மகோதரன்** என்பனவாகும். எனவே, வேறு இரு நாக நாடுகளிலே வாழ்ந்த நாகர் தலைவர்கள் பிற நாடுகளைச் சுற்றி வந்த காலத்து, எதிர் பாராது இங்கு வந்து, இத்தீவில் இருந்த மணிப்பீடத்திற்காகப் போரிட்டார்கள் என்பது தெரிவதால், இந்தத் தீவு அவர்களது நாகரிக மற்ற நாக நாட்டினும் வேறுபட்டதென்பதும், இதுவே 'போதித் தலைவர்' தங்கிய மணிபல்லவம் என்பதும் அறியக் கிடக்கின்றன.

இனி இத்தீவின் இன்றைய வழிபாட்டு முறையை நோக்குவோம்: இத்தீவில் புத்தர் வழிபாடும் நாகம்மை வழிபாடும் சிறக்க நடைபெறுகின்றன. இவ்விருவகை வழிபாடுகளும் நெடுங்காலமாகவே இருந்துவந்தன என்று கொள்ளுதற்கு இடம் உண்டு. உலாந்தர்களாகிய டச்சுக்காரர்கள் பௌத்தர் கோயிலையும், சிவன் கோயிலையும் அழித்தார்கள் என்ற வரலாறும் வழங்குகிறது. இன்றுள்ள நாகம்மை கோயிலிலே கல்வெட்டுக்களும் உள்ளன. அவை இக்கோயிலின் பழமையை விளக்குகின்றன. இந்த நாகத்தீவாகிய மணிபல்லவம் **முதலாம் பராக்கிரம பாகு** என்னும் சிங்கள அரசன் காலத்தில் ஒரு பெருந்துறைமுகமாய் இருந்தது என்பதை இக்கோயிலில் உள்ள அவன் கல்வெட்டே எடுத்துக்காட்டிச் சான்று பகர்கின்றது. மேலும்,



இத்தீவின் அண்மையிலே கண்டெடுக்கப்பட்ட பழம்பொருள்கள் இது பதின்மூன்றும் நூற்றாண்டிலே சீனநாட்டொடு வாணிபத் தொடர்பு கொண்டிருந்தது என்பதைக் காட்டுகின்றன.

அக்காலத்திலெல்லாம் இன்றே போல இருவகை வழிபாடுகளும் நடைபெற்று வந்தன என அறிகின்றோம். இலங்கைத்தீவில் ஒருசேர பௌத்த, இந்துவழிபாடு நிகழிடங்கள் சில உள்ளன. அவற்றுள் தென்கோடியில் உள்ள **கதிர்காமமும்** வடகோடியிலுள்ள **இம்மணிபல்லவமும்** சிறந்தவை போலும்! கதிர்காமம் சென்றவர்கள் அங்குள்ள கோயிலையும் வழிபாட்டு முறையையும் பிற நிகழ்ச்சிகளையும் கண்டு, அது கந்தர் கோட்டமா அன்றிப் புத்தர் கோட்டமா என்று ஐயுறுவர். அக்கோயிலில் உள்ள இறைவனைக் **கதிர் காமக் கந்தன்** என்றே பழங்காலந் தொட்டுச் சைவர்கள் போற்றி வழிபடுகிறார்கள். ஆயினும், அக்கோயிலில் வழிபாடாற்றுபவர்கள் பௌத்த சமயத்தவர்களென்பர். பிற சைவக் கோயில்களில் காணும் ஆசாரங்கள் அங்கு இல்லை. வழிபாட்டு முறையும் அப்படித்தானே? அதே வேளையில் அக்கோயிலின் பின் உள்ள அரசமரத்தடியில் காணும் புத்தர் பாதங்களைப் பல பௌத்தர்கள் போற்றி வழிபடுகின்றார்கள். அரசமரந்தானே புத்தருக்கு அருள்ஞானம் தந்த போதிமரம்? எனவே, அதன் அடியில் உள்ள அவ்வண்ணல் அடியினை அச்சமய அடியவர்கள் போற்றுகின்றார்கள். இவற்றை நோக்க, பௌத்தம் இந்து சமயத்தின் ஒருபகுதியே என்ற கொள்கை வலியுறுத்தப் பெறுகின்றது. பரந்த பாரதநாட்டின் உரிமை வாழ்வுக்குப் பிறகு இந்தியராகிய நாம் அனைவருமே இன்று ஒரு

சேர விடுமுறை மூலமும் விழாக்களின் மூலமும் புத்த ஜயந்தியைக் கொண்டாடுகின்றோமே!

ஆம்! இந்த நினைவோடு மணிபல்லவத்தை நோக்கினேன். கதிர்காமத்தைப் போன்று ஒரே கோயிலில் இங்குச் சைவரும் புத்தரும் வழிபாடாற்ரு விடினும், இருவருக்கும் இது ஒரு புனித இடமாய் இருக்கிறது என்பதை மறுப்பார் யார்?

இத்தீவு அளவில் சிறியதாகும். சுமார் ஒரு கல் அகலமும் இருகல் நீளமும் கொண்டது இத் தீவு. இத்தீவில் பௌத்தமும் சைவமும் கால் கொண்ட போதிலும் இதில் பெரும்பாலும் சைவர் களே வாழ்கின்றார்கள். இங்குள்ள நாகபூஷணி அம்மைக்கு ஆண்டுதோறும் பெருவிழா நடைபெறு கிறது. ஆனி மாத நிறைமதி நாளிலேதான் அவ் விழா நிறைவெய்துகிறது. தமிழ் நாட்டு விழா முறைக்கு ஏற்பவே கொடியேற்றப் பெறுகின்றது. பத்து நாட்களிலும் பெருவிழாக்கள் நடைபெறுகின் றன. அம்மை வாகனங்களில் ஏறித் திருவுலா வரு கின்றனள். அவ்விழாவின் அங்கமாகிய தேரோட் டம் நடைபெறுவதற்காகவே இப்போது ஒரு தேர் செய்யப்பெற்று வருகின்றது. பழங்காலத்தில் செப்புத் தேரும் பவளத் தேரும் இக்கோயிலுக்கு இருந்தன எனவும், அவை அந்நியர் படையெடுப்புக் காலத்தில் அவர் கைப்படாதிருப்பதற்காகக் கடலி டை மூழ்த்தப்பட்டன எனவும் கூறுவர். எப்படி யாயினும், இவ்விழா முறை பன்னெடுங்காலமாக நடைபெற்று வருகின்றதென்பது உண்மை.

இவ்விழா வைகாசியை அடுத்த ஆனியில் நடை பெறுகிறது. இதற்குக் காரணம் என்ன? வைகாசி



விசாகம் புத்த பௌர்ணமியாகும். மணிமேகலைக்குத் தீவ திலகை 'அறவாழி வேந்தர்' தோற்றும் அப் புண்ணிய நாளை வைகாசி விசாக நாளாகத்தான் காட்டுகின்றாள். அந்த நாளிலேதான் அமுத சுரபி தோன்றி மணிமேகலையை அடைந்தது. அந்த நாள் புத்தர்களுக்கெல்லாம் பொன்னாள். புத்தர் பிறந்த நாளும், புத்தர் அருள் ஞானம் பெற்ற நாளும் அந்த நன்னாள் என்றே கூறுவர். எனவே, புத்தர்களுக்கு வைகாசி விசாகமே சிறந்த நாளாகும். அதாவது, வைகாசிப் பௌர்ணமி தொடங்கி அவர்தம் சிறப்புக்கள் நடைபெறும் போலும்! பல விடங்களிலும் நடைபெறும் புத்தர் விழா, இத்தீவி லும் அந்நாட்களில் சிறப்புற நடைபெறுமன்றோ? இங்குப் பெரும்பாலராய் வாழும் சைவரும் அந்நாளை ஒட்டி, அதற்கடுத்தாற்போலத் தம் நாகம்மையின் விழாக்களை அமைத்துக்கொண்டனரோ என்று நினைக்க இடமுண்டு. யாதொரு வேறுபாடும் காணு வகையில் கொள்கையளவில் வேறுபட்டுத் தாயும் சேயுமாய் அன்று வாழ்ந்த சமயங்கள் இரண்டும் ஒன்றி விழாவாற்றுவதில் வியப்பில்லையன்றோ? காவிரிப்பூம்பட்டினத்தில் கடலாட்டு விழாவில் சமய வேறுபாடே காண முடியாதே! அதே நிலையில் இந்த மணிபல்லவத் தீவில் வாழும் சைவரும் பௌத்தரும் விழாவாற்றிச் சிறந்தனர் என்னலாம்.

இத்தீவு ஒரு தனித்த மூலையில் கடல் நடுவில் இருந்தாலும், பல ஆயிரக் கணக்கான சைவரும் பௌத்தரும் காணும் தலமாய் உள்ளது. இதில் உள்ள மக்கள் விருந்தோம்பும் நல்லுள்ளங்கொண்ட வர்கள் என்பதை இங்குத் தங்கிய சிறிதுநேரத்தில் அறிந்தேன். இந்நாட்டில்—புத்த பீடிகை பூத்த நன்

ஞட்டில்—வளம் குறையாது மக்கள் வாழ்கின்ருர்கள் என்னலாம்!

> 'பசியும் பிணியும் பகையும் நீங்கி
> வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி'

வள்ளுவ முதுமகன் புகார் நகரில் முரசறைந்து விழாச் செய்தியைக் கூறினன் என்பர் ஆசிரியர் சாத்தனர். அவர்தம் வாக்கின் வழியே நானும், 'இம் மணிபல்லவம் பசி, பிணி, பகையற்று, வசியும் வளனும் பெற்றுச் சிறக்க!' என வாழ்த்துகின்றேன்!

# மங்கையர் இருவர்

## பழி ஏற்றவளும்—பழி தீர்த்தவளும்

தமிழ் நாட்டு இலக்கியங்களில் பெண்கள் சிறப்பாகவே போற்றப்படுகிருர்கள். தொல்காப்பியஞர் காலம் தொட்டு இன்று வரை பெண்கள் நிலை பெருமையாகத்தான் பேசப்படுகின்றது. இடைக்காலத்தில் சிற்சில வேளைகளில் பெண்களைப் பற்றிச் சிலர் இழிவாக எழுதி வைத்திருக்கின்றனர் எனினும், அவர்தம் எழுத்துக்கள் அழிந்து வருகின்றன என்பதை அறிகின்ருேம். மேலும், அறிவறிந்த நல்ல புலவர்கள் பெண் இனத்தைப் பெருமைப்படுத்தித் தான் பேசுகின்ருர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. தமிழ் நாட்டுப் பெண்மையே தனிச்சிறப்பு வாய்ந்தது. பெண்டிர் கடவுளரையும் ஏவல் கொள்ளும் கற்பு நெறியைத் தமிழ் நாட்டு இலக்கியங்கள் பாராட்டிப் பேசுகின்றன. மன்னரும் மற்றவரும்—ஏன்—கடவுளருங்கூட—வழி தவறி நடக்கும் காலத்திலெல்லாம் அவர்களுக்கு உண்மை நெறியினை எடுத்துக் காட்டி நாட்டை நேரிய வழியில் கொண்டு செலுத்திய பெண்கள் வரலாறுகள் நாட்டில் பலப்பல. எனவே, இந்நாட்டில் பெண்களை என்றும் இழிவுபடுத்தி வைததிருந்தார்கள் என்பது பொருந்தாது.

இந்த நிலையில் பிற நாட்டாருடைய காவியங்களைத் தமிழில் மொழிபெயர்த்த புலவர்களும் பெண் இனத்துக்கு ஏற்றம் கொடுத்தே பாராட்டுகின்ருர்

கள். வடமொழி இலக்கியங்கள் பல தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. அவற்றுள் மிகப் பெரிய அளவில் போற்றப்படுவன இராமாயணமும் பாரதமும் ஆகும். அவ்விரண்டினுள்ளும் இலக்கியச் சுவையில் இராமாயணமே சிறந்தது என்பது ஒருதலை. இவ்விராமாயணத்தைச் செய்தவர் கம்பர். கம்பரைப் பற்றி அதிகமாக ஒன்றும் தெரிந்துகொள்ள இயலவில்லை. கம்பரைப் பற்றி மட்டுமென்ன! தமிழ் நாட்டுப் புலவர் வரிசையில் சிறந்தவர்களைப்பற்றி — வள்ளுவர் முதல் கம்பர் வரை—விளக்கமாக அறிந்து கொள்ள வாய்ப்பில்லை. பிறந்த ஊர், வளர்ந்தகுலம், வாழ்ந்த வகை ஆகியவை பற்றிய வரலாற்றுக் குறிப்பு ஒன்றும் கிடையாது என்னலாம். நாட்டிலே கேட்டு அறியும் சில கதைகள் வெறுங்கதைகள் என்று ஒதுக்கிவிடத் தக்கனவேயன்றி வரலாற்றுக்கும் உண்மைக்கும் துணை செய்வன அல்ல. கம்பரைப்பற்றித் தமிழ் நாட்டில் வழங்கும் கற்பனைக் கதைகள் எத்தனையோ! அவர் பெயரைப்பற்றித் தான் எத்தனை காரணங்கள்! இவை அனைத்தையும் சரி என்று கொள்ளக்கூடிய ஆதாரங்கள் இல்லை. இங்கு நாம் அவற்றைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருப்பதைவிட, அவர் தம் கவிதைவழிக் கொண்ட பொருளை ஆராய்வது பொருத்தமாகும்.

கம்பர் வடநாட்டுக் கதையைத் தமிழில் மொழி பெயர்க்க முன்னின்றார். வடநாட்டுக்கும் தமிழ் நாட்டுக்கும் பழக்க வழக்கங்களில் எத்தனையோ வேறுபாடுகள் உள்ளன. கதையின் அமைப்பிலேயே பல மாற்றங்கள் செய்யவேண்டிய நிலை கம்பருக்கு ஏற்பட்டது என்பதை வான்மீகியாரையும் கம்பரையும் ஒத்து நோக்கினோர் நன்கு அறிவர்.



கம்பர் 'ஆசைபற்றி அறையலுற்ற' இந்த இராமாயணத்தை அவர் தம் நாட்டுக்கும் கலாசாரத்துக்கும் பண்பாட்டுக்கும் ஏற்ப மாற்றி அமைத்துக்கொண்டு விட்டார். இல்லையானால், அவர் கதை என்றோ அழிவுபட்டிருக்கும். எந்த இலக்கியமும் அது பயிலப் பெறும் நாட்டு மக்களது வாழ்வை ஒட்டி வழங்காவிட்டால் அழிந்து ஒழியும் என்பது வரலாறு கண்ட உண்மை. இந்த உண்மையை அறிந்த கம்பர், வான்மீகியாரது இராமாயணத்தையே மொழி பெயர்த்தார் என்றாலும், அதில் உள்ள கதைப் போக்கையும், அமைப்பையும் தமிழ் நாட்டு நிலைக்கேற்ப மாற்றி அமைத்துக்கொண்டார். காதல் வாழ்வினையும் கற்பு நெறியினையும் தமிழ்ப் பண்பாடு கெடாத வகையில் அமைத்துக்கொண்டார். அவர் காவியத்தில் பெண்களைத் தமிழ் நாட்டு முறைக்கேற்ப ஏற்றம் பெறப் பாடுவதை அனைவரும் அறிவர். அவர் பெண்டிர் பலரைச் சித்திரித்துள்ளார். சீதை தொடங்கி, மண்டோதரி வரை மகளிர் பலர் அவர் கைத்திறனால் போற்றப் பெறுகின்றனர். அவருள் இருவரைப்பற்றி இன்று இங்குக் காணுதல் பொருந்தும் என எண்ணுகிறேன்.

தயரதன் வாழ்வே தனியானது; அவிழ்க்க முடியாத முடிச்சுக்களையும், சிக்கல்களையும் நிறையக் கொண்டது. மகளிர் பலர் அவன் வாழ்வோடு பிணைந்துள்ளனர். அவன் அறுபதினாயிரம் மகளிரை மணந்தான் என்பர். இக்கூற்று உண்மையோ அன்றோ என நாம் ஆராய வேண்டா. அவனுக்குக் **கைகேயி, கோசலை, சுமித்திரை** என்ற மூவர் அரச மகளிர் மனைவியராய் இருந்தனர் என்பது நன்கு தெரிகின்றது. கம்பரும் வான்மீகியாரும் இம்மூன்று மனைவி

யரையும் நன்கு சித்திரிக்கின்றனர். இம்மூவருள் ஒருத்தியாகிய கைகேயி—பாவம்!—மிக்க கொடுமை படைத்தவளாகக் காட்டப்பெறுகின்றாள். வான் மீகத்தை ஒட்டிக் கம்பர் தம் காவியத்தைப் புனைந் தார் எனினும், கைகேயியைப்பற்றிக் கூறும்போது வான்மீகியார் கூற்றின் ஒரு பகுதியைக் கம்பர் கூற வில்லை. அதன் காரணம் என்ன என்பதை நாம் ஆராய வேண்டா! ஒருவேளை அவ்வழக்கம் தமிழ் நாட்டில் இல்லை என்ற காரணத்தால் விட்டிருக் கலாம். இனிக் கைகேயியைப் பற்றிக் கம்பர் வழிக் காண்போம்:

கைகேயி என்றவுடன் பெரும்பாலும் கற்ற வரும் மற்றவரும் கருதுவது அவள் மிகக் கொடிய வள் என்பதுதான். கம்பர் அவள் மகன் வாக்கி லேயே, அவளை அறிமுகப்படுத்தும் வகையில் பாடும் பாடல் அனைவர் உள்ளத்திலும் நிற்கும் என்பது உறுதி.

‘படரெலாம் படைத்தாளைப் பழிவளர்க்கும்
செவிலியைத்தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேனுக்கு
உயிர்ப்பாரம் குறைந்து தேய
உடரெலாம் உயிரில்லா எனத்தோன்றும்
உலகத்தே ஒருத்தி யன்றே?
இடரிலா முகத்தாளை அறிந்திலையேல்
இந்நின்ருள் என்னை ஈன்ருள்.’ (குகப். 70)

என்று பரதன் தன் தாயினைக் குகனுக்கு அறி வுறுத்துமுகத்தான் நமக்கெல்லாம் தன் அன்னை யைப்பற்றிக் கூறுகின்ருன். இன்னும் சில பாடல்களி லேயும் கம்பர் கைகேயியை இவ்வாறே காட்டுகின் ருர். ஆனல், உண்மையில் கைகேயி இவ்வாறு பழிக் கப்படத்தக்கவளா? பழி வளர்க்கும் செவிலியா?



இராமாயணக் கதையை ஆழ்ந்து நோக்குவார் ஓர் உண்மையை நன்கு உணர்வர். கம்பரும் சரி, வான்மீகியாரும் சரி, கைகேயியை மிக்க கொடுமை வாய்ந்தவளாகக் காட்ட விரும்பவில்லை. எனினும், உண்மை அறியா உலகம் தூற்றும் மொழிகள் எப்படி இருக்கும் என்பதைக் கற்பனைக் கண்ணுல் கண்டே அவ்வாறு அவளைப்பற்றி எழுதியுள்ளார் கள். ஆயினும், அவளது தூய உள்ளத்தையும், அவ்வுள்ளம் கற்பெனும் திண்மை பெற்று நின்ற திறனையும், அதன் வழி என்றென்றும் தன் கணவ னைச் சார இருந்த பழியைத் தன்மேல் ஏற்றுக் கொண்டு, உலகம் தன்னைப் பழிக்கினும் கவலாது தன் கணவனது பெரும்பழியைத் துடைத்து நின்ற சிறப்பையும் அவர்கள் சுட்டிக்காட்டாது விட்டுவிட வில்லை. கம்பர் பாடல்களில் ஆழ்ந்து பார்த்தோ மானல், இவ்வுண்மை தெரியாமற் போகாது. வான்மீகியாரோ, ‘கன்யா சுல்கம்’ என்ற ஒரு பகுதி யையே காட்டிவிட்டுச் செல்கின்ருர். நடந்த உண்மைதான் என்ன? உண்மை இதுதான்:

தசரதன் விரும்பியோ அன்றி வேறு காரணத் தாலோ ஆயிரக்கணக்கான பெண்களை மணந்திருந் தான் என்பது கதை. அதனல், தயரதன் பெண் களை மணப்பதில் சலிப்படையாதவன் என்பது நன்கு தெரிகின்றது. அவனைப்பற்றிப் பலவகையில் புகழ்ந்து பேசுகின்ற ஆசிரியர்கூட இந்த ஒன்றில் அவனைக் குறை கூருதிருக்க முடியாது. அத்துணைப் பேரளவில் அவன் மணந்து வாழ்ந்தது வெறும் புனைந்துரையேயாயினும், மூவர் மனைவியராய் இருந் தனர் என்பது மட்டும் உண்மையன்ருே? மகப்பேறு காரணமாகவோ அன்றி வேறு எதற்காகவோ

அவர் மூவரையும் பட்டத்தரசியராக்கி வாழ்ந்து வந்தான். மூத்தவள் கோசலை என்பவள் வாழ்ந்த போதே தசரதன் கைகேயியை இளையளாக வாழ்க்கைப்படுத்த விரும்பினன்; கைகேயிதன் தகப்பன் கேகய மன்னனை அடுத்து மகள் பேசினன். பட்டத்துக்கு உரியவளாய் ஒருத்தி இருக்க, வேறு எந்த மன்னன் தன் மகளை மற்றொரு தனி மனைவியாகக் கொடுக்க இசைவான்? கேகயனும் பெருமன்னன் தானே? எனவே, மூத்தவள் இருக்கத் தன் மகளை மறுதாரமாகத் தசரதனுக்குக் கொடுக்க முடியாது என்று திட்டமாகச் சொல்லிவிட்டான் கேகயன். கைகேயிதன் அழகில் தன்னை இழந்த தசரதன், எப்படியாவது அவளை மணக்க விரும்பினன். அரசியாக—பட்டமகிஷியாக—இருப்பது தனக்குப் பின்னல் அவளுக்குப் பிறக்கும் மகன் மன்னனய் நாட்டை ஆள்வதற்குத்தானே? அந்த அரச வாழ்வையே கைகேயிக்கு வழங்கிவிட்டால் என்ன என நினைத்தான் தசரதன்; பின்பு என்னவாகும் என்பதையும் எண்ணிப் பார்க்கவில்லை. அவன் தன் அயோத்தி நாட்டையே கைகேயிக்குக் 'கன்யா சுல்க'மாகக் கொடுக்க இசைந்து, அதைக் கேகயனுக்கும் அறிவித்துவிட்டான். பிறகு கேகயன் தன் மகள் கைகேயியைத் தசரதனுக்கு மணம் செய்து கொடுத்தான்.

'கன்யா சுல்கம்' என்பது வடமொழி—அதன் பொருள் என்ன? கணவன் மணம் செய்துகொள்ளும் போது மனைவிக்குப் பரிசாகத்தரும் சொத்து. அது அந்தப் பெண்ணுக்குச் சொந்தமாகிப் பின் அவள் மக்களுக்கே உரிமையாகிவிடும். மக்களில்லையானல், அவளுடைய தந்தை, சகோதரர் ஆகிய



அவள் வமிசத்தோன்றல்கள் அதைப்பெற உரிமை உடையவர்கள். அவள் கணவனே, அவன் வழி வேறு சுற்றத்தாரோ அதில் உரிமை கொண்டாட இயலாது. அந்த முறையில் பார்த்தால், தசரதன் கன்யா சுல்கமாகக் கொடுத்துவிட்ட அயோத்தி அரசில் அவனுக்கு ஒருவித உரிமையும் இல்லை. கைகேயி தன் விருப்பப்படி அவள் மகன் மூத்தவனகி அரசாட்சியைக் கைக்கொள்ளும் வரையில் தசரதன் அயோத்தி அரசை ஆண்டான். மேலும், என்னதான் 'கன்யா சுல்க'மாயினும், கணவன் உள்ள வரையில் தன் உரிமையை அதன்மேல் நாட்டாது, நாடு போற்றும் நல்ல அரசனய்த் தன் கணவன் வாழவேண்டும் என்ற கற்புடைப் பெண்டிர் கருதும் நல்லுணர்வோடு அவனையே ஆள வைத்தாள் கைகேயி; அத்துடன் அந்தப் பேரரச வாழ்வையும் போகத்தையும் தனக்கெனத் தனி உரிமை கொண்டாடாது தன் சகக்களத்தியரோடு இயைந்து வாழ்ந்தாள். அத்துடன் அரசுக்கு உரியனன தன் மைந்தனையே பாராட்டாது அவனினும் மேலாக மூத்தவனகிய கோசலை மைந்தன் இராமனைக் கண்ணின் மணியெனப் போற்றினள்; அரசனுக்கு மாற்ருரால் இடர் வந்தபோது, தானே போர்களத்தில் உடன் இருந்து உதவினள். இவ்வாறு உண்மை மனைவியாய்—ஒழுக்கம் நிறைந்தவளாய், கணவன் நலத்திலும், அவன் குடும்ப நலத்திலும், அவன் நாட்டு நலத்திலும் கண்ணுயிருந்த கைகேயியா பின்னர் இப்படி மாறினள்? மாறினதற்குக் காரணம் என்ன?

இந்த உண்மைகளெல்லாம் எப்படி அறிய முடியும்? இது நல்ல கேள்விதான். ஆயினும், கம்பர்

பாடல்களைக் கொண்டே இவற்றையெல்லாம் நன்கு அறிதல் கூடும்; மற்றும் கதை நிகழ்ச்சியைக் கொண்டும் அறிய வழி இருக்கிறது. தசரதன் கடைசி வரை கைகேயியிடம் நீங்காக் காதல் கொண்டிருந்தான் என்பது உண்மை; ஆயினும், மூத்த மகனாகிய இராமன்மேல் அதிக அன்பு வைத்திருந்தான்; மேலும், தான் அயோத்தி அரசைக் 'கன்யா சுல்க' மாகக் கொடுத்த இரகசியத்தை வசிட்டர் உட்பட யாவருக்கும் சொல்லவில்லை என்பதும் தெரிகிறது. எனவே, அவர்கள் மூத்தவனாகிய இராமனுக்குப் பட்டம் கட்டாது பரதனுக்கு நாடு உரியது என்று சொன்னால் ஏற்றுக்கொள்வார்களா? எனவேதான் பரதனை அவன் பாட்டன் வீட்டுக்கு அனுப்பிவிட்டு, அவன் இல்லாத சமயத்தில் இராமனுக்கு அயோத்தி அரசினை நல்க நினைத்தான் தசரதன். ஆயினும், உண்மைக்கு மாறுபட்டுத் தன் கணவன் செய்வதைக் கைகேயி விரும்பவில்லை. ஆனால், அதைக்கூட முதலில் அவள் எண்ணிப் பார்க்கவில்லை; கூனி எடுத்துக்காட்டிய பிறகே உண்மையை உணர்ந்தாள்; கூனி கைகேயிதன் தாய் வீட்டிலே அவளுக்கு உடன் துணையாய் உதவி புரிபவளாய் இருந்திருப்பாள். எனவேதான் அவளுக்கும் 'கன்யா சுல்க' உண்மை தெரிந்திருந்தது. தன் கணவனுக்கு வையம் உள்ளளவும் உண்டாகப் போகும் வசையினை நினைத்தாள் கைகேயி. வாய்மையும் மரபும் காக்கும் வள்ளலாகிய தன் கணவன், உலகமுள்ளளவும் 'கொடுத்ததை இல்லை என்று மாற்றிவிட்டான்' என்று வசை பெற்று வாழ்வதா என எண்ணிற்று அவள் உள்ளம். அக்கொடுமையை எண்ணிப் பார்க்க முடியவில்லை



அவளால். ஆம்! சிந்தித்தாள் — சிந்தித்தாள் — நெடிது சிந்தித்தாள். கடைசியில் அவளுக்கு ஒரே வழிதான் தோன்றிற்று. தன் கணவன் பழியற்றவனாக—வாய்மை உள்ளவனாக—உலகம் உள்ளளவும் போற்றப்பட வேண்டுமானால், தான் அந்தப் பாவத்தையும் பழியையும் ஏற்றுக்கொள்வதன்றி வேறு வழி இல்லை என்பதைக் கண்டுகொண்டாள்; தனக்கு அழியாப் பழி வரும் என்று அவள் கவலவில்லை. எப்படியும் தன் கணவன் பழியற்றவனாய் உலகில் காட்சியளிக்கவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டாள். அந்த நல்ல முடிவினால் தன் வாழ்வும் சீரும் இழக்க நேரும் என்பது அவளுக்குத் தெரியும். தன்னைப்பெற்ற மகனே பழிப்பான் என்பதையும் அவள் உணர்வாள்; உண்மை உணராத உலகத்தவர் என்றென்றும் தன்னை வசைச்சொற்களால் இகழ்வர் என்பதையும் உணர்வாள். என்றாலும், அவை அனைத்தும் தன் கணவன் குற்றமற்றவன் — உலகம் போற்றும் உத்தமன்— எனப்படுவான் என்ற ஒன்றின் முன் ஓடி மறைந்தன. எனவே, அவள் தன் உள்ளத்தைக் கல்லாக்கிக்கொண்டாள்; எது வரினும், யார் கூறினும் தான் கொண்டதில் மாற்றம் கொள்ளலாகாது என்று உறுதி பூண்டாள்; அந்த உறுதி வழியே கடைசி வரையில் வாழ்ந்து — செயலாற்றி — தன் கணவன் புகழை வாழவைத்துவிட்டாள். அவளைக் காட்டிலும் சிறந்த கற்புடைப்பெண் — அறத்தாறு வாழ்ந்த செல்வி—நல்ல உள்ளத்தாள்—தியாகி— வேறு யாரைக் காட்ட முடியும்? அறிஞர்கள் ஆழ்ந்து எண்ணிப் பார்த்து முடிவு செய்யட்டும்.

இராமனுக்குப் பட்டாபிஷேகம் நடத்தும் முயற்சி பல நாள் முயன்று, பலரும் கலந்து பேசிச் செய்யப் பட்டது அன்று. அது பெற்ற தாயரும் அறியா வகையில் திடீரென ஒரு நாள் முடிவு செய்து மறு நாள் நடைபெற ஏற்பாடு செய்த நிகழ்ச்சி. பழங் காலப் புராண வரலாற்றிலும் சரி, இக்காலச் சரித வரலாற்றிலும் சரி, இது போன்ற ஒரு பட்டாபிஷேக நிகழ்ச்சியை யாரேனும் காட்ட முடியுமா? ஒரு மன்னன் தன் மகனுக்கு முடி சூட்டும் விழா உலகறிந்த விழாவன்றோ? ஆனால், இராமனுக்கு இயைந்த விழா ஏன் அப்படி அவசரக்கோலம் ஆக்கப்பட வேண்டும்? அது எப்படியாயினும், அந்த முடி சூட்டு விழாவைப் பற்றிக் கைகேயிக்கு முதல் முதல் உரைத்தவள் கூனிதான். ஆம்! அரசவையில் நடைபெற்றபேச்சு அந்தப்புரத்துக்கு எட்டவில்லை. கூனி எப்படியோ கேட்டறிந்தாள். அவள் கைகேயியுடன் தாய் வீட்டிலிருந்து வந்தவள் ஆதலால், அவள் நலத்தில் அக்கறை கொண்டு அறிந்தாள். அதைச் சென்று அவள்தான் முதன் முதலாகக் கைகேயிக்குக் கூறுகின்றாள். இது நிற்க.

அரசன் தசரதன் தன் மகன் இராமனுக்கு அரசைத் தரப்போவதாகத் தடுமாறிப் பல மன்னர் தங்கிய தன் பேரவையில் கூறுகிறான். பின்பு அனைவரும் இராமன் அரசன் ஆதற்கு ஏற்றவனே என்று கூறினர். அதற்குள் மன்னவன் சிந்தையில் தடுமாற்றம் உண்டாகிறது; தான் சொல்லியது சரியோ தவறோ எனக் கருதுகின்றான். இராமனுக்கு உரியதல்லாத அரசைத் தான் அவன்மீது கொண்ட அன்பினால் அவனுக்குத்தர இசைந்ததை எண்ணிற்று அவன் உள்ளம். எனினும், மற்றுமுள்ள



மன்னவர்கள் அவன் அரசனாதல் தகும் என்றார்களே, அதன் காரணம் அறியின் அதன்படி ஒரு வேளை தன் மகனுக்கு அவ்வரசை உரிமையாக்க முடியுமா என எண்ணினான். அவர்களையே காரணம் கேட்கிறான். இந்தத் தொடக்க நிலையிலேயே கம்பர் தசரதன் செய்ய நினைத்த தவற்றையும், அவன் உள்ளத் தடுமாற்றத்தையும் காட்டுகிறார். இதோ அவர் செய்யுள்:

'மகன்வயின் அன்பினால் மயங்கி யான்இது
புகலநீர் புகன்றஇப் பொம்மல் வாசகம்
உகவையின் மொழிந்ததோ, உள்ளம் நோக்கியோ,
தகவென நினைந்ததுஎத் தன்மை யால்?' என்றான்.

(மந்திர. 81)

இதில் அவன் தடுமாற்றம் நன்கு தெரிகின்றது. தான் தன் மகன்மேல் கொண்ட அன்பினால் சொல்லிய வாசகத்தைத் துறந்து, பிள்ளைப்பாசத்தால் மயங்கிப் புகன்றதை நினைக்கிறான். அனைவரும் அதை ஏற்றுச் சரி என்பதற்கு என்ன காரணம் காட்டுகின்றனர் என அறிய நினைத்தான்; அதையே தானும் கைகேயிக்கோ — கேகயனுக்கோ காரணம் காட்டித் தப்பித்துக் கொள்ளலாம் என நினைத்தான். அவன் எண்ணம் வெளிப்பட்டுவிட்டது. பிறகு அவர்கள் ஏதேதோ சொல்லுகிறார்கள். அவனும் அவற்றை ஏற்றுப் பாச மயக்கத்தால் சொல் தவறி இராமனுக்குப் பட்டம் கட்டுதல் என்ற முடிவினை அப்போதே உறுதி செய்துவிட்டான். இதிலே கம்பர் அவன் தவற்றினைக் காட்டிவிட்டாரல்லரோ? அன்றேல், மற்றவரை நோக்கி அவன் அவ்வாறு கேட்கக் காரணம் இல்லையே! இது நிற்க.

இப்பட்டாபிடேக நிகழ்ச்சியைக் கூனி கைகேயியிடம் வந்து சொல்லுகின்றாள். கேட்ட கைகேயி முன்னைய நிகழ்ச்சிகளையெல்லாம் மறந்துவிட்டவளாய் மிகுந்த மகிழ்ச்சி அடைந்து, தன் முத்துமாலையைக் கூனிக்குப் பரிசாக அளிக்கின்றாள். அவள் உள்ளத்தூய்மையைக் கம்பர் இங்கு நன்கு காட்டியுள்ளார். இராமனைத் தன் மகனாக உடைமையின் தனக்குத் தீங்கு வாராது என்கின்றாள் கைகேயி.

'விராவரும் புவிக்கெலாம் வேத மேயன
இராமனைப் பயந்தஎற்கு இடர் உண்டோ?'
(மந்தரை சூழ். 146)

என்று பெருமைப்படுகிறாள். கோசலை பெறுகின்ற சிறப்பினை,

'மன்னவன் மன்னனேற் கணவன்; மைந்தனேல்
பன்னரும் பெரும்புகழ்ப் பரதன்; பார்தனில்
என்இதன் மேல்அவட்கு எய்தும் வாழ்வு?'
(மந்தரை சூழ். 149)

என்று தசரதனைக் கணவனாகவும் பரதனை மைந்தனாகவும் பெற்ற கோசலைக்கு இதனினும் மேலான சிறப்பு ஏது என்கின்றாள். இப்படி இராமனைத் தன் மைந்தனாகவும் பரதனைக் கோசலை மைந்தனாகவுமே பாராட்டுகின்றாள் கைகேயி. அவள் உள்ளம் கோசலையின் உள்ளத்தோடு ஒன்றிவிட்டது. 'மங்கை உள்ளமும் ஆற்றல் சால் கோசலை அறிவும் ஒத்த,' என்று இதையே கம்பர் பேசுகின்றார். இக்கைகேயி இராமனுக்குப் பட்டம் என்றவுடன் நாயகமனைய மாலை நல்கியதில் வியப்பென்னை?

ஆனால், கூனி அத்துடன் அமையவில்லை. இராமன் பட்டம் பெற்றால் அவன் தாயும், அவள் சுற்றத்தாரும், அவரைச் சார்ந்தாருமே பெருமை



பெறுவரென்றும்; கைகேயியும் அவளைச் சேர்ந்தோர் அனைவரும் சிறுமையுறுவரென்றும் காட்டுகிறாள். அவற்றையெல்லாம் கேட்டும் கைகேயி மனம் மாறவில்லை. அதற்குப் பதில் கூனியைக் கடிகின்றாள் அவள்; இராமனையும் பிறரையும் பழித்துரைத்த அவள் நாவை அறுக்கவேண்டும் என்கின்றாள். மேலும்,

'எனக்கு நல்லையு மல்லைநீ; என்மகன் பரதன்
தனக்கு நல்லையு மல்லை;அத் தருமமே நோக்கின்
உனக்கு நல்லையு மல்லை;வந்து ஊழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தோய்!'
(மந்தரை சூழ். 164)

என்கின்றாள். ஆனால், கூனி அவற்றிற்கெல்லாம் அஞ்சாது மேலும் பேசினாள்; பலப்பல பேசினாள். ஆனாலும், அவற்றையெல்லாம் பொருட்படுத்தவில்லை கைகேயி. கடைசியில் கூனி, தசரதன் தன் அயோத்தி அரசைக் 'கன்யா சுல்க'மாகக் கொடுத்ததையும், அது வழி வழி அவள் மக்களுக்கே உரிமையாகி வரவேண்டுமென்பதையும், அவ்வாறன்றேல், அரசனுக்கு என்றென்றும் பழி சேருமென்றும் எடுத்துக் காட்டுகின்றாள். அவள் கூறியதைக் கம்பர் வாக்கிலே காண்போம்:

'கெடுத்தொ ழிந்தனை உனக்கரும் புதல்வனைக் கிளர்நீர்
உடுத்த பாரகம் உடையவன் ஒருமகற் கெனவே
கொடுத்த பேரரசு அவன்குலக் கோமைந்தர் தமக்கும்
அடுத்த தம்பிக்கும் ஆம்;பிறர்க்கு ஆகுமோ?' என்றாள்.
(மந்தரை சூழ். 175)

இதற்குத் தன் ஒரு மகனாகிய இராமனுக்குக் கொடுத்த பேரரசு அவன் வழி வழிச் செல்லுமேயன்றிப் பரதனைச் சாராது. ஆகவே, அதைத்

தடுக்க வேண்டுமெனக் கூனி கூறியதாகப் பொருள் கொள்ளுவர் பலர். ஆனால், ஆழ்ந்து சிந்தித்தால் உண்மை புலப்படும். இந்தப் பாட்டைக் கேட்டவுடனே கைகேயி மனம் மாறிவிட்டது என்று அடுத்த பாடல் கூறுகின்றது. அவர்கள் சொல்லும் பொருள்வழி ஆராய்ந்தால், முந்திய பாடல்களில் காணாத புதுக்கருத்து ஒன்றும் இதில் இல்லையே! பின்னர் ஏன் இதைக் கேட்டுக் கைகேயி மனம் மாறினாள் என்று கேட்கத்தோன்றுமல்லவா? ஆம்! மறந்த கைகேயியை விழிக்கச்செய்யும் பொருள் இதில் இயைந்து கிடக்கிறது. அது என்ன?

'உன்னை மணந்துகொள்ளும் நாளில் தன் அயோத்தி அரசைத் தசரதன் உனக்குக் கன்யா சுல்கமாக ஈந்தமையின், அன்றே அந்த அரசு உன் மகன் பரதனுக்கு உரிமையானதுதான். இனி அது அவனுக்கும் அவன்வழி வருவார்க்கும் உரிமையாகுமல்லது பிறர்க்கு ஆகுமா?' என்று கேட்கின்றாள் கூனி. 'பிறர்க்காகுமோ?' என்று அவள் கேட்பதே இப்பொருள் பற்றித்தான். மேலும், இராமனுக்கு இனித்தான் பாரினைக் கொடுக்கப்போகிறான் மன்னன். இதில் இறந்த காலத்தில் 'கொடுத்த பார்' என்றே இருக்கிறது. மேலே கண்டபடி இராமனுக்குப் பார் கொடுத்த பொருள் கூறுவராயின், 'பிறர்க்காகுமோ?' என்ற தொடரின் பொருள் நன்கு புலப்படாதன்றோ? எனவே, இப்பாட்டால் கூனி கைகேயி இராமன் பட்டம் சூடிக்கொள்ளப் போவதில் உண்டான மகிழ்ச்சிப் பெருக்கில், மன்னவன் வாக்கை மறந்ததையே நினைவூட்டுகின்றாள் என்பது பொருந்தும். ஆம்! இதைக்



கேட்டபின் நெடிது நினைத்த கைகேயி, மனம் மாறினாள்; இல்லை; மாறிவிட்டவளாக நடித்துப் பாவமும் பழியும் ஏற்றுத் தன் கணவனை 'வாய்மையும் மரபும் காத்த வள்ளல்' ஆக்கினாள்!

பின்பு அவன் சொல் தவறாதிருக்க வழி என்ன என்று கூனியோடேயே ஆய்கின்றாள். கூனியும் தன் நாட்டுப் பெருமகள்—கைகேயி—தன் கணவனைக் காத்த புகழினைப் பெறவேண்டும் என்று முடிவு செய்து அவளது ஆய்வுக்குத் துணையானாள். அவன் தந்த வரம் இரண்டு உள்ளன. ஒன்றால் இராமன் காட்டுக்குச் செல்லவும், மற்றொன்றால் பரதன் முடிசூட்டிக்கொள்ளவும் செய்ய வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. 'ஆம்! தன் அரசைத்தான் பெற்றுக்கொண்டாள். இராமனைக் காட்டுக்கு அனுப்பியது ஏன்?' என்ற கேள்வியும் எழும். ஆனால், கைகேயி அதையும் நெடிது யோசித்தே முடிவு செய்தாள். இராமன் நாட்டிலே இருந்து பரதன் நாடாளும் நிலையில் அமைதி விளையுமா? பரதன் அயோத்தியில் அதிக நாள் தங்காமையினாலோ அன்றி ஏனோ அவனைக்காட்டிலும் அந்நாட்டு மக்கள் அதிகமாக இராமனிடம் அன்பு கொண்டிருந்தார்கள். ஒருவேளை மக்கள் அவ்விராமன் வழி நின்று நாட்டை இரண்டாக்கினால் நலமின்றே என எண்ணினாள் கைகேயி. அவள் இராமனிடத்தில் அளவுக்கு மீறி—ஏன்—பரதனிடத்துள்ள அன்பினைக்காட்டிலும் அதிகமாகவே அன்பு கொண்டிருந்தாள் என்பது உண்மைதானே! அவள் அவ்வாறு மாறினாள் என்றால், அது எப்படியாவது மன்னவன் பழியாளனாக வேண்டா என்பதற்காகவே ஆகும். அப்படி ஒருவேளை மன்னவன் தான் வேண்டுவதை மறுப்பா

ஞயின், இராமனுக்கு முடி சூட்டுவதையே மேற்கொள்வாஞயின், அவனை உலகம் பழிப்பதன்முன் —அப்பழிச்சொல் தன் செவிப் புகுமுன் — தான் இறப்பதாகவும் கூறுகின்ருள் கைகேயி. அதையும் அன்றே—இராமன் முடி சூட்டுமுன்பே—செய்தாக வேண்டும். இவற்றையெல்லாம் கம்பர்,

'நன்று சொல்லினை! நம்பியை நளிர்முடி சூட்டல்
துன்று கானத்தில் இராமனைத் துரத்தல்இவ் விரண்டும்
இன்றுஎய் தாவெனில் அரசன்முன் என்உயிர் துறந்து
பொன்றி நீங்குதல் புரிவன்யான்; போதிநீ,' என்ருள்.

(மந்தரை சூழ். 183)

என்று நன்கு விளக்கிக் காட்டியுள்ளார். பிறகு மேல் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இவ்வாறு கம்பர் கைகேயியைத் தூய உள்ளமுடையவளாகவே காட்டுகின்ருர். அவள் மனம் திரிந்த போது 'தேவி தூய சிந்தையும் திரிந்தது' என்றும், 'நல்லருள் துறந்தனள்' என்றும் குறிக்கின்ருர். எனவே, கைகேயி அருளற்றவளாகக் காட்டி உலகப் பழியைத் தன்மேல் ஏற்று, தன் கணவனை வழி வழி வரும் பழியினின்று காத்தாள் என்பது புலனுகும். இனி இக்கைகேயி தூயவள் என்பதைப் பிறர் வாக்குகளால் கம்பர் எவ்வெவ்வாறு காட்டுகிருர் என்பதைக் காண்போம்:

தசரதன் கைகேயி கேட்ட இரண்டு வரத்தையும் அறிந்து திடுக்கிட்டான்; 'நல்லவளாகிய கைகேயியா இப்படி மாறிவிட்டாள்!' என்று நினைக்கின்ருன்; 'அவள் நல்லவள்; வேறு யாரோ தாம் அவள் மனத்தை மாற்றியிருக்க வேண்டும்!' என்று எண்ணுகின்ருன்; 'நீ திகைத்தது உண்டோ? பொய் நிலையோர்கள் புணர்த்த வஞ்சமுண்டோ?'



என்றுதான் கேட்கின்ருன். எனவே, தசரதன் கைகேயி இயல்பில் நல்லவள் என்றும் எப்படியோ மாறிவிட்டாள், அன்றி மாற்றப்பட்டாள் என்றும் கூறுகின்ருன். அப்படி அவளை மாற்றியது யாது என்பதைத்தான் அவனுல் அறிந்துகொள்ள முடியவில்லை. ஆயினும், உள்ளதைக் கம்பர் குறிப்பால் உணர வைக்கிருர். 'என்மேல் சாரவேண்டிய வசையைக் கைகேயிமேல் சாற்றி நான் புகழொடு மாய்வேன்,' என்கின்ருன் தசரதன்.

'ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம்; என்சேய் வனமாள,
மாய்ந்தேன் நான்போய் வானுல காள்வேன்; வசைவெள்ளம்
நீந்தாய் நீந்தாய் நின்மக னேடும் நெடிது!'என்ருன்.

(கைகேயி சூழ். 44)

என்று கம்பர் காட்டுவது நோக்கத்தக்கது. இதற்கு முன்னர்க் கைகேயி பல வகையில் தன் கணவன் தன் சொற்படி அரசைத் தன் மகனுக்குத் தாராவிடில் அவனை உலகம் என்றென்றும் பழிக்கும் என்றும், அவனே சொன்னபடி நடவாவிட்டால் உலகில் வேறு யார் வாய்மையைக் காக்க முடியும் என்றும், அவ்வாறு சொல் மறுப்பது ஒரு வேளை ஆணையின் உரமாகலாமே ஒழிய அறமாகாது என்றும் கூறிக் காட்டி, அவ்வாறு அறம் திறம்பி மற வழியில் பழி ஏற்று என்றும் தசரதன் வாழ நினைப்பாஞயின், அக்கொடுமைகளையெல்லாம் பார்த்துக் கொண்டு தான் வாழ விரும்பவில்லை என்றும், அதஞல் தசரதன் என்றென்றும் வசையேற்று வாழ வேண்டியிருக்கும் என்றும் எடுத்துக்காட்டுகிருள். அவ்வாறு ஒரே பிடியாய் இருந்து உள்ளம் தடுமாற்றம் அடையாது தன் விழைவை நிறைவேற்ற நினைப்பதால் தனக்கு எப்பழி வரினும் வருக என்று

உறுதி கொள்ளுகின்ருள். இவையெல்லாம் கம்பர் பாடல்கள் நமக்குக் காட்டுகின்றன :

'திசைத்தது மில்லே; எனக்குவந்து தீயோர்
இசைத்ததும் இல்லே;முன் ஈந்தஇவ் வரங்கள்
குசைப்பரி யோர்தரின் இன்றுகொள்வென்; அன்றேல்
வசைத்திறன் நின்வயின் நிற்கமாள்வன்,' என்ருள்.
(கைகேயி சூழ். 18)

இன்னே இன்னே பன்னி இரந்தான் இகல்வேந்தன்;
தன்னே ரில்லாத் தீயவள் உள்ளம் தடுமாருள்,
'முன்னே தந்தாய் இவ்வரம் நல்காய்; முனிவாயேல்
என்னே மன்னு! யார்உளர் வாய்மைக்கு இனி?'என்ருள்.
(கைகேயி சூழ். 30)

இரந்தான் சொல்லும் இன்னுரை கொள்ளாள் முறைஎஞ்சாள்
மரந்தான் என்னும் நெஞ்சினள் காணுள் வசைபாராள்,
'சரந்தாழ் வில்லாய்! தந்த வரத்தைத் தவிர்கென்றல்
உரந்தான் அல்லால் நல்அறம் ஆமோ? உரை,'என்ருள்.
(கைகேயி சூழ். 34)

இப்பாடல்கள் எண்ணிப் பார்க்கத் தக்கன அல்லவோ?

தசரதனை விட்டுப் பரதனை நோக்குவோம்: அவன் தன் தாயின் செயலுக்கு அவளைப் பல வகையில் பழிக்கின்ருன்; முகம் கொடுத்துப் பேசவில்லை; கோசலையிடம் சென்று தான் அறியாத் தவறு என்று தன்னை நல்லவனுக்கிக்கொள்ளுகிருன். பாவம்! தன் தாய் பழியை ஏற்று அச்சூரிய குலத்துக்கே என்றென்றும் அழியாது நிற்க இருந்த பழியை மாற்றினுள் என்பதை நன்கு அறியாத பிள்ளை அவன்! அவன்வாயிலாகவும் கம்பர் கைகேயி தன் செய்கையால் அறநெறிக்குக் குறையுண்டாகாது எனக் காட்டுகிருர். மன்னன் இறக்கவும்



இராமன் காடு சென்றதும், தான் ஆளநினைப்பதும் கோளே அன்றி—கெட்டகாலமே அன்றி—அதனுல் அறநெறி குறைவுபடாது என்கின்ருன் பரதன்.

'மாளவும் உளன்ஒரு மன்னன்; வன்சொலால்
மீளவும் உளன்ஒரு வீரன்; மேயபார்
ஆளவும் உளன்ஒரு பரதன் ஆயினுல்
கோள்அலது, அறநெறி குறையுண் டாகுமோ?'
(பள்ளியடை. 73.)

என்ற கம்பர் பாடல் இவ்வுண்மையை விளக்குகிறதன்ருே?

இவைகளுக்கெல்லாம் மேலாக இராமனது சிந்தையும் செயலும்—ஏன்—சொல்லுங்கூடத்தான் அயோத்தி அரசுக்குத் தான் உரியவன் அல்லன் என்பதையே காட்டுகின்றன. தயரதன் அழைத்து, 'அயோத்தி அரசை ஏற்றுக்கொள்,' என்று கூறியவுடன் இராமன் மனத்தில் போராட்டம் எழுந்துவிட்டது. அதுவரையில் அமைதியாய் இருந்த அவன் உளத்தே ஓயா அலை எழுந்துவிட்டது. அவன் தான் செய்வது முறையா—அறமா—என எண்ணி எண்ணிப்பார்க்கின்ருன். அரசு பரதனுக்கு உரியது என்பதை அவன் முன்னமே எவ்வாருே அறிந்திருக்கிருன். அதற்கேற்ற சூழ்நிலையிலேதான் பட்டம் சூட்டும் விழா உருவாகின்றது. இதை நினைத்துப் பார்க்கிருன். தந்தை சொல்லைத் தட்டவும் முடியவில்லை அவனுக்கு. அதே வேளை அரசனுகப் போகின்ருேம் என்று மகிழவும் முடியவில்லை. எனவேதான், அவன் உள்ள நிகழ்ச்சி பற்றிப்—பாவம்!—கம்பர் ஒன்றுமே சொல்லவில்லை. வசிட்டர், 'நாளை பட்டாபிடேகம்,' என்கின்ருர் இராமனிடம். அவன் மகிழ்ந்தானு, வெறுத்தானு, அன்றி வேறு பேசினுனு? ஒன்றுமே சொல்லவில்லை கம்பர்.

அவனைச் சிந்திக்க விட்டுவிட்டார். 'பட்டம்' என்ற வசிட்டரே மேலே பல பாடல்களுள் அரசர் எவ்வெவ்வாறு இருக்க வேண்டும் என்று பேசுகின்றார்; பேசிப் பிறகு அவன் உளத்தை அறியாமலே அருகில் உள்ள கோயிலுக்கு அழைத்துச் சென்றுவிடுகின்றார் வசிட்டர். இராமன் மனக்கருத்து என்ன என்று கூட எண்ணவில்லை வசிட்டர். ஆகவே, பட்டத்துக்கு முன் இராமனது உடன்பாட்டைப் பெருமலே—அவன் உள்ளப் போராட்டத்தை உணராமலே–எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்றுவிட்டன என்பது தெரிகிறது.

பின்பு இராமன் கைகேயிதன் வாயிலை நண்ணுகின்றான்; தாயைக் காணும் சேயென விரைகின்றான். அவளும் அது வரை தாயாய் இருந்தாள். நெஞ்சை மரமாக்கி மாற்ற இயலாதபடி நின்ற அவள், கூற்ருய் அவன் முன் தோன்றினள்; பரதன் நாடாள இராமன் காட்டுக்குப் போக வேண்டும் என்கின்ருள். அதைக் கேட்டதுந்தான் அவன் முகம் மலர்கின்றது. தந்தையின் கட்டளை அவன் உள்ளத்தை ஆட்டி அலக்கண் செய்தது. அவன் தந்தை சொல்லுக்கு அஞ்சியே முடி சூடிக்கொள்ள இசைந்தான் என்கின்ருர் கம்பர். அதற்கு முன் தயரதன் பல காரணங்களை முன் காட்டி முடி சூட்டு விழாவினைப் பற்றி இராமனிடம் கூறிய போது விருப்பு வெறுப்புற்று அரசன் பணியாகையால் மறுத்துரைக்க அஞ்சினன் என்றே கூறுகின்ருர் கம்பர்.

'தாதை அப்பரிசு உரைசெயத் தாமரைக் கண்ணன்
காத லுற்றிலன் இகழ்ந்திலன் கடன்இதென்று உணர்ந்தும்
'யாது கொற்றவன் ஏவியது? அதுசெயல் அன்றே
நீதி யெற்கு?'என நினைந்துதன் பணிதலை நின்ருன்.'

(மந்திர. 72)



இராமன் அப்பட்டத்தை இகழ வேண்டியவன். அதுவே கடமை என்றும் அவன் உணர்ந்திருந்தான். அவன் அதைக் காதலிக்கவில்லை. கடமை என்று உணர்ந்தும் மறுக்கவில்லை. காரணம், அரச ஆணைக்கு அஞ்சியதே. அஞ்சித் தான் இசைந்ததாகவுங் காட்டிக்கொள்ளவில்லை. அரசன் சொற்படி நடக்கட்டும் என்றும் தன் வேலைமேல் சென்றுவிட்டான் அவன். இதை மேற்கண்ட கம்பர் பாட்டு நன்கு விளக்குகிறது அன்ருே? இந்த அச்சத்தைத் தாயாகிய கைகேயியிடம் கூறுகின்ருன். அக்கூற்றைக் கம்பர் தம் வாக்கிலே காட்டுகின்ருர் :

தெருளுடை மனத்து மன்னன் ஏவலின் திறம்ப அஞ்சி
இருளுடை உலகம் தாங்கும் இன்னலுக்கு இயைந்து நின்ருன்,
உருளுடைச் சகடம் பூண்ட உடையவன் உய்த்த காரேறு
அருளுடை ஒருவன் நீக்க அப்பிணி அவிழ்ந்தது ஒத்தான்.

(கைகேயி சூழ். 296)

என்பது கம்பர் பாட்டு. இதில் இராமனது விருப்பமின்மை நன்கு விளங்குகின்றது. கைகேயி உள்ளம் அருள் உள்ளமாகக் காட்சி அளிக்கின்றது. இராமன் முடி சூட்டிக்கொள்ள விரும்பவில்லை என்பதற்கு இதனினும் வேறு சான்று வேண்டுமோ? கைகேயி போலவே தான் மேலும் நாட்டில் இருந்தால் மக்கள் வழி அமைதி குலையும் என்று கண்ட இராமன், 'இன்றே மின்னெளிர் கானம் போகின்றேன்,' என்று விடையும் கொண்டு புறப்பட்டுவிட்டான்.

பின்பு கோசலையிடத்து நிகழ்ச்சியைக் கூறுங்கால் அவள் வருந்தி வீழ, அவளைத் தூக்கி நிறுத்திய இராமன், பரதன் ஆளவும் தான் காடேகவும் செய்த ஏற்பாடே நல்லது என்றும், அன்

றேல், அரசன் பொய்யன் ஆவன் என்றும் காட்டுகின்றான் இராமன். கோசலை வருந்த இராமன் நாடாள்வானாயின் மன்னன் கொடுத்த வாக்கை நிறைவேற்றாத பொய்யன் ஆகானோ!

‘பொய்த்தி றத்தினன் ஆக்குதி யோபுகல்
மெய்த்தி றத்துநம் வேந்தனை ?’ (நகர் நீங். 312)

என்று கேட்கின்றான் இராமன். மேலும் பரதன் அரசாள்வதனால் தந்தையை வாய்மையாளன் ஆக்கினான் என்பதை,

‘சிறந்த தம்பி திருவுற எந்தையை
மறந்தும் பொய்இலன் ஆக்கினன்’ (நகர் நீங். 314)

என்று காட்டுகின்றான். இவ்வாறு எத்தனையோ இடங்களில் இராமன் பரதன் நாடாள்வதே முறை என்பதை வற்புறுத்துகின்றான். அவற்றையெல்லாம் காட்டிக்கொண்டே சென்றால் பேச்சு விரியும். இறுதியாகப் பரதன் பிறந்ததனால் அயோத்தி அரசு அப்பரதனுக்கே உரிமையாயிற்று என்று கூறுவதைக் கண்டு மேலே செல்லலாம்.

அயோத்தியா காண்டத்து இறுதியில் பரதன் காட்டிடை வந்து இராமனை வேண்டும்போது, தான் அரசாள வர முடியாமைக்குப் பல காரணங்கள் காட்டுகின்றான். அவற்றுள் முக்கியமானது பரதன் பிறந்ததால் அவனே அந்த அயோத்தி அரசுக்கு உரிமை ஆனவன் என்பதே! மேலும், தன் வாக்கினால் முன்னமே அதைப் பரதனுக்கு உரிமையாக்கி விட்டான் என்றும் கூறுகின்றான்.

‘வரனில் உந்தைசொல் மரபி னால்உடைத்
தரணி நின்னதென்று இயைந்த தன்மையால்
உரனில் நீபிறந்து உரிமை ஆதலால்
அரசு நின்னதே; ஆள்க,’ என்னவே. (திருவடி. 111)



இவ்வாறு பரதன் பிறந்தமையின் அயோத்தி அரசு அவனுக்கே உரிமையாயிற்று என்பதை வெட்ட வெளிச்சமாக இராமன் வாக்காகவே கம்பர் காட்டிவிட்டார். இவற்றாலெல்லாம் நாம் அறிவது ஒன்றேதான். அதுதான் தூயளாகிய கைகேயி தன் கணவன் பழி ஏற்காது என்றென்றும் வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வள்ளலாய் வாழ வேண்டும் என்பதற்காக, என்றென்றும் தானே முன்னின்று பழியேற்றுத் தன் வாழ்வையும் வளத்தையும் கொண்ட கணவனையும் இழந்து, மற்றவரோடு மாறுபட்டு வாழ்ந்தாள் என்பதுதான். அத்தகைய நல்லவளை உலகம் உண்மை உணர்ந்தும் பழிக்குமாயின், அது அறத்தைப் பழிப்பதேயாகுமன்றோ? தான் பழியேற்றுக் கணவனையும் குடியையும் மரபையும் காத்த அக்கற்புச் செல்வியின் புகழ் ‘வாழ்க’ என்று வாழ்த்தி மேலே செல்கின்றேன்.

தன்மேல் பழியேற்ற கற்பு நல்லாளைக் கண்ட நாம், தன் பழியினைத் தீர்த்துக்கொண்ட மற்றொரு செல்வியையும் இராமாயணத்தில் இன்று காணப் போகிறோம். தன் கணவனைக் கொன்றவன் உடன் பிறந்தவனேயாயினும், அவனையும் ‘விடுதலாகாது, பழிதீர்த்தேயாகவேண்டும் என்று உளத்தில் உறுதி பூண்டு, காலமும் இடனும் நோக்கிக் காத்திருந்து, கொண்டதை முடித்துப் பழிதீர்த்த காரிகை யார்? வேறு யாராக இருக்கக் கூடும்? சூர்ப்பணகைதான். அவள் யாரை எவ்வாறு பழி தீர்த்தாள்? பார்ப்போம்:

சூர்ப்பணகை இராவணன் உடன் பிறந்தவள். அவளாலேயே இராமயணத்தின் பிற்பகுதி நடந்தது

என்பர். அவள் காட்டில் இராம இலக்குவர்களைக் கண்டு, சீதையைப் பற்றி இராவணனிடம் கூறியிராவிட்டால், இராம இராவண யுத்தமே நேரிட்டிராதன்றோ? அவள் ஏன் அப்படிச் செய்தாள்? இராவணன் மேல் இருக்கும் அன்பினாலா, அவனிடம் சீதையைச் சேர்க்க நினைத்தாள்? இல்லை. சிலர் நினைப்பது போன்று இராமன் தன்னை மணக்கத் தடையாயிருந்தவள் சீதை ஆதலின், அவளை இராவணன் மூலம் பிரிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டாளா? அதுவும் இல்லை. தான் மூக்கறுபட்டதால் நேர்ந்த அவமானம் தாளாது அவர்கள் மேல் பழி வாங்கும் நோக்கத்தோடு இக்கொடுமை செய்தாளா? இல்லை. பின்பு ஏன் இந்தக்கொடுமை நினைத்தாள் அவள்? கம்பர் அதற்குக் காரணம் காட்டுகிறார். இராவணவன் அவள் உடன் பிறந்தவன்தான் என்றாலும், அறிந்தோ அறியாமலோ அவன் தன் மைத்துனனை—சூர்ப்பணகையின் கணவனைக் கொலை செய்துவிட்டான். அவள் கணவனாகிய 'வித்யுஜ்ஜிஹ்வன்' என்பவனைத் திக்கு விஜய காலத்தில்—காலகேயரை வெற்றிகொண்ட காலத்தில்—இராவணன் கொன்றுவிட்டான். தன் கணவன் இறந்ததை அறிந்தாள் சூர்ப்பணகை. இராவணன் எவ்வளவோ மன்னிப்புக் கேட்டிருப்பான் அவளிடத்தில். என்றாலும், மனம் அமைதி பெறவில்லை அவளுக்கு. தன் கணவனைக் கொன்று தன் வாழ்வைக்கெடுத்த தமையனை அவன் குலத்தோடு அழிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டாள். ஆனால், அது அவ்வளவு எளியதன்று. பெண்ணாகிய ஒருத்தியால் என்ன செய்ய முடியும்? எனவே, அதற்கெனக் காலம் பார்த்திருந்தாள்.



பாரதயுத்தத்திலே உடன் பிறந்தவர் அனைவரையும் இழந்த சகுனி, துரியோதனனைக் குடியோடு கொல்லக் காலம் பார்த்திருந்து, பின்பு அவனுடன் அவனுக்கு வேண்டியவனாகவே இருந்து, அவனுக்கு நல்லன போன்று அல்லாதன பலவற்றைச் சொல்லி, பாண்டவரைப் பகைக்க வைத்துப் பாரதப் போரையும் உண்டாக்கி, அனைவரையும் மடியவைத்தான் என்பதை அறிகிறோமன்றோ? ஆம்! அதே நிலையிலேதான் இங்கும் சூர்ப்பணகை காலம் பார்த்திருந்தாள். அவளை இராமாயணச் 'சகுனி' என்று கூடச்சொல்லலாம். அவள் பார்த்திருந்த காலமும் வந்தது.

இராம இலக்குவர்களைப்பற்றி அவள் நன்கு அறிந்திருந்தாள்; தாடகையின் இறப்பு நாளிலிருந்து அவ்வீரர்கள் வில்லாற்றலைக் கேட்டறிந்தாள். அவளோடு வாழ்ந்த மாரீசன் அவர்களைப் பற்றிப் பலவாறு சொல்லியிருப்பான். அவர்கள் காட்டுக்கு வந்ததையும் கேட்டிருப்பாள் அவள். அவர்கள் இராவணனை அழிக்க வல்லவர்கள் என்பதை அறிந்திருந்தாள். எனவே, அவர்களைக் கண்டு தன் கருத்தை நிறைவேற்றலாம் எனக் காட்டுக்கு வந்திருப்பாள். அங்கு இராமனைக் கண்டு கருத்தழிந்தாள் என்கின்றனர். அவள் உண்மையில் அவ்வாறு இராமனை விரும்பினாளா, அன்றி அதை ஒருகாரணமாக வைத்து இருவருக்கும் போர் மூட்ட நினைத்தாளா என்று திட்டமாகச் சொல்ல முடியாது. இவ்வாறு கண்டவர்மேல் காதல் கொண்டு கருத்தழியும் ஒரு பெண்ணாகச் சூர்ப்பணகை இருந்திருப்பாளானால், அவள் தன் இறந்த கணவனைப்பற்றிக் கவலைப்பட்டிருக்கவே மாட்டாள்;

அவனைக் கொன்ற இராவணன்மேல் பழி தீர்க்கவும் நினைத்திருக்க மாட்டாள். ஒருவேளை அதுவரை நினைத்திருந்தாளாயினும், பிறகாவது அந்த எண்ணத்தை விட்டிருக்க வேண்டும். ஆனால், கடைசி வரையில் அவள் தன் பழி தீர்க்க நினைத்த எண்ணத்தை விடவில்லை என்பது தெரிகிறது. எனவே, அவள் இராமன்மேல் காதல் உள்ளது போலக் காட்டியதெல்லாம் வெம்போருக்கு வித்தாகுமே யன்றி வேறன்று.

இவ்வாறு சூர்ப்பணகை இராமனை அணுகுங்கால் அவள் உள்ளம் எப்படி இருந்தது என்பதைக் கம்பர் காட்டுகின்றார். அவள் நினைத்தது யாது?

"நீலமா மணிமுடி நிருதர் வேந்தனை
மூலநா சம்பெற முடிக்கும் மொய்ம்பினள்
மேலைநாள் உயிரொடும் பிறந்து தான்விளை
காலம்ஓர்ந்து உடன்உறை கடிய நோயனாள்."

(சூர்ப். சூழ். 8)

இப்பாட்டில் அவள் நினைவும் செயலும் நன்கு வெளியாகின்றன. எப்படியும் இராவணனை மூல நாசம் பெறச் செய்யவேண்டுமென்று, அவனொடு பிறந்து வாழ்ந்து காலம் நோக்கி, 'உடன் பிறந்தே கொல்லும் வியாதி'யாய் இருந்தாள். ஆம்! அவள் கருதியதை முடித்துப் பழி தீர்த்துக்கொண்டதைப் பாரறியுமன்றோ?

அவள் உள்ள நிலையினைக் கம்பர் அங்கங்கே காட்டிக்கொண்டேதான் செல்லுகின்றார். அவளும் அவள் போன்றவர்களும் இராவணன் பக்கத்தில் இருந்துகொண்டு தாங்கள் கருதியவாறே முடிக்க இருக்கின்றார்கள் என்ற உண்மையைப் பின்னர் விபீடணன் வாக்கிலேயும், கும்பகர்ணன் வாக்கிலே



யும் கம்பர் வைத்துக்காட்டத் தயங்கவில்லை. அறிவு காட்டி நன்மை தீமைகளை விளக்கி உரைத்து இராவணனைத் திருத்துவார் இல்லை. உள்ளார் அவனை முடிக்கவே முன்னிற்கின்றார் என்ற உண்மையைக் கம்பர்,

'கடிக்கும்வல் லரவும் கேட்கும் மந்திரம்! களிக்கின் றோயை
அடுக்கும்ஈ தடாதுஎன்று ஆன்ற ஏதுவோடு அறிவு காட்டி
இடிக்குநர் இல்லை; உள்ளார் எண்ணியது எண்ணி உன்னை
முடிக்குநர் என்ற போது முடிவன்றி முடிவ துண்டோ?'

என்று எடுத்துக் காட்டுகின்றார். இது சூர்ப்பணகை போன்றோரைத்தான் குறிக்கிறது என்பதில் வியப்பொன்றும் இல்லையன்றோ? மற்றும், அவள் இராவணனுடன் சீதையைப் பற்றிப் பேசும்போது இரட்டுற மொழிதலால் தன் கருத்தைப் பிறர் புரிந்து கொள்ளா வண்ணம் பேசுவதும் உணரத்தக்க தன்றோ? 'மாகத்தோள் வீரபெற்றால் எங்ஙனம் வைத்து வாழ்தி?' என்று, 'எப்படி வாழ்வாய்; வாழாது வீழத்தான் போகின்றாய்!' என்று தன் பழி முடிக்கும் காலத்தையன்றோ அவள் குறிக்கின்றாள்? 'அந்தரம் பார்க்கின் நன்மை அவர்க்கிலை உனக்கே ஐய!' என்ற தொடரிலும், 'முடிவில் பார்ப்பின் நன்மை அவர்களுக்கு அன்றி, உனக்கு இல்லை. உனக்கு முடிவே இறுதிதான்,' என்ற உண்மையை அவள் உள்ளம் புலப்படுத்திவிடுவதை அறியாதார் யார்?

இனி அவள் உளத்தின் கொடுமையை—பழி தீர்த்த பான்மையை—விபீடணன் அறிந்து வைத்திருப்பதை உணர்கின்றோம். இராவணன் இராமனது அம்பு பட்டுப் போர்க்களத்தில் வீழ்ந்து கிடக்கிறான். விபீடணன் அவன்மேல் வீழ்ந்து புலம்புகின்

ருன். அவன் வாக்கில் சூர்ப்பணகையின் வஞ்சகச் செயல் வெளிப்படுகின்றது. 'யாராலும் கொல்ல முடியாத மைத்துனனைக் கொன்ற காரணத்தால், அன்றே உன்னைப் பழிதீர்த்துக்கொள்வதாக உதட்டைக் கடித்துக் காலம் பார்த்திருந்த உன் உடன் பிறந்தவள் பழி தீர்ந்து மகிழ்கின்ருளா?' என்று கேட்கின்ருன் விபீடணன்.

'கொல்லாத மைத்துனனைக் கொன்ருய்என்
றதுகுறித்துக் கொடுமை சூழ்ந்து
பல்லாலே இதழ்அதுக்கும் கொடும்பாவி
நெடும்பாரப் பழிதீர்ந் தாளோ!
நல்லாரும் தீயாரும் நரகத்தார்
துறக்கத்தார் நம்பி நம்மோடு
எல்லாரும் பகைஞரே; யார்முகத்தே
விழிக்கின்ருய்? எளியை ஆனுய்!'
(இரா. வதை, 227)

என்ற கம்பர் பாட்டு இந்த உண்மையை எடுத்துக் காட்டுகின்றதன்ருே!

உண்மை இதுதான். இன்றேல், இராவணன் இறந்த பின் அனைவரும் அழுங்காலத்து அவள் உடன் இருப்பாளே! மண்டோதரி அழுவதைக் கேட்கின்ருேம். மாற்ருரோடு கலந்த விபீடணன் அழுவதையும் கேட்கின்ருேம். மற்றப் பெண்களெல்லாம் அழுது புலம்புகின்ருர்கள். ஆனுல், அவள் பேச்சைக்கூடக் காணுேமே! தன் அண்ணனுக்காக எவ்வளவு பாடு பட்டதாகக் காட்டிக்கொண்டாள்! அவன் மறைந்த பின் ஊராருக்காக ஒப்புக்காகவாவது அழ வேண்டாவா! இல்லை! அவள் அழவில்லை. அதற்கு நேர்மாருக, தான் கொண்ட எண்ணம் முற்றுப்பெற்றுவிட்டது என மகிழ்ந்திருப்பாள்;



பகைவனைக்கொண்டு பழி தீர்த்துக்கொண்ட மகிழ்ச்சியில் எங்காவது தனிமையில் இருந்திருப்பாள். எனவே, அவள் இராமாயணத்தே பழி தீர்த்துக்கொண்ட காரிகையாகக் காட்சியளிக்கின்ருள்!

இவ்வாறு இராமாயணத்தில் வரும் இரு பெண்களின் 'உண்மை நிலையை உணர்ந்துகொள்ளாத பலர், இவ்விருவரைப் பற்றியும் பலப்பலவாறு பேசுகின்றனர். ஆழ்ந்து நோக்கின், உண்மை புலனுகும். இன்னும் இதுபோன்று பலப்பல சான்றுகள் ஒவ்வொன்றிற்கும் காட்டிக்கொண்டே செல்லலாம். எனினும், கால எல்லைக்குக் கட்டுப்பட்ட நாம் இவ்வளவுடன் அமைய வேண்டுவதே! ஆகவே, நான் இந்த அளவோடு பழி ஏற்றும் பழி தீர்த்தும் நமக்கு நல்ல ஒரு காவியத்தை அளித்த இந்த மகளிரைப் பற்றிக் கூறுவதை நிறுத்திக்கொள்ளுகிறேன்.

வணக்கம்!

## படித்தவை

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | வானநெடுந்தெருவில் | ... | 1 |
| 2. | யாழ்ப்பாணத்தில் முதல் நாள் | ... | 17 |
| 3. | வாழ்வும் வளமும் | ... | 28 |
| 4. | மணிபல்லவம் | ... | 43 |
| 5. | மங்கையர் இருவர் | ... | 67 |

—○—